# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 326 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 01, திங்கட்கிழமை 17.10.2016


# அதிகாரப் பகிர்வின் விவரங்கள் விரைவில்

## கூட்டமைப்பு தெரிவிப்பு



வவுனியா, ஒக்ரோபர் 17

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு வேண்டும் என்றே, அரசமைப்பு உருவாக்கத்துக்காக நியமிக்கப்பட்ட உப குழுக்களின் பரிந்துரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவை இன்னமும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. விரைவில் அவை பகிரங்கப்படுத்தப்படும். தமிழ் மக்களது வேணவாக்களை நிறைவேற்றக்கூடிய வகையில் புதிய அரசமைப்பு உருவாவது - சாத்தியமாகாது என்று அறிந்த மறுநாள் முதல் அரசமைப்புச் சபையில் அங்கம் வகிப்பதிலிருந்து விலகுவோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் பொது அமைப்புக்களுடன் சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடல் வவுனியா குருமன்காட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் நேற்று மு.ப 10.30 மணிக்கு வடக்கு மாகாண சுகாதார >> 21ஆம் பக்கம்

## விபத்தில் சிக்கி படுகாயமடைந்த பிரபல ஆசிரியர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணத்தில் ஜீ.சீ.ஈ. உயர் தர வணிகக் கல்வி கற்பிக்கும் பிரபல ஆசிரியரான பெனடிற் பசில் ஜெனதாஸ் (வயது - 50) விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பயனளிக்காது நேற்று அவர் உயிரிழந்தார். அவருடன் பயணித்துப் படுகாயமடைந்த அவரது மனைவி இன்னும் ஆபத்தான நிலையில் சிகிச்சை >> 24ஆம் பக்கம்

## சொந்த வீட்டை ஈ.பி.டி.பியிடமிருந்து மீட்கமுடியாத நபர் ஏக்கத்திலேயே சாவு

### மானிப்பாயில் அடாத்தாக டக்ளஸ் பிடித்துவைத்திருப்பதால் அவலம்

யாழ்ப்பாணம், ஒக். 17

மானிப்பாயில் உள்ள ஈ.பி.டி.பியினரின் அலுவலகம் அமைந்துள்ள வீட்டின் உரிமையாளர் உயிரிழந்தார். அவரது இறப்புக் கிரியைகளையாவது சொந்த வீட்டில் நடத்த அனுமதிக்குமாறு அவரின் மனைவி குணமணி கோரிக்கை விடுத்தார். >> 06ஆம் பக்கம்

## ஆயுதம் தாங்கிய பொலிஸார் யாழ்.நகரில் நேற்றிரவு ரோந்து

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். நகரில் இரு குழுக்களுக்கு இடையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து, நகரில் நேற்று இரவு ஆயுதம் தாங்கிய பொலிஸார் பாதுகாப்புக்கு குவிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு சனிக்கிழமை, நகரில் இரு குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டது. மோதலில் >> 24ஆம் பக்கம்

## விக்கியின் ஊர்வலமே குழப்பத்தின் அடிக்கல்

### கிழக்கு அமைச்சர் துரைராஜசிங்கம் கடுமை

யாழ்ப்பாணம், ஒக். 17

வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஊர்வலமே நாட்டின் அமைதியைக் குழப்புவதற்கு வித்திட்டது. இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய, கால்நடை அமைச்சர் கி.துரைராஜசிங்கம் குற்றஞ்சுமத்தினார்.

கமத் >> 04ஆம் பக்கம்

## தெற்காசியாவில் இலங்கைக்கு முக்கிய பங்கு

### மோடி தெரிவிப்பு

புதுடில்லி, ஒக். 17

தெற்காசியப் பிராந்தியத்தில் இலங்கை தற்போது முக்கியமான பங்கை வகித்து வருகின்றது. இலங்கையுடன் உள்ள ஆழமான உறவின் காரணமாகவே விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு பிரிக்ஸ் >> 21ஆம் பக்கம்

## ஊழலை விசாரிக்க தனியான நீதிமன்றம்

கொழும்பு, ஒக். 17

ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அரசு தனி நீதிமன்றத்தை உடனடியாக நிறுவவேண்டும் என்று ஜே.வி.பி. நேற்று வலியுறுத்தியது. ஜனாதிபதியின் அறிவிப்பை தமக்கான பாதுகாப்புக் கவசமாக பயன்படுத்திக் கொண்டு, சுயாதீன நிறுவனங்களை பலவீனப்படுத்தும் >> 21ஆம் பக்கம்

## நுரைச் சோலையில் நேற்று வெடிப்பு; மின் தடைப்படலாம்

கொழும்பு, ஒக். 17

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் நேற்றுப் பெரும் வெடிப்பு நிகழ்ந்துள்ளதால் மின் தடை ஏற்படக்கூடும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

அநுராதபுரம் >> 23ஆம் பக்கம்

## சிசு இறப்பு வீதம் குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். மாவட்டத்தில் கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் 34 சிசுக்கள் இறந்துள்ளன. இது மற்றைய மாவட்டங்களைவிட அதிகம்.

வடமாகாணத்தில் கடந்த வருடத்தில் 166 சிசுக்கள் இறந்துள்ளன. இதில் யாழ். மாவட்டத்தில் 103, மன்னார் மாவட்டத்தில் 16, வவுனியா மாவட்டத்தில் >> 21ஆம் பக்கம்



## மலையகத் தமிழருக்கும் தனி அங்கீகாரம் தேவை

### ஐ.நா. அதிகாரியிடம் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 17

இந்திய வம்சாவளியினரான மலையக மக்களுக்கு இலங்கை அரசமைப்பில் மலையகத் தமிழர்கள் என்ற இன ரீதியான தனித்துவ அங்கீகாரம் தேவை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் சிறுபான்மையின உரிமைகள் தொடர்பான பிரதிநிதியிடம் >> 08ஆம் பக்கம்

## முச்சந்தி முரளி



அப்ப இனி... செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் கணக்குத்தான் போல....!

## இறைமைக்கு அச்சுறுத்தல் விடுப்பதும் இனி பயங்கரவாதம்

### வருகிற புதிய தடுப்புச் சட்டத்தில் கூறப்படும் வரைவிலக்கணம் என்ன?

கொழும்பு, ஒக். 17

இலங்கையினது அல்லது நாடு ஒன்றின் இறைமை, பாதுகாப்பு, ஆள்புல ஒருமைப்பாடு, ஐக்கியத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவது, அதன் மீது தாக்குதலை ஏற்படுத்துவது, அதனை மாற்றுவது அல்லது அதற்கு கடும் பாதிப்பை ஏற்படுத்துவது பயங்கரவாதமாகும் என்று வரவுள்ள >> 21ஆம் பக்கம்

## அரசியல் தீர்வுக்கான கடைசி பஸ்ஸையும் விட்டுவிடுவோமா?

### அச்சப்படும் டிலான் பெரேரா



கொழும்பு, ஒக். 17

அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ளும் பயணத்துக்கான இறுதி பஸ் ஏறுவதற்கு கிடைத்திருக்கின்ற வாய்ப்பை இழந்து விடுவோமா என்ற அச்சம் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்தப் பஸ்ஸைத் தவறவிட்டால் எம்மால் பயணத்தை மேற்கொள்ள முடியாது போய்விடும். இவ்வாறு சுதந்திரக் >> 23ஆம் பக்கம்

## போர்க்குற்ற விசாரணைக்கு மைத்திரி மீண்டும் எதிர்ப்பு



கொழும்பு, ஒக். 17

இறுதிப் போரில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்குத் தான் ஆதரவளிக்கமாட்டேன் என மீண்டும் உறுதிபடத் தெரிவித்திருக்கிறார் மைத்திரி பால. கடந்த செவ்வாய்க் [illegible] சரவைக் கூட்டத்தின் போதே [illegible] ான கருத்தை இந்த விடயத்தில் தெரிவித்தார் எனவும் அறிய >> 21ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகர அபிவிருத்தித் திட்டத்தில் வீதிகள் சீரமைப்பு விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 17
யாழ். நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழான, பருத்தித்துறை கொடிகாமம், யாழ்ப்பாணம் - பொன்னாலை ஆகிய வீதிகளின் சீரமைப்பு நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன என்று அறிய முடிந்தது. இரண்டு வீதிகளின் சீரமைப்புப் பணிகளின் போது சுவீகரிக்கப்படும் மக்களின் காணிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

12.5 கிலோ மீற்றர் நீளமான பருத்தித்துறை கொடிகாமம் வீதி ஆயிரத்து 300 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்படவுள்ளது. இந்த வீதி அகலிப்புச் செய்யப்பட்டு காப்பெற் வீதியாக அமைக்கப்படவுள்ளது. அகலிப்பு பணியின்போது சுவீகரிக்கப்படவுள்ள காணிகள் அளவீடு செய்யப்பட்டு அதனை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

12.9 கிலோ மீற்றர் நீளமான யாழ்ப்பாணம் - பொன்னாலை கரையோர வீதி ஆயிரத்து 600 மில்லியன் ரூபா செலவில் அகலிக்கப்பட்டு காப்பெற் வீதியாகச் சீரமைக்கப்படவுள்ளது. வீதிச் சீரமைப்புக்கான சகல தரப்புக்களுடனான கலந்துரையாடலும், மாவட்டச் செயலகத்தினால் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. விரைவில் அளவீட்டுப் பணிகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நகரிலுள்ள 44 குளங்கள் தொடர்பிலான மதிப்பீடு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (வ-5)



# கண்டியில் சீறும் புகை

## அச்சத்தில் பிரதேச மக்கள்

கண்டி, ஒக்.17
கண்டி - தெல்தோட்ட பிரதேசத்தில் தொடர்ந்து 10 நாள்களாக நிலத்துக்கு அடியில் இருந்து புகை கிளம்புகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

தெல்தொட்ட - போபிட்டிய பாதையில் முஸ்லிம் கொலனி எனும் இடத்திலுள்ள நீரேந்து பிரதேசம் ஒன்றிலேயே இவ்வாறு புகை கிளம்புகின்றது.

இதைப் பார்வை இடுவதற்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வரும் அதே வேளை, இது எரிமலையாக இருக்குமோ என்ற அச்சம் மக்களிடையே நிலவுகிறது

இதுவரை இது தொடர்பான எந்தவிதமான ஆய்வுகளையோ அல்லது இதற்கான காரணம் என்ன என்றோ எவரும் கண்டுபிடிக்கவில்லை என மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் வெப்பம் காரணமாக தாவரங்கள் கருகி வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# வெண் பிரம்பு தின விழிப்புணர்வுப் பேரணி



கிளிநொச்சி, ஒக். 17
பன்னாட்டு வெண்பிரம்பு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் விசேட விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டது. விழிப்புணர்வு தின நிகழ்வுகளும் இடம்பெற்றன. பேரணி நேற்று முன்தினம் காலை கிளிநொச்சி டிப்போ சந்தியில் இருந்து கிளிநொச்சி மத்திய கல்லூரி வரை இடம்பெற்றது.

வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வுகள் இடம்பெற்றன. கிளிநொச்சி டிப்போ சந்தியில் விழிப்புலனற்றோருக்கான அடிப்படை உரிமைகள் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. பின்னர் பேரணி இடம்பெற்றது. பேரணியின் பின்னர் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

மலையகத்திலும் வெண்பிரம்பு தின விழிப்புணர்வுப் பேரணிகள் இடம்பெற்றன. குறித்த பேரணியை ஹற்றன் விழிப்பு, நேத்ரா கண்பார்வை அற்றோர் பாடசாலைகள் இணைந்து முன்னெடுத்திருந்தன. ஹற்றன் பஸ் தரிப்பிடத்திலிருந்து பிரதான வீதியினூடாக புட் சிட்டி வரை பேரணி இடம்பெற்றது. (ந-21)

# ஆசிரியர் நியமனங்கள் குறித்து மேன்முறையீடு செய்யமுடியும்

## இராஜாங்க கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17
நியமனம் பெற்ற தேசிய கல்வியியல் கல்லூரி டிப்ளோமா பட்டதாரிகள் தாங்கள் வசிக்கும் மாகாணத்துக்கோ அல்லது மாவட்டத்துக்கோ நியமனங்களை மாற்றித் தருமாறு மேன்முறையீடு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் தெரித்தார்.

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கல்விபயின்ற டிப்ளோமா பட்டதாரிகள் 3 ஆயிரத்து 225 பேருக்கான நியமனங்கள் கொழும்பில் அமைந்துள்ள பிரதமரின் அலரிமாளிகை கேட்போர் கூட மண்டபத்தில் கடந்த 4ஆம் திகதி வழங்கப்பட்டன. அதில் கல்வி இராஜாங்க அமைச்சர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:
தேசிய கல்வியியல் கல்லூரி டிப்ளோமா பட்டதாரிகளின் நியமனங்கள் தாங்கள் வசிப்பிடமாகக் கொண்ட மாகாணத்தையோ அல்லது மாவட்டத்தையோ கொண்டிராத நிலை ஏற்பட்டிருந்தது. நியமனம் பெற்ற தேசிய கல்வியியல் கல்லூரிகளின் டிப்ளோமா பட்டதாரிகள் தங்கள் வசிக்கும் மாகாணத்துக்கோ அல்லது மாவட்டத்துக்கோ நியமனங்களை மாற்றித் தருமாறு கல்வி அமைச்சுக்கு முறையிட்டுள்ளனர்.

கல்வியியல் கல்லூரி டிப்ளோமா பட்டதாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க தங்கள் நியமனங்களை தங்களின் மாகாணத்துக்கோ அல்லது மாவட்டத்துக்கோ ஆசிரியர் தேவைக்கு ஏற்ப மாற்ற முடியம். தாங்கள் வசிக்கும் மாகாணங்களில் உள்ள மாகாண கல்வி திணைக்களத்தின் மாகாண கல்வி பணிப்பாளரை நாளை திங்கள் மறுநாள் செவ்வாய், ஆகிய தினங்களில் தொடர்புகொண்டு மாற்றிக் கொள்ளலாம். அல்லது கல்வி அமைச்சின் கல்வியியற் கல்லூரி ஆணையாளரை சந்திக்கலாம் - என்றார். (ந-4)

# பொலிஸ் பரிசோதகர் கைது

கொழும்பு ஒக்.17
களுத்துறை நகரில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்த பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காதல் ஜோடிகளிடம் பலவந்தமாக பணத்தை பெற்றுக் கொண்டார் என்று கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. நகர வாசிகள் வழங்கிய தகவலுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# யாழ். நகரில் அடாவடித்தனம் புரிந்த கும்பலுக்கு வலைவீச்சு

யாழ்ப்பாணம், ஒக். 17
யாழ். நகரில் நேற்று முன்தினமிரவு 5 மோட்டார் சைக்கிள்களில் வாள் , கத்திகளுடன் சுற்றி அச்சுறுத்தி சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தவர்களை நகரின் மத்தியில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனத்தின் சீ.சீ.ரி.வி கமரா மூலம் இனம் காண்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினமிரவு 9 மணியளவில் 5 மோட்டார் சைக்கிள்களில் வாள் , கத்தி சகிதம் பல சட்டவிரோத செயலில் ஈடுபட்ட கும்பல் பிரதான வீதிகளில் சுமார் 20 நிமிடங்களுக்கும் மேலாக அட்டூழியம் புரிந்தனர். அந்தக் குழுவினரை வீதிகளில் உள்ள பல வர்த்தக நிலையங்களில் உள்ள கமராவின் தொழில் நுட்ப உதவியுடன் இனம் காணும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

பொலிஸார் நேற்று வர்த்தக நிலையங்களுக்குச் சென்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன்போது தாக்குதல்தாரிகள் அல்லது மோட்டார் சைக்கிளின் இலக்கங்களை இனம்காணும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர். (அடாவடித்தனம் பற்றிய செய்தி பக்கம் 6இல்)
(வ -101)

# பேருந்தை மறித்து பணம் கொள்ளை

## யாழ். நகரில் நேற்று மாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 17
யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த பேருந்தை வாகனத்தில் சென்ற கும்பல் ஒன்று வழிமறித்துத் தாக்கி பணம் மற்றும் சிட்டைப் புத்தகத்தைக் கொள்ளையிட்டுச் சென்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை யாழ். நகரில் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்தை மறித்தே இந்தக் கொள்ளை இடம்பெற்றது.

யாழ்.நகரில் பட்டா வாகனத்தில் பயணித்த சிலர் பேருந்தைத் தாக்கிச் சேதப்படுத்தியதோடு, நடத்துநரின் கையில் இருந்த சிட்டைப் புத்தகம் மற்றும் பணத்தையும் பறித்து எடுத்துக் கொண்டு தப்பியோடினர் என்று யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணை முன்னெடுத்துள்ளனர். (வ-4,101)

# பொதுக் கட்டடங்களை சரியாகப் பயன்படுத்துக

## வடக்கு கிராமிய அமைச்சர் வேண்டுகோள்

மன்னார், ஒக். 17
பொதுத் தேவைகளுக்காகக் கட்டப்படும் கட்டடங்கள் தேவைக்கு ஏற்றவகையில் பயன்படுத்தப்படாமல் இருப்பது கவலை தரும் விடயம். இவ்வாறு வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சின்னக் கடைப் பகுதியில் சின்னக் கடை கிராம அபிவிருத்தி சங்கத்தால் அமைக்கப்பட்ட மாடிக் கட்டடம் கடந்த சனிக்கிழமை திறக்கப்பட்டது. அதில் வடக்கு மாகாண கிராமிய அமைச்சர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:
அரசால் எமக்கு வழங்கப்படும் உதவிகள் அனைத்தும் எமது வரிப் பணத்தில் இருந்தே வழங்கப்படுகிறது என்பதை நாம் உணரவேண்டும். அவையும் எமது சொத்துக்கள் என்பதை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டாலே எமது மாவட்டமும் மாகாணமும் விரைவில் முன்னேற்றம் காணும். இந்தக் கட்டடத்தை உரிய முறையில் பயனுள்ளவிதமாக பயன்படுத்துமாறு கேட்டு கொள்கின்றேன் - என்றார்.

நிகழ்வில் மன்னார் நகர சபையின் செயலாளர், சின்னக்கடை கிராம உத்தியோகத்தர், சின்னக்கடை அபிவிருத்தி உத்தியோகத்தர், மன்னார் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ந-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் – கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ் மீது தாண்டிக்குளத்தில் தாக்குதல்

## தாக்குதல்தாரியை மடக்கிப்பிடித்தனர் பயணிகள்



வவுனியா, ஒக்.17
யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றிரவு கொழும்பு நோக்கிப் புறப்பட்ட இ. போ.சபைக்குச் சொந்தமானபேருந்து மீதுதாண்டிக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தாக்குதலை மேற்கொண்டனர். எனினும் பேருந்தில் பயணித்தவர்கள் துணிச்சலாகச் செயற்பட்டதனால் தாக்குதல் மேற்கொண்டவர்களில்ஒருவர் பிடிபட்டார்.
யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று இரவு 8 மணிக்குப் புறப்பட்ட இ.போ.சபைக்குச் சொந்தமான பேருந்து 10 மணியளவில் தாண்டிக்குளத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இதன்போது எதிர் பாராத நேரம் மோட்டார் சைக்கிள்களில் வந்த மூவர் திடீரெனத்தாக்குதலை மேற்கொண்டதில் பேருந்தின் கண்ணாடிகள் நொருங்கின.
இதன்போது பேருந்தில் பயணித்த இளைஞர்கள் குதித்து தாக்குதல்தாரிகளை விரட்டிச் சென்ற சமயம், அவர்கள் சிதறி ஓடினர். அதில் ஒருவர் அருகில் இருந்த கராச் ஒன்றுக்குள் புகுந்து ஒளிய முற்பட்டவேளை பயணிகள் ஒன்றுகூடி மடக்கிப் பிடித்ததோடு, நையப்புடைத்தனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
இவ்வாறு பிடிக்கப்பட்ட இளைஞனைக் கொண்டு சென்று வவுனியாப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-101)

# அதிபருடன் முரண்பட்ட ஆசிரியருக்கு இடமாற்றம்

## பெற்றோரின் கவனவீர்ப்பை அடுத்து

யாழ்ப்பாணம், ஒக். 17
மூளாய் அமெரிக்கன் மிசன் பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவரால் மாணவர்களுடைய கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து அந்தப் பாடசாலையின் மாணவர்களுடைய பெற்றோரால் மேற்கொள்ளப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தை அடுத்து அந்த ஆசிரியர் வேறு பாடசாலைக்கு இடமாற்றப்பட்டார்.
பாடசாலை மாணவர்களுடைய கல்வி செயற்பாட்டுக்கு தடையாக உள்ள ஆசிரியரை இடமாற்றம் செய்யுமாறு தெரிவித்து கடந்த வியாழக்கிழமை மாணவர்களை பாடசாலைக்கு செல்லவிடாது தடுத்து மூளாய் அமெரிக்கன் மிசன் பாடசாலை மாணவர்களுடைய பெற்றோர் கவனவீர்ப்பு போராட்டத்தை மேற் கொண்டனர். பாடசாலைக்குள் அத்துமீறும் ஒருவர் பாடசாலையின் அதிபருடன் நாளாந்தம் சண்டையிடுவதாகவும் தெரிவித்த பெற்றோர், அந்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தினர்.
பெற்றோரின் கவனவீர்ப்புப் போராட்டத்தை அடுத்து சம்ப இடத்துக்கு வருகை தந்த வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சங்கானை கோட்டக் கல்வி அதிகாரி ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.
இந்த நிலையிலேயே அந்தப் பாடாசாலைக்கு இடையூறாக உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்ட ஆசிரியர் நேற்றயதினம் இடமாற்றப்பட்டு, அவரின் இடத்துக்குப் புதிய ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இது தொடர்பாக பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, 'ஆசிரியர் ஒருவர் புதிதாக நிய மிக்கப்பட்டார். அதே வேளை பெற்றோர்களால் குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர் இடமாற்றம் பெற்றுள் ளார். மேலும் பாடசாலைக்குத் தேவையாக உள்ள ஆசிரியர் விரைவில் நியமிக்கப்பட உள்ளதாக வலயக் கல்வி அலுவலகம் தெரிவித்தது.பாடசாலையின் பின்புறமாக உள்ள பாடசாலை முதல்வர் அலுவலகத்தை பாடசாலைக்கு முன்பாக மாற்றுவதற்கான நடவடிக்கையையும் வலயம் மேற் கொண்டுள்ளது- என்றார். (வ-21)

# விபத்தில் படுகாயமடைந்த குடும்பத்தலைவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 17
விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதானா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பத்தலைவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
கடந்து 8ஆம் திகதி யாழ்ப்பாணம் தபாலகத்தில் கடமையை முடித்துக்கொண்டு கச்சேரிப் பகுதியில் சென்று கொண்டிருந்த வேளை சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த அவர், யாழ். போதான வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலை யில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் - கச்சேரிப் பகுதியைச் சேர்ந்த சிவகுமாரன் தர்மேந்திரன் (வயது - 50) என்பவரே உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நவசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற் கொண்டார். (வ-ரி7)

# ஆங்கில தின விழா

சாவகச்சேரி, ஒக்.17
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆங்கில தின விழா இன்று திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
கல்லூரி அதிபர் ந.ஜெயகுமாரன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினராக வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி திருக்குமரனும், கௌரவ விருந்தினராக ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ்.சிறிதரனும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ- 9)


முன்பள்ளி பொறுப்பாசிரியர் தேவை
சிரேஷ்ட / ஓய்வு பெற்ற ஆசிரியர் விரும்பத்தக்கது. 077 3867458

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
16.10.2016 | 2044 | ஊதா
12 37 38 39
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,691,940 /-

Galaxy Star
வெற்றி வாரம் 101 / திகதி 16.10.2016
04 09 12 45 53
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 4,778,960/-


## பிற்போடப்பட்டுள்ளது



**அமரர் நாகலிங்கம் செல்வராசா**

அவர்களின் 20.10. 2016 மற்றும் 22.10.2016 திகதிகளில் நடைபெற விருந்த அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம். தகவல் பின்னர் அறிவிக்கப்படும்

**சைவப்பாடசாலை வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.** குடும்பத்தினர்.


உடனடி வேலைவாய்ப்பு
*Online Business Developers
*Website Developers
*Graphic Designers
*Marketing Staff
தகுதியானவர்கள் சுயமாக விண்ணப்பத்தை தயாரித்து நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கவும்.
North Lanka IIT
Top Floor, People's Bank Building,
Stanley Road, Jaffna


## பாராட்டி வாழ்த்துகின்றோம்


2016 ஆம் ஆண்டின் தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையின் சித்தி



சிறீதரன் வைஸ்ணவன்
(175 புள்ளிகள்)
(மானிப்பாய் மகளிர் கல்லூரி)
(பாடசாலை மட்டத்தில் முதல்நிலை)



சிறீதரன் ஶ்ரீவைஸ்ணவி
(166 புள்ளிகள்
(மானிப்பாய் மகளிர் கல்லூரி)



சுரேஸ்குமார் சுருதி
(167 புள்ளிகள்)
(யாழ் இந்து ஆரம்ப பாடசாலை)

Best Wishes

பரீட்சையில் சித்திபெற்ற அன்புச்செல்வங்களை மனதாரப் பாராட்டுவதுடன் மேலும் பல உயர்வுகளை பெறவும் அத்துடன் இவர்களுக்கு கல்வி புகட்டிய அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரையும் வாழ்த்துகின்றோம்.

பிளாக்றோட், சங்கானை.

வாழ்த்துவோர் - சித்தப்பா, மாமா } கிருபா குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி ஆசிரியர் கலாசாலை சொந்த இடத்துக்கு மீளவேண்டும்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17
வலிவடக்கு உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் பலாலி ஆசிரியர் கலாசாலை அமைந்துள்ளதால் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. அவை இயங்க வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்- தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் இராஜாங்க அமைச்சர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

காங்கேசன்துறை தொகுதியிலே தேசிய பாடசாலை இல்லை. போருக்கு முன்னர் வடமாகாணத்தின் கல்வி நிலை மேம்பட்டிருந்தது. போரின் பின்னர் இன்று வடக்கின் கல்வியானது வீழ்ச்சியடைந்துள்ளது. இந்தப் பாடசாலையைப் போன்று எத்தனையோ பாடசாலைகள் வடக்கு மாகாணத்திலே பாதிக்கப்பட்டுள்ளன.

16 கற்கை நெறிகளைக் கொண்ட எமது ஆசிரியர் கலாசாலையும் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ளதால் இன்றும் இயங்காதுள்ளது. அவை இயக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் பாதுகாப்பு அமைச்சுக்கு கூடுதலான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. புதிய அரசு 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கல்வி மற்றும் சுகாதாரத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும் - என்றார்.

(ற-21)

பராமரிப்பாளர் தேவை

பலாலி வீதி . திருநெல்வேலியில் இயங்கிவரும்
கருணாலயம் அன்னை கிருஷ்ணாபாய் மகளிர்
இல்லத்திற்கு 30 தொடக்கம் 45 வயதிற்குட்பட்ட
இல்லத்தில் தங்கியிருந்து பொறுப்பாகப் பிள்ளைகளைப்
பராமரிக்கக் கூடிய பெண் பராமரிப்பாளர் உடன் தேவை.

021 222 8490

காணி விற்பனைக்கு

திருநாவற்குளம், வவுனியாவில்
இரண்டு பரப்புக் காணியும்
வீடும் விற்பனைக்கு
உண்டு.
(J 5449)
(14,17,18)

தொடர்பு: 077 021 8422(கிரி)
077 107 4530

VACANCY FOR AN ASSISTANT PHARMACIST
AGARAM PHARMACY - KOPAY JUNCTION

WE ARE LOOKING FOR AN ASSISTANT PHARMACIST
Educational Qualification:- G.C.E A/L
Professional Expierience :- Minimum of 3 Years Pharmacy Expierience.
Language Skill :- Fluent in Tamil & English.
Other Qualifications :- Basic Computer Knowledge
Knowledge of Human Body
Knowledge of Commonly used Medicines In Sri Lanka.
Salary :- Negotiable
Closing Date :- 24.10.2016
Contact :- T.P :- 077 328 9067
Email :- pharmacyagaram@gmail.com

தரம் - 6 அனுமதி கோரல் - 2017
மானிப்பாய் இந்துக்கல்லூரி
(தேசிய பாடசாலை)

எமது கல்லூரியில் தரம் 6 இற்கான அனுமதிகள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் 17.10.2016 முதல் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் 04.11.2016 வரை
ஏற்றுக்கொள்ளப்படும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிற்கு விசேட கல்வி ஊக்குவிப்பு வழங்கப்படும்.

விடுதியில் தங்கி கற்க விரும்பும் மாணவர்கள் விடுதிக்குரிய விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- அதிபர் -

# பனை சார் வாழ்வாதாரத் திட்டத்தில் பனை அபிவிருத்திச் சபையின் பங்கு

பனை அபிவிருத்திச் சபையானது பனையை நம்பி வாழும் சமூகத்தின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு மூலதன நிதி மூலமும், அமைச்சின் வாழ்வாதார திட்டத்துக்கான நிதி மூலமும் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதுடன் தொடர் நடவடிக்கையாக செய்தும் வருகின்றது.

முன்னெடுத்த திட்டங்களானது:

2010ஆம் ஆண்டு கோண்டாவில், சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பனை வெல்லத் தொழிற்சாலை உபகரணங்களுடன் வழங்கப்பட்டது (ஒவ்வொன்றும் 1.50 மில்லியன் பெறுமதியானது).

சிறுசுவடுகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு 535 பனங் கைப்பணி உற்பத்தியாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். பனங் கைப்பணி பயிற்சியாளர்கள் 648 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 5 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பனை வெல்ல உற்பத்திக்கென 0.75 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் வழங்கியது.

பனங் கைப்பணி பயிற்சியாளர்கள் ஆயிரத்து 34 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு 500 பனந்தொழில் வல்லுநர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான சீவல் உபகரணத் தொகுதி வழங்கப்பட்டது.

பனை ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

பனங் கைப்பணி பயிற்சியாளர்கள் 1,511 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு காகில்ஸ் நிறுவனத்தின் மூலம் 4.00 மில்லியன் பெறுமதியான பனை வெல்ல இயந்திரத் தொகுதி வழங்கப்பட்டது.

2014ம் ஆண்டு கைத்தொழில் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செல்வபுரம் (முல்லைத்தீவு) உற்பத்தி நிலையம் மற்றும் பாண்டியன் குளம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு பெறுமதியான உற்பத்தி உபகரணங்கள் வழங்கப்பட்டது. (4.60 மில்லியன் ரூபா).

பச்சிலைப்பள்ளி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 3.17 மில்லியன் பெறுமதியான பனந்தும்பு உற்பத்தி நிலையம், இயந்திரத் தொகுதி மற்றும் மினி லொறி வாகனம் வழங்கியமை.

தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் அமைப்புக்களூடாக பனங்களி உற்பத்தியாளர்களுக்கு ரூபா 3.00 மில்லியன் பெறுமதியான பனங்களி உற்பத்தி உபகரணங்கள் வழங்கியமை.

தெரிவுசெய்யப்பட்ட 200 பேருக்கு 3.50 மில்லியன் பெறுமதியான பனங்கிழங்கு உற்பத்திக்கான உபகரணம் மற்றும் பணம் வழங்கப்பட்டது.




பனை சார் உற்பத்தி குடும்பப் பெண்களின் முன்னேற்றத்துக்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமரபாகு, கிராஞ்சி, செல்வபுரம், பத்தினிபுரம், மைலம்பாவெளி, நாவிதன்வெளி ஆகிய கைப்பணிக் கிராமங்கள் அமைக்கப்பட்டது.

பனங் கைப்பணி பயிற்சியாளர்கள் 1,314 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளன.

2015ம் ஆண்டு 8 மில்லியன் ரூபா பெறுமதியான போத்தலில் கள் அடைக்கும் இரு பொறித் தொகுதி கொத்தணி வலிகாமம் மற்றும் புதுக்குடியிருப்பில் அமைக்கப்பட்டது. 3 மில்லியன் ரூபா பெறுமதியான நான்குபனை வெல்ல உற்பத்தி பொறித் தொகுதி விசுவமடு, மானிப்பாய், தெல்லிப்பழை மற்றும் பூநகரியில் அமைக்கப்பட்டது.

பனங் கைப்பணி பயிற்சியாளர்கள் 1,355 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களின் மூலம் உதவிகள் வழங்கப்பட்டாலும், இந்த இயந்திர தொகுதிகள், உபகரணங்களை பயன்படுத்தி உச்சபட்ச பயனைப் பெற்றால் மட்டுமே பனை அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களின் நோக்கம் நிறைவேறும்.

*எம்.பி.லோகநாதன்.*

ஊடக அனுசரணை: உதயன்

வனிக்கா சேஜிக்கல்ஸ்

தரமான உடல் ஆரோக்கிய உபகரணங்கள் எம்மிடம் உள்ளன.
உங்கள் தேவைகளுக்கு எம்மை அணுகுங்கள்.

| | |
|---|---|
| Wheel Chair | 9,800.00 |
| Commode Wheel Chair | 14,900.00 |
| Walker Single & Double bar | 3975.00 |
| Elbow Crutches | 1,240.00 |

மருந்தகங்களுக்கும் மருத்துவ நிலையங்களுக்கும் விசேட கழிவு உண்டு.

வனிக்கா சேஜிக்கல்ஸ்
203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 0077 Hotline: 077 442 2367
E- mail: vanisurgi@sltnet.lk

வாடகைக்குண்டு

ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணத்தில்
3 மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு.
அரச அரசசார்பற்ற
நிறுவனங்களுக்கு உகந்தது.
076 575 5267

வேலையாள்கள் தேவை

கொழும்பில் கேபிள் டி.வி
மற்றும் டிஸ் அன்ரெனா
விற்பனை செய்யும்
நிறுவனத்திற்கு விற்பனை
யாளர்கள் மற்றும் டிஸ்
அன்ரெனா பொருத்துநர்
எலக்ட்ரோனிக்ஸ் டெக்னீசியர்,
எக்கவுண்ட் கிளார்க்
உடன்தேவை. உணவு,
தங்குமிடம் இலவசம் சம்பளம்
பேசிக் கொள்ளலாம்.
உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: T.Kumar
077 771 0785
SATS - TECH - ENGINEERS
A51/102, Wolfendhal Street,
Colombo - 13
(J 5417)
(14,17,18)

# மரக்கடத்தல் முறைப்பாடுகளே பளைப் பிரதேசத்தில் அதிகமாம்

யாழ்ப்பாணம், ஒக். 17
கிளிநொச்சி, பளை பொலிஸ் நிலையத்தில் கடந்த மாதம் பதிவு செய்யப்பட்ட 33 முறைப்பாடுகளில் மரக் கடத்தல் தொடர்பான முறைப்பாடுகளே அதிகம் என்று பளைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆனந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த மாதம் பளைப் பொலிஸ் நிலையத்தில் சிறு குற்றத் தடுப்புப் பிரிவில் 33 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் அதிகளவில் மரக் கடத்தல் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டு பனைமரக் கடத்தல் தொடர்பானதாகவும், ஏனையவை பளை பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பிரதேசங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மரங்களை கடத்திச் சென்ற சந்தர்ப்பத்தில் பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்ட வழக்குகளாகும். கடந்த மாதம் பதிவு செய்யப் பட்ட 33 வழக்குகளில் கஞ்சா கடத்தியமை, கோடா பயன்படுத்தியமை, சட்டவிரோதமாக மண் கொண்டு சென்றமை, களவு தொடர்பானவை, பொருள்களுக்கு இழப்பு ஏற்படுத்தியமை, நம்பிக்கை மோசடி, போதையில் சண்டையில் ஈடுபட்டமை, சிறிய குற்றம் தொடர்பானவை, கசிப்பு வைத்திருந்தமை, மாடு கடத்தல் ஆகிய வழக்குகளும் அடங்கும் - என்றார்.

(ற-21,ரி3)

## விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் மட்டக்களப்பு மண்டூர் கமநல சேவைகள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் நடந்த ஊர்வலத்தைப் போன்று, தென்னிலங்கையில் 'எழுக சிங்களம்' நடத்தப்பட வேண்டும் என்று பெங்கமுவே நாலக்க தேரர் போன்ற சிங்கள மதத் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

குளத்தின் அமைதியைக் குலைக்க ஒரு கல்லை எறிந்தாலே போதும். அதைத் தான் விக்னேஸ்வரன் செய்துள்ளார். அமைதியைக் குழப்பும் இதுபோன்ற நிகழ்வுகள் இடம்பெறக்கூடாது. எமது தலைமைகள் மிகவும் பக்குவமாகவும் நிதானமாகவும் செயற்பட வேண்டும். நாங்கள் நீந்திவந்த நெருப்பு ஆறு எமது பிள்ளைகளுக்குத் தெரியக்கூடாது. அவர்கள் இந்த நாட்டில் அமைதியாக வாழ வேண்டும். தற்பொழுது உருவாக்கப்பட்டு வரும் அரசமைப்பு சரியான முறையிலே உருவாக்கப்பட வேண்டும் - என்றார். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தை காப்பாளர் மீது தாக்குதல்

தென்மராட்சி, ஒக்.17
சாவகச்சேரி பொதுச் சந் தையின் பாது காப்பு அலுவலர் இனந்தெரியாதோ ரால் தாக்கப்பட்டு வைத் தியசாலை யில் சேர்க்கப் பட்டார்.

கடந்த புதன்கிழமை இரவு சந்தையின் கதவுகளை மூடிவிட்டு சந்தைக்குள்நடமாடிய போது நவீன சந் தையின் மேல்மாடி யில் இருந்து விட்டு ஒருவர் படிகளில் கீழே இறங்கி வந்துள்ளார். கதவுகள் மூடியிருந் ததால் வெளியே செல்லமுடியாமல் பாதுகாப்பு அலுவலருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரைத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது. தாக்குதலுக்கு இலக்கான பாதுகாப்பு அலுவலர் அங்கே நின்ற பொதுமக் களால் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

(ற-4,9)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

*கடந்த வாரம் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை ரீதியாக எமக்குக் கிடைத்த பெறுபேறுகளின் விவரம்*

**யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை**
ஞா.ஜெத்ரோஜெசி - 170, நி.துர்சிகா - 168, த.தக்ஷா - 167, ர.டனுசன் - 163, சு.பவிசாளினி - 161, ந.அலெக்ஸ் - 158, ம.சரண்யா- 158

**யா/மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை**
து.பிரணவன்152

**யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை**
த.செந்தூரன்-161, தா.சாம்சன்- 161

**யா/ இடைக்காடு மகாவித்தியாலயம்**
க.கோகுல் - 173, அ. லோஜனா -169, க.சாரங்கன்- 164, ஸ்ரீ.ஹரணி - 161, கு.மதுமிதா-160, சி.சானுகா- 160, பி. ஜஸ்மிகா-154, ய.ராகவன்- 153

**முல்லை சிவநகர் தமிழ் வித்தியாலயம்**
பி.நேருஜன் - 173, எஸ். விதுசன் - 165, வி.பாரதி - 156, பி.கவிந்த் - 153

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



சில்வெஸ்ரர் அன்ரனி
லூட்ஸ்மேரி றோசலின்
தம்பதியரின்
செல்வப்புதல்வி
“ அர்வினா ”
தனது முதலாவது பிறந்தநாளை
2016.10.17 இன்று (2016.10.17) திங்கட்கிழமை
பெல்ஜியத்தில்
வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, இலங்கையில் வசிக்கும்அம்மப்பா. அம்மம்மா, மாமாமார்களான றொசான், சயந்தன், சித்தி றொசாறியா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.



சிவலிங்கம்(அம்மப்பா)
லூக்கலிஸ்ரா(அம்மம்மா)
மாமாமார்(றொசான், சயந்தன்)
சித்தி(றொசாறியா)

மார்சன்கூடல்,
இளவாலை.

## 5 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

இன்று (17.10.2016) திங்கட்கிழமை
தனது ஐந்தாவது பிறந்தநாளை லண்டனில் வெகு விமரிசையாகக்
கொண்டாடும் சுதர்சன் முகுந்தினி
தம்பதியரின் மழலை
**விஷாலி** அவர்களை
வாழ்த்துகின்றோம்.




அகவை ஐந்து காணும் - எங்கள்
அஞ்சுகமே விஷாலிக்குட்டியம்மா
ஆண்டாண்டுகாலம் அகமகிழ்ந்தே வாழ்ந்திடம்மா -
வான்புகழ் மனம் மேவி வீசுதென்றல் இனிமை மேவி
முழுமதி வதனம் மேவி நட்சத்திர விழி மேவி
முத்து நகைச் சீர்மேவி கற்றோர் போற்றவும்
மற்றோர் வாழ்த்தவும் அம்மை அப்பன் தாள் பணிந்து
அன்பில் நிறைந்துஅறிவினில் உயர்ந்து
சாதனைப் பெண்ணாய் சரித்திரம் படைப்பாய் கண்ணே!
வாழ்க வாழ்க வாழ்க
வளமும் நலமும் பெற்று வாழ்க
என்றே வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, அப்பம்மாமார்,
அப்பப்பாமார், அம்மம்மா, அம்மப்பா,
அத்தைமார், மாமாமார், சித்திமார்,
சித்தப்பாமார், பெரியம்மாமார்,
பெரியப்பாமார், மச்சான்மார், மச்சாள்மார்.

அப்பம்மா ம.மகேஸ்வரி.
நாகம்மாள் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(ஜே.5446)
(13.10.17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இந்து மகளிர் ஆரம்பப்
பாடசாலை மாணவி
செல்வி **செல்வசுந்தரராசா
றாதவி**
2016 ஆம் ஆண்டு 5 ஆம் தர
**புலமைப்பரிசில் பரீட்சையில் 166**
புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்ததையிட்டு அவரை
மனமாரப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்..

வாழ்த்துவோர்
பெரியப்பா - பேரின்பநாதன்
பெரியம்மா - வளர்மதி
அக்காமார்களான - நவீனா, வாசவி
(டென்மார்க்) ,சித்தப்பா - மதியழகன்,
சித்தி - நிறைமதி
அண்ணாமார்களான - மதுராகரன், மயூரன்

வரணி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
மாணவரும்
**விக்னானந்தம் யசோதா**
தம்பதியரின் செல்வப்புதல்வனுமாகிய
**வி.யசஸ்வின்**
2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில்
**158 புள்ளிகளைப்**
பெற்று சித்தியடைந்ததையிட்டு அவர் மேன்மேலும் பலகலையும் கற்று உயரவேண்டுமென எம் குலதெய்வங்களை வேண்டி அவரை மனதார வாழ்த்துகின்றோம். இவர் தம் கல்விக்கு அறிவூட்டி நின்ற பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்.
அன்பொளி ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா,தம்பி, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், தம்பிமார், அத்தான்மார்.

சிவரஞ்சனம்,
கோண்டாவில்.
077 306 8982

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி மாணவி
செல்வி **மதுராங்கினி
தவத்துரை**

2016ஆம் ஆண்டு நடைபெற்ற
ஐந்தாம் தரப் புலமைப் பரிசில்
பரீட்சையில் 155 புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்தமையையிட்டு
அவர் கல்வியில் மேலும் பல பட்டங்கள்
பெற்று முன்னேற வாழ்த்துவதோடு
இவரின் வெற்றிக்கு உழைத்த
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
அதிபர், ஆரம்ப பிரிவு
மேற்பார்வையாளர், ஆசிரியர்கள்
மற்றும் ஆசிரியர்களான
திரு.யோகதயாளன்,
செல்வி.செ.ஜசிதா ஆகியோரையும்
பாராட்டுகின்றோம்.

Best Wishes

*பாராட்டி வாழ்த்துவோர்:-*
அப்பா - தவத்துரை
அம்மா- லோகா
அண்ணா - ஹரிஷன்
ஆசைமாமா குடும்பம்
பெரியம்மாமார் மற்றும்
உறவினர்கள்.

443/6, கண்டிவீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



16.10.2016 அன்று இறைபதமடைந்த எமது மதிப்பிற்குரிய வணிக பாட ஆசான்

**பசில் ஜெனதாஸ்**

அவர்களின் பிரிவினால் துயரிற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**2003 A/L வர்த்தகபிரிவு பழைய மாணவிகள்,**
**யா/திருக்குடும்ப கன்னியர்மடம்.**

## மரண அறிவித்தல்கள்

### தம்பாபிள்ளை யோகநாதன் (யோகன்)



07ஆம் வட்டாரம் வேலணை மேற் கைப் பிறப்பிடமாவும், 05ஆம் வட்டாரம் வேலணை வடக்கை (வங்களாவடி) வசிப்பிடமாகவும் தற்போது மதவடி ஒழுங்கை சுதுமலை வடக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாபிள்ளை யோகநாதன் 15.10.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான தம்பாபிள்ளை - பவளவல்லியம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ் சென்றவர்களான திருநாவுக்கரசு - பாலாம்பாள் தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற கோகிலாம் பாள் (கிளி) இன் பாசமிகு கணவரும் ஈஸ்வரன், ஆத்மசரன், தேவநாதன், வரதநாதன், செல்வ நாதன், சாரதாம்பாள், ரமணி (வரதா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மதவடி ஒழுங்கை,**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**

**தகவல்**
**ச.ஐங்கரன்**
**077 3726103**

### நாகலிங்கம் தங்கராசா

(ஓய்வு பெற்ற கிளை முகாமையாளர், பல நோக்கு கூட்டுறவு சங்கம், மானிப்பாய்)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தங்கராசா நேற்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான செல்லையா-தங்கரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும் கணேஸ்வரியின் அன்புக் கணவரும் கஜனி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், உடுவில்), காலஞ்சென்ற கஜன் மற்றும் ருஷானி (வரலாற்றுத்துறை 4ஆம் வருடம் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் லவன்(தொழிநுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி திணைக்களம்-முல்லைத்தீவு), சஜீஸ்( Organizer ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ்) ஆகியோரின் மாமனும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் மகேந்திரன், ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் கதிர்காமஈஸ்வரன், காலஞ்சென்ற சிவஈஸ்வரன் மற்றும் ஞானேஸ்வரன், சர்வேஸ்வரன்(முகாமையாளர், NDB வங்கி-மானிப்பாய்) ஆகியோரின் மைத்துனரும் அபினன், அபினயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாப்பா தோட்ட வீதி,**
**இணுவில் மேற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 1770703**

## மலையகத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கோரிக்கை முன்வைத்தனர் மலையக மக்கள் பிரதிநிதிகள்.

ஒரு வாரத்துக்கும் மேலாக இலங்கையில் நிலை கொண்டுள்ள ஐ.நா. அறிக்கையாளர் ரீட்டா இஷாக் நாடினுடன் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. அதில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:

"இலங்கையில் சிங்களவர், இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர் மற்றும் முஸ்லிம் என நான்கு தேசிய இனங்கள் என்ற அடிப்படையில் இனப்பிரச்சினைக்கான தீர்வும் அதிகாரப் பகிர்வும் இடம்பெறவேண்டும். இந்த விவகாரத்தில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையரும், ஐ.நாவும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். தற்போது மலையக மக்கள் தேசிய இனம் என்று கூறப்பட்டாலும் சட்ட ரீதியான மதிப்பு மற்றும் அரச நடைமுறைகளில் அது ஏற்றுக் கொள்ளப்படுவதாக இல்லை. அரசமைப்புப் பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமனங்களில் கூட சிங்களவர், இலங்கை தமிழர், முஸ்லிம் என இன ரீதியாக நியமனங்கள் இடம்பெறுகின்றன. தமிழர் பிரதிநிதிகளாக நியமனம் பெறுவோர் வடக்கு - கிழக்குத் தமிழர்களைப் பற்றித் தான் அங்கு பேசுவார்களே தவிர மலையகத் தமிழர் களைப் பற்றிப் பேசமாட்டார்கள் . அரசும்சிங்களம்,தமிழ்,முஸ்லிம்எனப்பிரித்தாண்டுகையாண்டு பிரதிநிதிகளை நியமனம் செய்கின்றது. மலையகத் தமிழர்களைப் புறக்கணித்தே நடந்துகொள்கின்றது.

இந்த விடயங்கள் தொடர்பாக ஏற்கனவே அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தாலும், ஐ.நாவின் கவனத்துக்கும் இதனை முன்வைக்க வேண்டிய தேவை உள்ளது - என்று கூறப்பட்டது. (உ-4)

## மரண அறிவித்தல்கள்

### பெனடிக் பசில் ஜெனதாஸ்

சுவாமியார் வீதி, கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பெனடிக் பசில் ஜெனதாஸ் (சுரேஸ்-பிரபல ஆசிரியர், வணிகம் B.B.A)நேற்று(16.10.2016)ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திரு.திருமதி பெனடிக் (சந்திரன்)-பூவா தம்பதியரின் அன்பு மகனும், மேரிமாசோவின் (லதா) அன்புக் கணவரும், கெசோன் (2016 A/L) இன் பாசமிகு தந்தையும், திரு.திருமதி கிருஸ்ணன் தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானதாஸ், கலஷ்ரா, அன்ரனிதாஸ் (ரஞ் சித்), நெல்சன், அனுசா, ரெமிங்ரன், ஸ்ரெலினா, குயினா, ராகேல் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அன்ரன் றூபதாஸ், அன்ரன் ஸ்ரெலன், தனலிங்கம், கோமதி, சூரியா, கலைச்செல்வி ஆகியோரின் மைத்துனரும், யசிந் தன், டிலக்ஷனா, சொப்னா, தஸ்மிகா ஆகியோரின் பெரிய தகப்பனும், யேம்சன், யெயப்பிரசா, யெவிக்சன், ருக்சியா, யெபோல்சன், அருசாத் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் மரண நிகழ்வு இன்று (17.10.2016) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு சுவாமியார் வீதி, கொழும்புத்துறையில் நடைபெற்று சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுவாமியார் வீதி,**
**கொழும்புத்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 332 2437**



### கார்த்திகேசு பேரம்பலம் (ஆசாரி மார்க்கண்டு)

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், துரைராசா வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பேரம்பலம் (ஆசாரி மார்க்கண்டு) 13.10.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மதியாபரணம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சீதாலெட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சற்குணம், பொன்னுத்துரை யோகம்மா மற்றும் சின்னம்மா, கனகலிங்கம் ஆகியோரின் சகோதரரும், மகாதேவன், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை, வைத்தீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், சத்தியமூர்த்தி (லண்டன்), கமலாதேவி, நிர்மலாதேவி, சண்முகராசா (சுவிஸ்), உதயகுமார் (சுவிஸ்), தேவராணி, தேவராசா (கனடா), றஞ்சிதவதனி (பிரான்ஸ்), சந்திரகுமார் (கனடா), லீலாவதி, இன்பரதி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிர்காமநாதன், அனுரா (லண்டன்), நவரத்தினராசா, சந்திரா (சுவிஸ்), ரேணுகா (சுவிஸ்), ஞானகரன், றம்சியா (கனடா), பிரபாகரன் (பிரான்ஸ்), லவன், நஜீந்திரன் (நியூசிலாந்து) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துரைராசா வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**076 922 6642, 077 616 3427**

## சொந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் குணமணி தெரிவித்ததாவது:

மானிப்பாய் பகுதியில் தற்போதுவரை ஈ.பி.டி.பியினரின் முகாமாகத் தொழிற்படும் வீடு நாம் உழைத்துச் சேர்த்த சொத்து. இதனைப் போர்க்காலத்தில் ஈ.பி.டி.பியினர் அபகரித்து முகாம் அமைத்து நிலை கொண்டனர். அந்த வீட்டை மீள ஒப்படைக்குமாறு ஈ.பி.டி.பியினரிடமும், அதனை மீட்டுத் தருமாறு முதலமைச்சர் தொடக்கம் பொலிஸார் வரைக்கும் கோரியிருந்தோம். எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் பெருதும் மனமுடைந்து காணப்பட்ட எனது கணவர் மன ஏக்கத்துடன் உயிரிழந்து விட்டார். அவரின் இறுதிக் கிரியைகள் நாளை (இன்று) திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. அவரின் நிறைவேறாத ஆசையான அந்த வீட்டில் வைத்து இறுதிக் கிரியையை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு கோருகின்றோம். அதற்கும் ஈ.பி.டி.பியினர் பதில் தரவில்லை - என்றார்.

"இதனை நீதிமன்றம் ஊடாக நாடி சட்ட ரீதியான உருத்தின் பிரகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய விடயம் என்பதனால், உடனடியாக ஒரு நாள் இடைவெளியில் இதற்கான சந்தர்ப்பத்தினை வழங்க முடியாது" என்று ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (வ-101)

## மரண அறிவித்தல்

### வர்னேந்திரன் சிவகுமாரன்(செட்டி)

(தபால் திணைக்கள உத்தியோகத்தர்)



**பிறப்பு** 28.07.1966

**இறப்பு** 16.10.2016

யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வர்னேந்திரன் சிவகுமாரன் (செட்டி) நேற்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுமாரன் மற்றும் கிருபாபதி (சின்னக்கிளி) தம்பதியரின் அன்பு மகனும் மாலநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இரவீந்திரன்(ரவி) மற்றும் சுரேந்திரன் (ராஜன்), ஜெயேந்திரன்(ஜெயந்தன்), இராஜேந்திரன் (கண்ணன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காஞ்சனா, கயல்விழி, தர்ஷினி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் துளசி, விசாலி, ஜனனி, சாதனா, காலஞ்சென்ற இராகவன் மற்றும் தீரன், சேரன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2016) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தீயுடன் சங்கமமாகும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.99/7, சந்தனமாதா கோயில் வீதி, அரியாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**சுரேந்திரன் (ராஜன்-சகோதரன்) 077 1550950**
**இராஜேந்திரன் (கண்ணன்-சகோதரன்) 076 9732563**
**ஜெயேந்திரன் (ஜெயந்தன்-சகோதரன்) 4163719171 (கனடா)**

துயரங்களில் இருந்து தமிழர்கள் மீள

# வடக்கு - கிழக்கு இணைவு அவசியம்

## கிழக்கு மாகாண உறுப்பினர் துரைரட்ணம் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, ஒக். 17

கடந்த காலங்களில் இனச் சுத்திகரிப்பாளர்களால் ஏற்படுத்தப்பட்ட துன்ப, துயரங்களில் இருந்து கிழக்கு மாகாண தமிழ் மக்கள் மீட்சி பெற வேண்டுமாயின் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்கள் ஒன்றுபட வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள மக்கள் சந்திப்பு பணிமனையில், கட்சித் தொண்டர்கள் மத்தியில் சமகால அரசியல் தொடர்பில் கலந்துரையாடிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டால் மாத்திரமே இது சாத்தியமாகும். நாட்டில் வாழும் தமிழர்கள் எந்த முடிவை எடுத்தாலும் அது சிறுபான்மை இனத்தவர்களைப் பாதிக்காமல் இருக்க வேண்டும்.

அவ்வாறான முடிவே எமக்குத் தேவை. நாங்கள் தான் தோன்றித்தனமாக ஏதாவது முடிவை எடுத்தால் எமக்கும் அவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

> வேறு எந்த சிறுபான்மை இனத்தவரின் கீழும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் வாழ விரும்பவில்லை. கடந்த காலங்களில் நாம் இழந்தவை போதும்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் வடக்கு - கிழக்கிலுள்ள மக்களுடன் சேர்ந்து வாழவே விரும்புகின்றார்கள்.

வேறு எந்த சிறுபான்மை இனத்தவரின் கீழும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் வாழ விரும்பவில்லை. கடந்த காலங்களில் நாம் இழந்தவை போதும். இனியும் இழப்பதற்கு எதுவும் இல்லை என்ற நிலையில் உள்ளோம் - என்றார். (ந-4)

# மைத்திரி – ரணில் முறுகலுக்கு புலனாய்வு அதிகாரியே காரணம்

## குற்றஞ்சாட்டுகின்றார் சரத் விஜயசூரிய

கொழும்பு, ஒக். 17

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் உருவாகியிருக்கும் முறுகல் நிலைக்குக் காரணமாக இருப்பவர் உயர் இராணுவப் புலனாய்வு அதிகாரி ஒருவரே எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவரை உடனடியாகப் பதவியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என சிவில் அமைப்புக்கள் ஜனாதிபதியை வலியுறுத்தியிருக்கின்றன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியாகவுள்ள பிரிகேடியர் துவான் சுரேஷ் சாலே என்பவருடைய கட்டுப்பாட்டிலேயே ஜனாதிபதி தற்போது செயற்படுகின்றார் என்று 2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்த சிவில் அமைப்புக்களின் பிரதிநிதியான பேராசிரியர் சரத் விஜயசூரிய பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சரேஷ் சாலே அந்தப் பதவியிலிருந்து வெளியேற்றப்படவேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் அவர் வலியுறுத்தினார்.

அதேபோல பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியும் தற்போதைய விசாரணைகளுக்குத் தடையாக இருப்பதால், அவரும் பதவி நீக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இராணுவப் புலனாய்வு அதிகாரியான சுரேஷ் சாலேயின் பணயக் கைதியாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருக்கின்றார் என்று குற்றஞ்சாட்டியிருக்கும் பேராசிரியர் சரத் விஜயசூரிய தேசிய ஒருமைப்பாட்டு அரசுக்குள் தற்போது உருவாகியிருக்கும் பதற்ற நிலைமைக்கு குறிப்பிட்ட அதிகாரியே காரணம் எனவும் குற்றஞ்சாட்டினார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் குற்றச்செயற்பாடுகள் அனைத்தையும் முடிவுக்குக்கொண்டுவர வேண்டும் என ஜனாதிபதி விரும்பினால் உடனடியாக சுரேஷ் சாலேயைக் கைது செய்யவேண்டும் எனவும் வலியுறுத்தியிருக்கும் பேராசிரியர் பாதுகாப்புப் படைகள் அனைத்தும் ஜனாதிபதிக்கு எதிராகச் செயற்படுகின்றன என்று ஜனாதிபதியை சாலே நம்ப வைத்துள்ளார் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக போர் இடம்பெற்ற காலப்பகுதியிலும், போர் முடிவடைந்த பின்னரும் விடுதலைப் புலிகளுடனான விவகாரங்களைக் கையாள்வதில் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் முக்கிய பங்களிப்பை சுரேஷ் சாலே வழங்கியிருந்தார். (ந-4)

# ஊழல்வாதிகளைக் காப்பாற்ற முனையவில்லை ஜனாதிபதி

## அமைச்சர் மகிந்த சமரசிங்க விளக்கம்

கொழும்பு, ஒக். 17

ஊழல் செய்தவர்களைக் காப்பாற்றுவதற்கு ஜனாதிபதி முயற்சிக்கவில்லை. இராணுவ அதிகாரிகளை விசாரிக்கும்போது அவர்களை ஏளனப்படுத்த வேண்டாம் என்றும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் தனக்கு அறிவிக்குமாறுமே ஜனாதிபதி தெரிவித்தார்.

எனவே ஜனாதிபதியின் முழுமையான பேச்சை கேட்காமல் விமர்சிக்க முனைவது சரியானது அல்ல.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க.

அவர் தெரிவித்ததாவது:



சுயாதீன ஆணைக் குழுக்கள் சரியான முறையில் செயற்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும். ஆனால் ஒரு சிலர் இந்த விடயத்தை பயன்படுத்தி, அரசியல் சுயலாபம் அடைய முயற்சிக்கின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில தினங்களுக்கு முன்னர் நிகழ்த்திய உரையை சில ஊடகங்கள் முழுமையாக வெளியிடவில்லை. ஒரு சில விடயங்களை மட்டும் வெளியிட்டமையால் சிலர் விமர்சிக்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அவருக்கு இந்த விடயங்கள் அறிவிக்கப்படவேண்டியது அவசியமாகும். ஜனாதிபதியின் பேச்சை முழுமையாக கேட்காமல் விமர்சிக்க முனைவது சரியானது அல்ல. சில ஊடகங்கள் ஜனாதிபதியின் பேச்சை சரியாக வெளியிடவில்லை.

விமர்சனம் செய்ய முயற்சிப்பவர்கள் முதலில் ஜனாதிபதியின் உரையை முழுமையாக வெளியிட வேண்டும். சுயாதீன ஆணைக் குழுக்கள் செயற்படவேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை - என்றார். (ந-4)

# கைப்பற்றப்பட்ட கொடி மீள ஒப்படைக்கப்பட்டது

கொழும்பு, ஒக். 17

தேசியக் கொடி திரிவுபடுத்தப்பட்டது என்று தெரிவித்துக் கைப்பற்றப்பட்ட கொடித் தொகுதி ஒன்று அதன் உரிமையாளர்களிடம் மீண்டும் வழங்கப்பட்டது.

கறுவாத் தோட்ட பொலிஸ் நிலையத்தில் குறித்த கொடிகள் உரிமையாளர்களிடம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் குறித்த கொடித் தொகை கொழும்பு சுதந்திர சதுக்கத்துக்கு அருகாமையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அதனைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்காக 'சிங்கலே' அமைப்பு உட்பட மேலும் சிலர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றனர்.

சர்ச்சைக்குரிய கொடியானது தேசியக் கொடியில் காணப்படும் செம்மஞ்சள் மற்றும் பச்சை நிறங்களில் காணப்படும் துண்டுகள் அகற்றப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த கொடியை தேசியக் கொடி அல்லாமல் சிங்கலே கொடியாக பயன்படுத்துவது சட்டவிரோதமானது அல்ல எனப் பொலிஸார் சிங்கலே அமைப்புக்குச் சுட்டிக் காட்டினார்.

பொலிஸ் ஆணைக்குழுவின் அறிவிப்புக்கு அமைய குறித்த கொடித் தொகை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ந-4)

# புலனாய்வு அதிகாரி மீதான விசாரணை கைவிடப்பட்டது

## ஜனாதிபதி வெளியிட்ட கருத்தாலாம்

கொழும்பு, ஒக். 17

விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு விசேட சேவையாற்றிய பாதுகாப்பு அமைச்சின் பிரதான புலனாய்வுத்துறை அதிகாரியொருவர் மீது வழக்குத் தொடர்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்தால் கைவிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதிகூடிய இரகசியத் தன்மை வாய்ந்த தகவல்களை வெளியிட, இந்த புலனாய்வுத்துறை அதிகாரி நடவடிக்கை எடுக்கவில்லையென இவர் மீது பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஆயினும் அரச இரகசியம் தொடர்பான சட்டத்தில், நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பான இரகசியங்களை வெளியிட முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் மிலேனியம் சிட்டி தொடர்பில் புலனாய்வுத்துறை அதிகாரியான கபில ஹெந்தாவிதாரணவுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு பொலிஸார் மேற்கொண்ட முயற்சி, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஒருவரால் நிறுத்தப்பட்டது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு அமெரிக்காவின் சி.ஐ.ஏ. அமைப்பிலுள்ள புலனாய்வுத்துறைத் தகவல்கள் தொடர்பில், அந்நாட்டின் எப்.பீ.ஐ. பொலிஸாருக்குக் கூட விசாரணை நடத்த முடியாது என சுட்டிக்காட்டியுள்ளது. (ந-4)

# பைசல் காசிம் கருத்துக்கு எதிராக முறையிடப்படும்

## பிரதியமைச்சர் அமீர் அலி தெரிவிப்பு

காத்தான்குடி, ஒக்.17

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் லஞ்சம் கொடுத்தே அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், அமைச்சருமானறிஷாட்பதியுதீன் அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டார் என்று சுகாதார பிரதி அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்த கருத்துக்கெதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படும் என்று அந்தக் கட்சியின் தவிசாளரும் பிரதி அமைச்சருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்டத்தில் அன்மையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பிரதியமைச்சர் பைசல் காசிம் இவ்வாறு தெரிவித்தார். அந்தமேடையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் இருந்துள்ளனர்.

குற்றச்சாட்டை பிரதியமைச்சர் சுமத்தியிருப்பதன் உண்மை நிலையை அறிய வேண்டிய தேவைப்பாடு இருக்கின்ற காரணத்தால், நாங்கள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடத்தில் இந்த முறைப்பாட்டைச் செய்து உண்மையை அறிவோம் - என்றார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டுறவாளர் தின விழா முல்லைத்தீவில் நேற்று

முல்லைத்தீவு, ஒக். 17
பன்னாட்டு கூட்டுறவாளர் தின விழா நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் கொண்டாடப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவாளர்களின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் வி. சர்வானந்தா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வு முல்லைத்தீவு கற்சிலைமடு அ.த.க மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்டரீதியாகபாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விவாதம், விநாடி வினா, கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. திறம்படச் செயலாற்றிய கூட்டுறவு ஊழியர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. சிறப்பாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பரிசில்களும், கேடயங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடமாகாண சபையின் விவசாய கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப்பினர்களான க.சிவநேசன், து.ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் மோகன்றாஸ், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உ.சுபசிங்க, கூட்டுறவுத்துறை உத்தியோகத்தர்கள், கூட்டுறவாளர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-21,ரி7)

# 'உரிமைக்குக் கைகொடுப்போம்'
# மலையக ஆதரவுக் கூட்டம் வடக்கில்
## கிளிநொச்சி மாவட்ட தொழிற்சங்கம் நடத்தியது

கிளிநொச்சி, ஒக். 17
மலையக மக்களின் 'உரிமைக்காகக் கை கொடுப்போம்' எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் பொதுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

மலையக தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரி மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது. அவற்றுக்கு வடக்கிலிருந்தும் ஆதரவு வழங்கப்படுகின்றது.

மலையக மக்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் அவர்களுடைய கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட தொழிற் சங்கத்தினர் இந்த மாபெரும் கூட்டத்தை ஏற்பாடு செய்தனர். மலையக உறவுகளின் சம்பள உயர்வுக் கோரிக்கையை அரசு ஏற்று நிறைவேற்ற வேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உரையாற்றினார்.

மலையக மக்கள் பல துன்பங்களைக் கடந்து தான் தமது வாழ்க்கைப் பயணத்தில் பயணிக்கின்றார்கள். அந்த மக்களுக்கு சொந்தமாகக் கூட ஒரு நிலம் இல்லை. தற்போது பலரது முயற்சியால் ஏழு பேர்ச் காணிகள் சிலருக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் ஒரு வீடு கூட அமைக்கமுடியாது. மலையகம் சார்ந்து வாழுகின்ற பதினெட்டு இலட்சம் வரையான மக்களில் கிட்டத்தட்ட ஒன்பது இலட்சம் வரையான மக்கள் மலையகப்பகுதியிலேயே வாழ்கின்றனர்.

துன்பங்களை அனுபவிக்கின்ற மக்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்யவில்லை என்றால்– அந்த மக்களின் வாழ்க்கை எப்படி அமையப்போகிறது. அவர்களது நியாயமான கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களது போராட்டம் நியாயமானது. அதற்கு நாங்கள்–எங்களது முழு ஆதரவை வழங்க வேண்டும்– என்று அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில், அருட்தந்தை செல்வம் மற்றும் அருட்தந்தை ஜோசுவா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர் ப. அரியரட்ணம், தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் சங்கையா, முன்னாள் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் நா.வை.குகராசா, கிளிநொச்சி மாவட்ட தொழிற் சங்க பிரதிநிதிகள், கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ற-21,ரி3)

# குடிதண்ணீரில் குறைபாடுகள் குறித்து மக்களுடன் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக். 17
யாழ். மாவட்டத்தில் நிலத்தடி நீரில் உள்ள பிரச்சனைகள் மற்றும் குடிதண்ணீர் சம்பந்தமான குறைபாடுகள் தொடர்பாக மக்களுடன் ஆராயப்பட்டன.



தேசிய நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் சிறப்புப் பணிப்புரையின் கீழ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நீர் வழங்கல் அமைச்சின் பிரதி தவிசாளருமான சபீக் ரஜாப்தீன் தலைமையில் யாழ். மாவட்டத்தில் நிலத்தடி நீரில் உள்ள பிரச்சினைகள் மற்றும் குடிதண்ணீரில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதன் போது யாழ்ப்பாணம் புதிய சோனகத்தெரு(பொம்மை வெளி) சுன்னாகம் நிலாவரைக் கிணறு ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி எனப் பல பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டதோடு, மக்கள் கருத்துக்களும் இதன்போது அறியப்பட்டன.

இந்தச் சந்திப்பின்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ். மாவட்ட அமைப்பாளர் ரொசான் தமீம், நீர்வழங்கல் அதிகார சபையின் திட்டப்பணிப்பாளர் பாரதிதாசன், பொருளியலார் ஜெகதீசன், தொழில்நுட்ப அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வ-32)

# சான்றுப் பாடசாலைக்கு சிறுவன் அனுப்பி வைப்பு

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்று தெரிவிக்கப்பட்டு, சிறுவர் நன்னடத்தை அதிகாரியூடாக கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்ட சிறுவனை அச்சுவேலியில் உள்ள சான்று பெற்ற சிறுவர் பாடசாலை யில் சேர்க்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத் தரவிட்டார்.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டமை, கத்தி போன்ற கூரிய ஆயுதங்களை பாடசாலைக்கு கொண்டு சென்றமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சிறுவன் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் மாவட்டச் சிறுவர் நன்னடத்தை அதிகாரியூடாக கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டான்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் குறித்த சிறுவனை அச்சுவேலியில் உள்ள சான்று பெற்ற பாடசாலையில் சேர்த்துப் பராமரிக்குமாறு உத்தரவிட்டார். (ற-21,ரி3)

# வடிகாலமைப்பு சீரின்மையால் மல்லாவி வர்த்தகர்கள் பாதிப்பு
## தீர்க்க நடவடிக்கை எடுக்கின்றது வீதி அபிருத்தி அதிகார சபை

முல்லைத்தீவு, ஒக். 17
மல்லாவி நகரப் பகுதியில் அமைக்கப்பட்ட மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதி உயர்ந்து காணப்படுகின்றது. மழைகாலங்களில் வெள்ளம் அந்தப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்குள் உட்புகும் அபாயம் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டது. அதையடுத்து உடனடித் தீர்வாக சில வேலைத் திட்டங்கள் செய்யப்படும். - இவ்வாறு துணுக்காய் பிரதேச சபையினரும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் தெரிவித்தனர். வீதியின் வடிகாலமைப்பு தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை துணுக்காய் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மல்லாவி நகர்ப் பகுதியில் வீதி அதிகளவு உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதனோடிணைந்த வடிகாலமைப்பு உரிய முறையில் அமைக்கப்படவில்லை. அந்தப் பகுதிகளில் உள்ள கடைத் தொகுதிகளுக்குள் மழை வெள்ளம் உட்புகுகின்றது. இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த மாதம் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், பிரதேச செயலாளர் ஆகியோர் பாதிக்கப்பட்டவர்களுடன் கூட்டமொன்றை நடத்தி, இதற்கானதீர்வைவழங்குமாறு இணைத்தலைவர்களால் கூறப்பட்டது.

அதற்கமைவாகவே கடந்த வெள்ளிக்கழமை கூட்டம் இடம்பெற்றது. அதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா, துணுக்காய் பிரதேச செயலாளர், துணுக்காய் பிரதேச சபை செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நான் திட்டமிடல் பணிப்பாளராக இருந்தபோது, இந்த வீதி உயர்த்தப்பட்டதன் விளைவுகள் தொடர்பாக இவ்வாறான கூட்டமொன்றை நிகழ்த்தியிருந்தேன் என்று கூட்டத்தில்கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா சுட்டிக்காட்டினார்.

அங்கு கருத்துத் தெரிவித்த பொறியியலாளர் தெரிவித்ததாவது:

எமக்கு வீதியின் வேலைகளை நிறைவு செய்வதற்கு குறுகிய காலம் வழங்கப்பட்டது. அந்த வீதி [illegible] பெற்றுக் கொள்ள முடியாது. இந்தவருடம் 300 மீற்றர் வடிகாலமைப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது - என் றார்.

அனைத்துத் தரப்பினருடனான கலந்துரையாடலின் பின்னர் மழைகாலம் ஆரம்பித்துள்ளமையால் நீர் கடைத்தொகுதிக்குள் செல்லாதவாறு முக்கியமாக நீர் வடிந்தோடக்கூடியவாறான ஒரு ஏற்பாட்டை பிரதேச சபையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து செய்யும் என்றும், படிப்படியாக நிரந்தர வடிகாலமைப்பை செய்துதர நடவடிக்கை எடுப்படும் என்று தீர்மானிக்கப் பட்டது.

நகர்ப் பகுதியில் மணிக்கூட்டு கோபுரம் அமைப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டபோது, வீதியின் நடுவில் அமைப்பதில் இடம் பொருத்தமற்றுள்ளதால் வீதியின் ஒரமாக அமைப்பதற்கு காலப்போக்கில் நடவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானிக்கப் பட்டது. (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்நிதி நிறுவனங்களை மூட வலியுறுத்தி இன்று போராட்டம்

வவுனியா, ஒக்.17
"வடக்கு மாகாணத்தில் உழைக்கும்பெண்களை இலக்குவைத்து, உழைப்பைச் சுரண்டிச் சீரழிக்கும் நுண்நிதி (மைக்ரோ கிரடிற்) நிறுவனங்களை இழுத்து மூட அணி திரளுங்கள்."
இவ்வாறு சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.
நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் வாகன இலகு கொடுப்பனவு (லீசிங்) என்ற பெயரில் மக்களைச் சுரண்டிக் கொள்ளையிடும் நிறுவனங்களுக்கு எதிராகவும் கிராம மட்டங்களில் குடும்பங்களின் நிரந்தர வருமானத்தை ஏற்படுத்த வலி யுறுத்தியும் இன்று ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டம் காலை 10 மணிக்கு வவுனியா பஸ் நிலையத்துக்கு முன்பாக நடைபெறும்.
வறுமை ஒழிப்பு மற்றும் சுய தொழில் விருத்திக்கு உதவி என்ற பெயரில் நுண்கடன் நிதி நிறுவனங்கள் பெண்களை இலக்கு வைத்துக் கொடுக்கும் கடன்கள் பல குடும்பங்களைச் சிதைத்துள் ளன. பல கிராமங்களில் கடன் பெற்ற குடும்பங்கள் அதை மீளச் செலுத்த முடியாத நிலையில் தூர பிரதேசங்களுக்கு இடம்பெயர்கின்றன. சில பெண்கள் தற்கொலை என்னும் தீர்வை நாடுகின்றனர். அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை காரணமாக விவசாயமும் சிறு தொழில்களும் நாசமாக்கப்பட்டு வலுவிழக்கின்றன. அரசு உடனடியாகக் குறித்த நிதி நிறுவனங்களை மூடுவதுடன் சமுர்த்தி வங்கி, கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய வங்கிகள் ஊடாக மக் களுக்கு சிறு கடன்களை வழங்க முன்வரவேண்டும்.
2014ஆம் ஆண்டு நாட்டின் உற்பத்தியில் 42 சதவீத பங்களிப்பை வழங்கும் மேல் மாகாணத்தில் உள்ளவற்றை விடவும், நாட்டின் உற்பத்தியில் 4 சதவீத பங்கை வழங்கும் வடக்கு மாகாணத்தில் உள்ள நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகமாகவே உள்ளது. இது வடக்கு மக்களைத் திட்டமிட்டுச் சுரண்டுகிறார்களா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி நிற்கிறது.
ஒரு சமூகத்தைச் சிதைக்க வேண்டுமென்றால் அந்தச் சமூகத்தின் பெண்களை சிதைத்தால் அது சாத்தியமாகும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் நுண் நிதிக் கடன் திட்டங்களின் மூலம் பெண்களின் இருப்பைக் கேள்விக் குறியாக்கி ஆரோக்கியமான குடும்பத்தின் ஆணிவேராகத் திகழும் பெண்களைச் சீரழிப்பதன் ஊடாக எமது சமூகத்தை ஊனமாக்கச் செயற் படும் சக்திகளுக்கு எதிராகவே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு எமது பெண்களைக் கடன் சுமையிலிருந்து மீட்டெடுக்கும் எழுச்சியில் எல்லோரும் அணி திரளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் – என்று விழிப் புணர்வுக்கான மக்கள் அமைப்பு தெரிவித்தது. (ற-21)



## விதிகளை மீறிய சாரதிகளுக்கு தண்டம்

தென்மராட்சி, ஒக் 17
வழித்தட அனுமதியின்றி பயணிகளுடன் ஆபத்தை விளைவிக்கக்கூடியநிலையில் வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்று 28 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.
கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான், வழித்தட அனுமதியின்றிப் பயணிகளை ஏற்றிச் சென்றமைக்கு 25 ஆயிரம் ரூபாவும் ஆபத்தை விளைவிக்கக் கூடிய வகையில் வாகனத்தைச் செலுத்தியமைக்கு 3 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்தார்.
அதேவேளை, வேகமாகச் சென்ற வாகனத்தைப் பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை செய்தபோது வாகனத்தை நிறுத்தாமல் சென்றதால் துரத்திப் பிடித்து விசாரித்த போது மதுபோதையில் காப்புறுதிப் பத்திரமும், வாகன வரிப் பத்திரமும் இன்றி வாகனம் செலுத்தியமை கண்டு பிடிக்கப்பட்டது.
குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்தியபோது காப்புறுதிப் பத்திரமின்மைக்கு 10 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், வாகன வரிப் பத்திரமின்மை மற்றும் பொலிஸ் சமிக்ஞையை மீறியமைக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் நான்கு குற்றங்களுக்குமாக 23 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ற-9)

# 70 சதவீத குற்றங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

### பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 17
நாட்டில் நூற்றுக்கு எழுபது சதவீத குற்றச்செயல்கள் தடுக்கப்படவேண்டும் என்பதை அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளேன். அதற்கான மேற்பார்வையை நான் செய்கின்றேன்.
இவ்வாறு தெரிவித்தார் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர.
வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் நிலையம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே பொலிஸ் மா அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பொலிஸாருடன் இணைந்து செயற்படும் குடிமக்கள் குழு, மாதர் குழு, ஆலோசனைக் குழுவினரின் உதவியுடன் இந்தப் பிரதேசத்திலுள்ள அனைவரையும் இணைத்து நல்லமுறையில் செயற்படவே நான் விரும்புகின்றேன். தமிழ் பேசும் மக்கள் பொலிஸ் சேவையுடன் இணைந்து செயற்பட நூற்றுக்கு இருபத்தைந்து சதவீத ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பொலிஸ் நிலையத்துக்கு, பொலிஸ் உத்தியோகத்தர்கள், உதவிப் பொலிஸ் பரிசோதகர், ஆண், பெண் இருபாலாரும் இணைந்து செயற்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர், வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் சிறப்பாகத் தமது பணிகளை நேர்மையாகச் செய்கின்றனர்.
இன, மத, மொழி, பேதங்களை மறந்து நாம் அனைவரும் இணைந்து எதிர்காலச் சந்ததியினரை நல்ல முறையில் வழிநடத்திச் செல்வதே எனது நோக்கமாக இருக்கின்றது. இங்கு இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு பொதுமக்கள் எம்முடன் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் – என்றார். (ற-21)

## லஞ்ச ஊழலுக்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் போராட்டம்

### ஜனாதிபதியை எச்சரிக்கின்றன சிவில் அமைப்புக்கள்

கொழும்பு, ஒக்.17
லஞ்ச, ஊழல் மோடிகளுக்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எந்தவித நடவடிக்கையும் எடுக்காது போனால், எதிர் வரும் நாள்களில் வீதியில் இறங்க வேண்டி ஏற்படும்.
இவ்வாறு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எச்சரித்தனர்.
அவர்கள் தெரிவித்ததாவது:
நல்லாட்சி அரசை ஆட்சிக்குக் கொண்டு வரப் பெரும் பிரயத்தனங்களை சிவில் அமைப்புக்கள் முன்னெடுத்தன. அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவது அரசின் பொறுப்பு.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அல்லது ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள யாராவது ஊழலில் ஈடுபடுவார்களாயின் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது ஜனாதிபதியின் பொறுப்பாகும்.
இது தொடர்பில் கூடிய அவதானத்துடன் இருப்போம். எதிர்வரும் காலங்களில் ஊழலுக்கு எதிராக ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கத் தவறின் வீதியில் இறங்க வேண்டி ஏற்படும் – என்றனர். (ற)

# மகிந்தவைக் கைதுசெய்து சிறையில் தள்ளவேண்டும்

### புரவெசிபலய அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஒக். 17
படுகொலை மற்றும் மோசடிகளுடன் தொடர்புடைய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்படவேண்டும்.
இவ்வாறு புரவெசிபலய அமைப்பு வலியுறுத்தியது.
புரவெசிபலய அமைப்பு மருதானையில் உள்ள சி.எஸ்.ஆர். மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியது.
அதில் தெரிவிக்கப்பட்டதாவது:
மகிந்த ராஜபக்ச உள்ளிட்டோரது சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட வேண்டும். அவர்கள் குற்றம் புரிந்திருந்தால் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ள வேண்டும். இதுவரை மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட சிலர் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை. அவர்களும் விசாரணைக்கு அழைக்கப்படுவது அவசியம். முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச



சர்வாதிகார அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவே பதவிலிருந்தபோது செயற்பட்டார்.
கோத்தபாய ராஜபக்ச போன்றவர்களை அரச ஊதியத்தைப் பெறும் அதிகாரி ஒருவர் விசாரணைக்கு அழைத்து வாக்கு மூலம் பதிவுசெய்த பின்னர் ஊழல், மோசடிகளை அம் [illegible] அதிகாரிகளின் பாதுகாப்புத் தொடர்பாகவே நாங்கள் குரல் கொடுக்கவேண்டும். விசாரணைகளின்போது அந்த அதிகாரிகள் எவ்வளவு உயிர் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர்.
விசாரணை அதிகாரிகள் ஓர் அடி பின்வாங்கினால் அவர்களது தலையெழுத்தே மாறி விடும். அதன் பின்னர் அவர்களை குறிப்பிட்டவர்கள் நாய்களைப் போன்று கொன்று வீதியில் வீசி விடுவார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படக் கூடாது – என்றார். (ற-4)

மாபெரும்
ஏல விற்பனை
ஒக்டோபர் 19ஆம் திகதி
LOLC வாகன வளாகத்தில்
ஸ்டேசன் வீதி, வைரவபுளியங்குளம்.
வவுனியா
ப்ளோரா - 0245 11 81 81
திமோதி - 0766 58 23 29
அஜித் - 0773 13 64 04
பார்வையிடல் ஒக்டோபர் 16, 17 மற்றும் 18ஆம் திகதிகளில்
(வாகனங்கள் தொடர்பான முழு விபரங்களை 15.10.2016 திகதிய வீரகேசரியில் பார்க்கலாம்.)
LOLC MICRO CREDIT
LOLC FINANCE
சொக்மன் & சமரவிக்கிரம
ஒரே தேசம் ஒரே ஏலவிற்பனையாளர்.
124 வருட மகோன்னத சேவையின் கொண்டாட்டம்
D.ads
பிரதான அலுவலகமும் காட்சியறையும்
இல.24, டொரிங்டன் வீதி, கண்டி.
தொ.பே: 081 2227593,
பெக்ஸ்: 081 2224371
ஈமெயில்: schokmankandy@sltnet.lk
நகர கிளையும் காட்சியறையும்:
இல.290, ஹெவ்லொக் வீதி, கொழும்பு-05.
தொ.பே: 2502680, 2585408
பெக்ஸ்: 011-2598176
ஈமெயில்: schokman@samera1892.com
இணையதளம்: www.sandslanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் இருவர் காயம்

வவுனியா, ஹொர வப் பொத்தானை வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந் தனர். விபத்தை ஏற்படுத் திய வாகனம் தப்பிச் சென் றுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்தனர்.
விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. விபத்து தொடர்பில் வவு னியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். விபத்தின் போது வீதியால் நடந்து சென்றமுதியவர்ஒருவரும், மோட்டார் சைக்கிள் ஒன் றில் பயணித்த இளைஞ னும்படுகாயமடைந்தநிலை யில் வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட னர். விபத்துக்குள்ளான மோட்டார்சைக்கிள் கடுமை யாக சேதமடைந்துள்ளது என்றுவவுனியாபொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

# சத்துணவுப் பொதிகளில் உரிய உள்ளீடு இல்லை

## துணுக்காய் பிரதேசகர்ப்பிணிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 17
துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கர்ப் பிணிகளுக்கு வழங்கப்படும் சத்துணவுப் பொதி உரிய நேரத்தில் கிடைப்பதில்லை. முழுமையான முறையில் உணவுப் பொதி உள்ளீடுகளும் அமைவதில்லை.
இவ்வாறு பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் குற்றஞ்சாட்டினர். புதிய அரசால் கர்ப்பிணிகளுக்கு சத்துணவு வழங்கும் திட் டம் கொண்டுவரப்பட்டது. மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா பெறுமதிக்கு உள்ளடங்கிய உணவுப் பொருள்கள் 10 மாத காலம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. முல்லைத்தீவு-துணுக்காய் பகுதியில் உள்ள கர்ப்பிணி களுக்கு வழங்கப்படும் சத்துணவில் முட்டை, நெத்தலி போன்ற பிரதான சத்துணவுகள் உள்ளடங்கப்பட வில்லை. கொடுக்கப்படும் உணவு முத்திரையில் இரண்டு மாத முத்திரையை வெட்டியே வழங்குகின்றனர் - என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர்.
"சத்துணவுப் பொதிகள் அனைத்துக் கர்ப்பிணிகளுக்கும் 10 மாதமும் முழுமையாக வழங்கப்படும். சிலர் தங்கள் பதிவுகளை உரிய காலத்தில் மேற்கொள்ளாது இரண்டு மாத காலம் தாமதித்து பதியுமிடத்து அதனைப் பெற்றுக் கொள்ளமுடியாது. சத்துணவு திட்டத்தில் 15 வகையான உணவுப்பொருள்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் 5 கட்டாயமாக வழங்கப்படவேண்டும். புரதம், கொழுப்பு, காபோவைதரேட், எண்ணெய் போன்ற தேவையான சத்துகள் உள்ளடக்கப்படவேண்டும். நெத்தலிக்கு சம னான சத்து உள்ள உணவாக மீன்ரின் உள்ளது. நெத்தலி இல்லாத சமயங்களில் அதனை வழங்கலாம். வழங்கப்படும் உணவுப்பொதியில் குறிப்பட்ட சத்துக்கள் உள்ளடங்கிய 5 பொருள்கள் இருத்தல்வேண்டும். அவற்றைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்குகின்றோம்"- என்று துணுக்காய் பிரதேச செய லாளர் தெரிவித்தார். (ற-ரி7)

## வீதி சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17
துணுக்காயில் இருந்து பாண்டியன் குளத்தின் மூன்று முறிப்பு வரையான 13 கிலோ மீற்றர் வீதி அடுத்த ஆண்டு தார்ப்படுக்கை வீதி யாக செப்பனிடப்பட வுள்ளது என்று மாந்தை கிழக்கு (பாண்டியன்குளம்) பிரதேச செயலாளர் ரமேஸ் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மாவட்டத்தின் இரு பிரதேச செயலாளர் பிரிவுகளை ஊடறுத்துச் செல்லும் துணுக்காய் பாண்டியன்குளத்தின் மூன்று முறிப்பு வரையான 13 கிலோ மீற்றர் வீதி தார்ப்படுக்கை வீதியாக செப்பனிடப்படவுள் ளது. குறித்த வீதி, வீதி அபிவிருத்தித் திணைக் களத்துக்குச் சொந்தமான வீதி யாகவுள்ள போதும் சீரமைப்பு வீதி அபிவிருத்தி அதி காரசபையின் ஊடாகவே மேற்கொள்ளப்பட வுள்ளது.
இதன்மூலம் ஒட்டங்குளம் மூன்று முறிப்பு மக்களுடன் நட்டாங்கண்டல் பகுதி மக்களும் நன்மை யடைவர்.
-என்றார். (ற-101)



## போரால் பாதிக்கப்பட்டோருக்கு இலவச மருத்துவ முகாம்கள்

யாழ்ப்பாணம், ஒக். 17
போரால் பாதிக்கப்பட்டு பல்வேறு நோய்களுடன் வாழும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த வர்களுக்கு 3 மாதங்களுக்கு ஒருமுறை இலவச மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.
இவ்வாறு நிறைவாழ்வு மைய இயக்குநர் மருத்துவர். தயாழினி தியாகராஜா தெரிவித்தார்.
தென்னிந்திய திருச்சபையின் நிறைவாழ்வு மையத் தின் ஏற்பாட்டில் நேற்று கிளிநொச்சியில் நடத்தப்பட்ட 12ஆவது இலவச மருத்துவ முகாமை ஆரம்பித்து உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
3 மாதங்களுக்கு ஒருமுறை மருத்துவ முகாம் இலவச மாக நடத்தப்படும். போரால் அவயவங்களை இழந் தவர்களுக்கும், உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கும் பல்வேறு நிகழ்ச்சி திட்டங்களை நாம் முன்னெடுத் துள்ளோம். கடந்த 3 வருடங்களாக தென்னிந்திய திருச்சபையின் நிறை வாழ்வு மையத்தால் பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார்.
மருத்துவர் தயாழினி தியாகராஜா தலைமையிலான மருத்துவக் குழுவினால் கிளிநொச்சி கண்ணகி நகர் அம்பிகை வித்தியாலயத்தில் நேற்றைய மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது. சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்டவர்களுக்கும், வெளிநோயாளர்களுக்குமான சிகிச்சைகளும் வழங்கப்பட்டன. சுமார் 200க்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெற்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
தென்னிந்திய திருச்சபை நிறைவாழ்வு மையத்தால் முன்னெடுக்கப்படும் மருத்துவ முகாமுக்கு ஆதரவாக, யாழ். பல்கலைக்கழகத்தின் இணை விஞ்ஞானப் பிரிவின் 10ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, குறித்த பிரிவு மாணவர்களால் சுகாதார உணவு தொடர்பிலான விழிப்புணர்வு செயற்றிட்டமும் முன்னெடுக்கப்பட்டது.
(ற-21,ரி3,34)

# விநாசியோடையில் வீதி சீரமைப்பதற்கு அனுமதி

## பூநகரி பிரதே செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17
பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விநாசியோடையில் 14 கிலோ மீற்றர் பிரதான வீதி சீரமைப்பு 2017 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட் டுள்ளது என்று பிரதேச செயலாளர் தெரி வித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விநாசி யோடை ஊடாக கல்முனை வரைக்கும் செல்லும் பிரதான வீதி 18 கிலோ மீற்றர் நீளமுடையது. இந்த வீதி மண் தரை யாகவே காணப்பட்டது. இதனால் நெருக் கடியை எதிர் நோக்குவதாகவும் குறிப்பாக மழை காலத்தில் வீதியின் மேலால் 3 அடி நீர் பாய்வதால் போக்குவரத்து முற்றாக தடைப்படுகின்றது என்றும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர்.
இந்தப் பகுதியில் மழை காலத்தில் போக்குவரத்து தடைப்படுவது மட்டுமன்றி, பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர் கள் முதல் கடற்றொழிலுக்குச் செல்பவர் கள் வரைக்கும் செல்ல முடியாத நிலை மையும் ஏற்படுவதுண்டு. குறித்த வீதி யின் முக்கியம் உணரப்பட்டு சீரமைப்புக் கான கோரிக்கை விடப்பட்டது.
குறித்த வீதியின் 18 கிலோ மீற்றர் நீளத் தில் 14 கிலோ மீற்றர் தார் வீதியாக சீரமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. பூநகரிப் பிரதேசத்தில் 2017ஆம் ஆண்டு 8 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. அதில் குறித்த வீதியும் உள்ளடக்கப்பட்டுள் ளது. இந்த வீதியானது வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமானதாக வுள்ளபோதிலும், வீதி அபிவிருத்தி அதி கார சபையினரே சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளவுள்ளனர் – என்றார்.(ற-101)

# மூத்தோரின் சேவையை மதிக்க இளையவர்கள் முன்வரவேண்டும்

## யாழ்.மாவட்டச் செயலாளர் கோரிக்கை

அச்சுவேலி, ஒக்.17
ஓய்வூதியர்கள் மற்றும் மூத்தோரின் சேவைகளை இளைய தலை முறையினர் முன்மாதிரியாகக் கொண்டு, பின்பற்ற வேண்டும். ஓய் வூதியர்கள் மற்றும் மூத்தோரின் சேவையைக் கௌரவிக்கவும் முன்வரவேண்டும். ஓய்வூதியர்கள் தமது சேவைக் காலத்தில் சமூக மேம் பாட்டுக்காக பல்வேறு சேவைகளைப் புரிந்தவர்கள். அவர்களின் அனுபவங்கள் ஆற்றல்களை சமூகம் உரிய முறையில் பயன் படுத்த வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட் டச் செயலாளர் நா.வேதநாயகன்.
யாழ். மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூ தியர் சகாய நிதிச் சங்கத்தின் ஓய்வூதி யர் தின விழா யாழ்.மாவட்டச் செய லக கேட்போர் கூடத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.
யாழ். மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூ தியர் சங்கத்தின் தலைவர் பொ.கம லநாதன் தலைமையில் நடைபெற்ற ஓய்வூதியர்தினவிழாவில்பிரதமவிருந் தினராகக் கலந்துகொண்டு, மாவட் டச் செயலாளர் உரையாற்றினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஓய்வூதியர்கள் ஒன்றுகூடும்போது அவர்களின் ஆக்கபூர்வமான சமூக மேம்பாட்டுக்கான கருத்துக்கள் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு ஏற் படுகின்றன. ஆக்கபூர்வமான முன் மாதிரியான யோசனைகளும் முன் வைக்கப்படும். ஓய்வூதியர்கள் தமது சேவைக்காலத்தில் சமூக மேம்பாட் டுக்கான பல்வேறு சேவைகளைச் செய்து, ஓய்வு பெற்றவர்கள். அவர்கள் தொடர்ந்து சமூகத்துக்கு தமது ஆக்கபூர்வமான ஆலோசனை களை வழங்கக்கூடிய நிலையில் உள்ளனர். அவர்களின் ஆலோச னைகளை சமூகம் உரிய முறையில் உள்வாங்க வேண்டும். அவர்களின் சேவைமுன்மாதிரியை இளைய தலைமுறையினர் தாங்களும் பின்பற்ற முன்வரவேண்டும்.
ஓய்வூதியர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிப்பதற்கு ஏற்ற வகையில் பகிரங்க சேவை ஓய்வூதி யர் சகாய நிதிச்சங்கம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. இது பாராட்டத்தக்க முயற்சியாகும். ஓய்வூதியர் மூத்த பிரஜைகளின் தேவைகள், முன்னுரிமை அடிப் படையில் நிறைவு செய்யப்பட வேண் டும். அதனைக் கருத்தில் கொண்டே விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளபோதிலும், அத னைக் கருத்தில் கொள்வதில்லை என கூறப்படுகின்றது. அந்தநிலை எதிர்காலத்தில் மாறவேண்டும். அவர் களுக்கான சேவைகள், தேவை கள் முன்னுரிமை அடிப்படையில் நிறைவு செய்யப்பட வேண்டும் – என்றார்.
15பிரதேச செயலகப்பிரிவு ஓய்வூதி யர் சகாய நிதியச் சங்கங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வயது மூத்த ஓய்வூதியர்களுக்கு மாவட்டச் செயலாளர் பொன்னாடை போர்த்தி மாலை சூட்டி அன்பளிப்பு வழங்கிக் கௌரவித்தார். (ற-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் பிரச்சினை தீர்வு இழுத்தடிக்கப்படுகிறது

## கிழக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு

திருகோணமலை, ஒக்.17
இனப் பிரச்சினைக்கான தீர்வை அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையில், அதனை இழுத்தடிக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் குற்றஞ்சாட்டினார். மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஏறாவூர் கோட்டத்தில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அதிதியாகக் கலந்துகொண்டு முதலமைச்சர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது இலங்கை வரலாற்றில் தீர்வின்றி தொடர்ந்து வருகின்ற ஒரு துரோகமாகும். இதுவரை காலமும் நடந்த பேச்சுக்களில் எவ்வாறு இழுத்தடிப்புக்கள் இடம்பெற்றதோ அதன் தொடராகவே தற்போதைய நகர்வுகளும் இருக்கின்றன.

அதிகாரப் பரவாக்கல் அதோ வருகிறது, இதோ வருகிறது என்று கூறப்படுவதெல்லாம் சிறுபான்மை இனங்களுக்குக் கூறப்படும் ஒரு பூச்சாண்டியைத் தவிர வேறொன்றுமில்லை. இந்தப் பின்னணியை தொடர்ந்து செய்துகொண்டிருப்பதை மத்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும். அதிகாரப் பகிர்வு என்று பொறிக்கப்பட்ட வெறும் போர்வையை மாத்திரம் மாகாணங்களுக்கு மத்திய அரசு போர்த்தியிருக்கின்றது.

13ஆவது அரசியல் திருத்தத்திலே குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் மத்திய அரசால் மறுக்கப்பட்டு, இந்த நாட்டிலே ஓர் அரசியல் யாப்பே கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. காணி, பொலிஸ், கல்வி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றன. எழுத்துக்களில் மாத்திரம் அதிகாரப் பரவலாக்கம் நடமாடுகிறது.

13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய அரசுக்கு ஒரு நாள்கூட கால அவகாசம் தேவையில்லை. அதற்கொரு அமைதிப் பேச்சும் தேவையில்லை. இந்த விடயங்கள் இழுத்தடிப்புச் செய்யப்படுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது.- என்றார். (ற)

# வவு. வடக்கில் இலவச கல்வி நிலையம்

யாழ்ப்பாணம், ஒக்.17
வவுனியா வடக்கில் உள்ள பொருளாதார ரீதியில் பின்தங்கிய 450 மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக ஒலுமடு கிராமத்தில இலவச மாலை நேரக் கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

சிவனருள் இல்ல நெடுங்கேணி இணைப்பாளர் த.செந்தீபன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்ப நிகழ்வில் குறித்த இல்லத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இராஜேந்திரன் நமசிவாயம் கல்வி நிலையத்தைத் திறந்து வைத்தார். சிவனருவி எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் கல்வி நிலையத்தில் மாணவர்களுக்கான கணினி வகுப்புக்களும், மாலை நேர வகுப்புக்களும் இலவசமாக நடைபெறவுள்ளன. வவுனியா வடக்கின் பல கிராமக்களைச் சேர்ந்த 450க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைவர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் 2016ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் 156 புள்ளிகளைப் பெற்ற, தந்தையை இழந்த ப.தரணிகா என்ற மாணவிக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது. கல்வி நிலைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் நெடுங்கேணி பிரதேச செயலாளர் க.பரந்தாமன், நெடுங்கேணி பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க முகாமையாளர் ப.செந்தில்ச்செல்வன், பாடசாலை அதிபர், கிராம சேவையாளர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி7)

# புதிய கட்சியின் யாப்பு உருவாக்கம் 30ஆம் திகதி முடிவுறும்

கொழும்பு, ஒக்.17
கூட்டு எதிர்க்கட்சியால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியல் கட்சிக்கான யாப்புத் தயாரிக்கும் பணிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி முடிவுக்கு வரும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதிய கட்சி யாப்புத் தொடர்பாக மக்கள் கருத்துக்கள் ஒப்படைக்கும் திகதி நேற்றுமுன்தினம் முடிவடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய அரசியல் கட்சி யாப்பு உருவாக்கும் நடவடிக்கையை ஏழு பேர் கொண்ட குழு முன்னெடுக்கின்றது. ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர், சட்டத் தரணிகள் இருவர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இருவர், தொழிலாளர் ஒருவர், சமூகவியலாளர் ஒருவர் ஆகியோரே இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ற)




சங்கானை பிரதேச சபைக்குட்பட்ட சங்கரத்தை, துணவி சென்.நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்ட நிதி மூலம் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தார். இந்த நிகழ்வு துணவி, வளர்மதி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. (ற-2)

# பொலிஸாரை விசாரிக்க புதிய பிரிவு

கொழும்பு, ஒக்.17
லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பில் கைது செய்யப்படும் பொலிஸ் அதிகாரிகளின் ஒழுக்காற்று விசாரணைகளை முன்னெடுக்க விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவொன்று அமைக்கப்படும் என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தத் தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் தாமதத்தைக் கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

# ஒட்டறுத்தகுளம் மக்களின் விவசாயத்துக்கு 70 ஏக்கர்

## வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக்.17
முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள சிறாட்டிக்குளம் கிராமத்தில் உள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்காக 70 ஏக்கர் வயல் நிலம் வழங்கப்பட்டுள்ளது என்று பிரதேச செயலாளர் ரமேஸ் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான ஒட்டறுத்தகுளம் கிராமத்தில் 37 குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்களின் வாழ்வாதாரம் மிக நெருக்கடியாகவுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது. அவர்களின் வாழ்வாதாரத்துக்காக வேளாண்மைச் செய்கைக்காகத் தலா 2 ஏக்கர் வீதம் வழங்க தீர்மானிக்கப்பட்டது. சிறாட்டிக்குளம் கிராமத்துக்கு அண்மையில் உள்ள ஒரு குளமான மோப்பன்குளத்துக்கு அண்டிய பகுதியில் முன்னர் விவசாயம் மேற்கொண்ட 70 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது.

குறித்த 70 ஏக்கரையும் 35 குடும்பங்களுக்கு பகிர்ந்தளித்து அதற் கான அனுமதிப் பத்திரங்களை கடந்த வெள்ளிக்கிழமை கையளித்தோம்.

மோப்பன்குளம் பகுதியில் உள்ள குளமும் இரு ஆண்டுகளின் முன்பு 25 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டது. இந்தக் குளத்தின் மூலம் வயல் செய்கை மேற்கொண்டு குறித்த கிராமங்கள் முழு நன்மை அடைய முடியும்.- என்றார். (ற-101)

# விதை உருளைக்கிழங்கு விநியோகத்தில் குழப்பம்

அச்சுவேலி, ஒக்.17
யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய விலையில் உருளைக்கிழங்கு விநியோகம் செய்யப்படுவது தொடர்பில் குழப்பமான நிலை காணப்படுகின்றது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

> விவசாயிகள் பயிர்ச் செய்கைக்கான நிலத்தை தயார் செய்கின்ற போதிலும் விதை உருளைக் கிழங்கு கொள் வனவு தொடர்பான தயார் நிலைக்கு வர முடியாதுள்ளது

உருளைக்கிழங்கு நடுகை நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளவேண்டும். தற்போது ஒக்ரோபர் மாதம் நடைபெறுகின்றது. விதை உருளைக்கிழங்கு விநியோகம் தொடர்பான நடவடிக்கைகள் இதுவரை விவசாயிகளுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்படும் தோட்ட நிலங்களை தயார் செய்வதிலும் விதை உருளைக் கிழங்கு கொள்வனவுக்கான நிதி நிலைமையை உறுதிசெய்வதற்கும் முடியாமல் உள்ளோம். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உருளைக் கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு விதை உருளைக் கிழங்கு மானிய விலையில் வழங்கப்படலாம் என அதிகாரிகள் தரப்பில் வாய்மொழியாகக் கூறப்பட்டது. அது தொடர்பான பதிவுகளும் விவசாயத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவோ அல்லது உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் யாழ். மாவட்ட சமாசத்தின் ஊடாகவோ பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை-என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை நவம்பர் மாதத்தில் ஆரம்பமாகின்ற போதிலும் விதை உருளைக் கிழங்கு தொடர்பாக தகவல்கள் தெளிவு இல்லாத நிலையில் உள்ளன. விதை உருளைக்கிழங்கின் விலை நிலவரம், மானிய விலையில் விதை உருளைக்கிழங்கு பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விவசாயிகளின் விவரம், எந்த அடிப்படையில் தெரிவுகள் நடைபெற்றுள்ளன போன்ற தகவல்கள் தெரியவில்லை. விவசாயிகள் பயிர்ச் செய்கைக்கான நிலத்தை தயார் செய்கின்ற போதிலும் விதை உருளைக் கிழங்கு கொள்வனவு தொடர்பான தயார் நிலைக்கு வரமுடியாதுள்ளது.

விதை உருளைக்கிழங்கு கொள்வனவுக்கான நிதி நிலையை தயார் செய்வதற்கும் முடியாமல் உள்ளது - என்று உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் யாழ். மாவட்ட சமாசத்தின் தலைவர் இ. தெய்வேந்திரம் தெரிவித்தார். (ற-21,11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ‘செல்ஃபி’ எடுக்கும் மோகம்; அபாயத்தை உணர்வோமாக!

செல்ஃபி (Selfie) என்றழைக்கப்படும், ஒருவர் தன்னைத்தானே கைபேசியில் படம் எடுத்து மகிழ்வதானது உலகம் முழுவதிலும் குறிப்பாக இளம் பெண்கள், ஆண்கள் மத்தியில் ஒரு விசித்திர கலாசாரமாக விரிவடைந்துள்ளது. முக்கியமான ஒரு பிரமுகரோடு அல்லது நண்பர்களோடு அல்லது ஒரு காட்சியைப் படம் எடுக்கும்போது அந்தப் படத்தில் படம் எடுப்பவரான தன்னையும் இடம்பெறச் செய்வதே இதன் நோக்கம். ஆனால் அளவுக்கு அதிகமாக ஆர்வம் கொள்வது அல்லது கெட்டித்தனமாகச் செயற்படுவதாக எண்ணிக்கொண்டு அவ்வாறு செயற்படுவதானது சிலசமயம் அவர்களின் உயிருக்கே உலை வைப்பதாக அமைந்து விடுகின்றது.

சமூக வலைத்தளங்களில் இவ்வாறான அபாயகரமான சூழ்நிலைகளில் பதிவு செய்யப்பட்ட படங்கள் நிறையவே காட்சிப்படுத்தப்படுகின்றன.

அண்மையில் ரயில் வண்டியில் மிதிபலகையில் பயணம் செய்து கொண்டிருக்கையில் செல்ஃபி ஒளிப்படம் எடுக்க முனைந்த 25 வயதான சீன இளம்பெண் ஒருவர் மிதிபலகையில் இருந்து தூக்கி எறியப்பட்டு உயிர் இழந்தார். அம்பலாங்கொடை என்ற இடத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருந்தது. இதேபோல் ஓமானில் இரண்டு இலங்கை இளம் பெண்கள் நீர் ஊற்றொன்றின் அருகில் செல்ஃபி எடுக்க முனைந்து உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் அவ்வப்போது உலகம் முழுவதுமே நடப்பதாகத் தெரியவருகின்றது.

செல்ஃபி எடுப்பதானது ஒருவரின் சுய மதிப்பை உயர்த்துவதாக இருக்கலாம். ஆனால் தமக்கு சுய மதிப்பு இல்லை அல்லது குறைவு என்று நினைப்பவர்களே செல்ஃபி எடுப்பதில் அதிகம் நாட்டம் கொள்கின்றார்கள் என்பது உளவியலாளர்களின் கருத்து என்கிறார் இந்தத் துறையில் ஆய்வு செய்யும் மருத்துவர் என் கருணாநாயக்க. இந்தக் கலாசாரமானது காலப்போக்கில் ஓர் ஒழுங்கற்ற நிலவரத்தை உலகத்தில் உருவாக்கிவிடும் அபாயம் காணப்படுகிறது என்கிறார்கள் அமெரிக்க உளவியல் நிறுவனத்தின் ஆய்வாளர்கள்.

இந்தத் துறையில் கவனம் செலுத்துபவரான பேராதனைப்பல்கலைக்கழக பேராசிரியர் தயா அமசேகர பின்வரும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

2000ஆம் ஆண்டில் கைபேசி இலங்கையில் அறிமுகமானபோது, நாம் அடுத்தவருடன் தொடர்பு கொள்ள மட்டுமே அதனைப் பயன்படுத்தினோம். பின்னர் கைபேசி சீர்செய்யப்பட்டு செய்திகள் அனுப்பும் மற்றும் படம் எடுக்கும் வசதியும் அதில் சேர்க்கப்பட்டன. வருமானத்தை அதிகரிக்கவே இவ்வாறு செய்யப்பட்டது.

இறுதியாக நம்மை நாமே படம் எடுத்துக் கொள்ளும் செல்ஃபி யுகத்துக்கு வந்திருக்கிறோம். இதன் உற்பத்தியாளர்களின் வருமானம் 100 வீதமல்ல 300 முதல் 400 வீதம் அதிகரித்துள்ளது. இது எமது சமூகத்திற்கு பெரிய சவாலாக அமைந்துள்ளது. இவ்வாறான படங்களை சமூகவலைத் தளங்களில் பதிவேற்றும் போது சில சட்டவிரோத முகவர்கள் அவைகளைத் திருடி தமது தேவைக்குப் பயன்படுத்துகின்றார்கள் அதனால் தற்கொலைகளில் இறங்கும் நிலையும் பலருக்கு ஏற்படுகின்றது.

செல்ஃபி எடுப்பதானது மதுபானப் பழக்கம் போல் சிலரைப்பற்றிக் கொண்டு விடுகின்றது. இவர்கள் செல்ஃபி எடுக்கும்போது ஏற்படக்கூடிய அபாயத்தை உணர்வதில்லை. ஏனென்றால் அவர்களின் கவனம் எல்லாம் தாம் தம்மையும் சேர்த்து எடுக்கும் படத்திலேயே லயித்து விடுகின்றது என்கிறார் பேராசிரியர் அமரசேகர. செல்ஃபி எடுப்பவரின் மனோநிலை மதுசாரப் பிரியர்களின் மனோநிலையைவிட மூன்றுமடங்கு மோசமானதாக இருக்கிறது என்கிறார் அவர். இலங்கையில் இந்தக் கலாசாரம் மிக வேகமாக ப் பரவி வருகின்றது. வடக்கு - கிழக்கில் நிலைமை பரவாய் இல்லைபோல் தோன்றினாலும் செல்ஃபி எடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்காமல் இல்லை.

கைபேசிகளில் படம் எடுக்கின்ற இளைய சமூகத்தினரின் பெற்றோர் இதில் கவனம் செலுத்துவது அவசியம். இதன் எதிர்விளைவுகள் அல்லது அபாயங்கள் குறித்து பெற்றோர் பிள்ளைகளுடன் உரையாடி அறிவுரை வழங்க வேண்டும். குறிப்பாக இளம் பெண்கள் செல்ஃபி எடுத்து பிறருக்கு அனுப்பும்போது மிக கவனமாக செயற்படுவது அவசியம்.

# இராணுவத்தினர் ஈட்டிய போர் வெற்றியை, தமது கணக்கில் வரவு வைக்க முயலும் ராஜபக்சமார்

தமிழில் வீ.எஸ்.ரீ

**மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன நாட்டைக் காப்பாற்றிய இராணுவ உயரதிகாரி என்பதில் சந்தேகமில்லை. ஆனால், மகிந்தவும் கோத்தபாயவும் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் தமது முயற்சிக்கு மேஜர் ஜெனரல் கமல் குணரட்னவையும் ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர்,**

பசில் ராஜபக்ச தலைமையில் புதிதாக உருவாக்கப்படவுள்ள கட்சியின் உறுப்பினர்களாக இராணுவ அதிகாரிகள் மற்றும் இராணுவ வீரர்களை இணைத் துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் செய்தி வெளியாகியுள்ளன. அந்த வகையில் அண்மையில் ‘நந்திக்கடலுக்கான பாதை’ என்ற போர் வரலாற்று நூலை எழுதி வெளியிட்ட மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன என்ற ஓய்வு பெற்ற இராணுவ உயரதிகாரியையும், அந்தக் கட்சியில் இணைத்துக் கொள்ள சம்பந்தப் பட்ட தரப்பினர் முயற்சிப்பதாகவும் தெரிய வந்துள்ளது. ஆயினும் கமால் குணரட்ன தாம் ஒரு போதும் அரசியலில் ஈடுபடப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

‘நந்திக் கடலுக்கான பாதை’ என்ற தமது நூலை அண்மையில் கொழும்பில் வைத்து மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன வெளியிட்டார். அந்த நிகழ்வுக்கு இன்றைய அரசின் உயர்மட்டப் பிர முகர்கள் எவரும் அழைக்கப்படவில்லை. மாறாக முன்னால் ஜனாதிபதி மகிந்த மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரே அழைக்கப்பட்டிருந்தனர். நூலின் முதல் பிரதியையும் மகிந்தவே பெற்றுக்கொண்டார்.

### நல்லாட்சி அரசைக் கவிழ்க்க தலையால் கிடங்கு கிண்ட முயலும் மகிந்த தரப்பினர்

சரத்பொன்சேகாவுக்கும் அவருக்கு ஆதரவு வழங்கிய இராணுவ உயரதிகாரிகளுக்கும் மகிந்த அநியாயங்களைச் செய்தார். அவர்களில் சிலர் சிறைத் தண்டனை பெற்றனர், சிலர் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டனர். இத்தனைக்கும் இராணுவச் சீருடையுடன் எதிரணி அரசியல்வாதிகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டார் என்பதே சரத்பொன்சேகா மீதான குற்றச் சாட்டாகும். அது ராஜதுரோகக் குற்றமாகக் கொள்ளப்பட்டு இராணுவ நீதிமன்றத்தால் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. உண்மையில் சரத் பொன்சேகா செய்த தவறு, எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டமையாகும். பொன்சேகாவுடன் தொடர்பு பேணினர் என்ற குற்றச்சாட்டில் இராணுவ அதிகாரிகள் பலரைச் சிறைக்கு அனுப்பியதும், இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தியதும் அது ராஜதுரோகக் குற்றமென அடையாளப்படுத்தியே. ஆனால், இன்றைய நல்லாட்சி அரசைக் கவிழ்க்கச் சதித்திட்டம் தீட்டும் மகிந்த மற்றும் கோத்தபாய தரப்பினர்களுடன் தொடர்புகளைப் பேணுவது தொடர்பாக மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன மீது இன்றைய அரசு குற்றச்சாட்டெதனையும் முன்வைக்கவில்லை. மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன நாட்டைக் காப்பாற்றிய இராணுவ உயரதிகாரி என்பதில் சந்தேகமில்லை. ஆனால், மகிந்தவும் கோத்தபாயவும் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் தமது முயற்சிக்கு மேஜர் ஜெனரல் கமால் குணரட்னவையும் ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர். மேஜர் ஜெனரல் கமால் குணரட்னவின் ‘நந்திக்கடலுக்கான பாதை’ என்ற நூலின் வெளியீட்டு விழாவை நல்லாட்சி அரசுக்கு எதிரான இராணுவப் புரட்சியாகச் சித்திரிக்க கோத்தபாய முயன்றுள்ளார். தம்முடன் போர் முனையில் கடமையாற்றிய உயர் இராணுவ அதிகாரிகள் பலருக்குத் தாம் அழைப்பு விடுத்திருந்தும் ஒரேயொருவர் மட்டுமே நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு வந்திருந்ததாக கமால் குணரட்ன தெரிவித்திருந்தார்.

குறித்த நிகழ்வுக்கு மேஜர் ஜெனரல் கட்சி பேதமின்றி அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருப்பின், இராணுவ உயர் அதிகாரிகளும் அதில் நிச்சயம் கலந்து கொண்டிருந்திருப்பர். அவ்வாறில்லாது அரசியல்வாதிகள் எவரையும் அழைக்காது இராணுவ அதிகாரிகளுடன் மட்டுப்படுத்தியிருந்தாலும் இராணுவ அதிகாரிகள் அனைவரும் நிகழ்வில் கலந்து கொள்ள வாய்ப்பிருந்தது. ஆனால் குறித்த நிகழ்வை மகிந்த மற்றும் கோத்தபாயவின் அரசியல் பிரபல்யத்துக்கான நிகழ்வாகக் காட்ட முயன்றமை இராணுவத் தரப்பினது வெறுப்புக்குக் காரணமாயிற்று என மேஜர் ஜெனரலின் கருத்து வெளிப்பாட்டின் மூலம் உணரமுடிந்தது.

இராணுவ உயரதிகாரிகளை நிகழ்வில் பங்கேற்க வைப்பித்து, அதன்மூலம் இராணுவத்தரப்பு தற்போதும் தமக்கே ஆதரவாக இருப்பதாக நாட்டு மக்களுக்குக் காட்டிக் கொள்வதே கோத்தபாய தரப்பினரின் திட்டமாக இருந்திருக்கலாம். அதன் மூலம் மைத்திரிபால ரணில் தரப்பினருக்கும் இராணுவத் தரப்பினருக்குமிடையே கருத்து வேறுபாடுகளை உருவாக்க அவர்கள் திட்டமிட்டிருந்திருக்கலாம். 2005 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2006 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் என்பவற்றுக்குப் பின்னர் இடம் பெற்ற சகல தேர்தல்களிலும் இராணுவ வீரர்களது போர் வெற்றியை விற்பனை செய்தே அதனைத் தமது கணக்கில் பதிவிலிட்டு மகிந்தவால் வெற்றி பெறமுடிந்தது.

### பாதுகாப்புச் செயலராக கோத்தபாய நியமிக்கப்பட்ட பின்னர் நலிவு நிலை கண்ட இராணுவத்தினரது கௌரவம்

பொலிஸ் தரப்பினர் மக்கள் மத்தியில் அபகீர்த்திக்கு உள்ளாகியிருந்தனர். ஆனால் இராணுவத் தரப்போ அரசியல்வாதிகளது தேவைக்குத் துணைபோகாது செயற்பட்டமையால் மக்கள் மத்தியில் கௌரவத்துக்கு உரியவர்களாக விளங்கினர்.

இராணுவ வீரர்கள் சிலர் ராஜபக்ச தரப்பினரது ஒப்பந்தங்களை நிறைவேற்றப்போய், இப்போது மாட்டிக் கொண்டுள்ளனர். உண்மையான இராணுவ வீரர்களது கௌரவத்துக்கு இவர்கள் பங்கம் ஏற்படுத்தியுள்ளனனர். அவர்கள் நீதியின் முன்னிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும். அப்போதுதான் உண்மையான இராணுவ வீரர்களுக்கும், ராஜபக்ச தரப்பினருக்காக ஒப்பந்த வேலைகளை நிறைவேற்றிக் கொடுத்த ஒழுக்கமற்ற இராணுவ வீரர்களுக்கும் இடையேயான வேறு பாட்டை நாட்டு மக்கள் உணர்ந்து கொள்வர்.

*சிங்கள மொழி மூலம் மவ்பிம*
*(உப்புல் யோசெப் பெர்னாண்டோ)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்



# பிளவை எதிர்கொள்ளாது நல்லாட்சி அரசு

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே பிளவை ஏற்படுத்துகின்ற முயற்சிகளில் மகிந்த அணியினர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அந்தப் பதவியில் இருந்து அகற்றிவிட்டு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்குமாறு கோரியுள்ளதன் மூலமாக அந்த அணியின் துர்நோக்கம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில் ஆட்சியை அமைப்பதற்கான பெரும்பான்மைப் பலத்தை ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் தனித்தனியே கொண்டிருக்கவில்லை. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி அதிக இடங்களைக் கொண்டுள்ளது. அதற்கு அடுத்த நிலையிலேயே சிறிலங்கா சுதந்திரக்கட்சி உள்ளது. அதிலும் மைத்திரி அணி, மகிந்த அணியென இரண்டாகப் பிரிவடைந்த நிலையில் காணப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியும், மைத்திரி அணியும் இணைந்துதான் நல்லாட்சி அரசு ஆட்சியில் அமர்ந்துள்ளது.

**சிங்கள மக்கள் மத்தியிலான வடக்கு முதலமைச்சரது பிம்பம் எழுக தமிழ் ஊர்வலத்தால் பின்னடைவு**

தற்போது எழுக தமிழ் ஊர்வலமும், வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனின் உரையும் தென்னிலங்கை இனவாதிகளுக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்து விட்டன. விக்னேஸ்வரனை ஓர் ஆயுதம் தரித்த போராளியாகவே அவர்கள் சித்திரித்து வருகின்றனர். இதோ தமிழ் ஈழம் உருவாகப் போகின்றதென அவர்கள் கூச்சல் போடுகின்றனர். அங்குள்ள மக்களைக் குழப்பி விடுகின்றனர். மகிந்த அணியிலுள்ள இனவாதிகளும் விக்னேஸ்வரனை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர். விக்னேஸ்வரனின் உரையில் ஒன்றுமே இல்லை. அதைப் பெரிதுபடுத்திக்காட்ட வேண்டிய அவசியமே இல்லையென எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன் கூறிய பின்னரும், தெற்கின் இனவாதக் குரல்கள் ஓயவில்லை. இந்த நிலையில்தான் நல்லாட்சி அரசு ஏன் விக்னேஸ்வரனைக் கைது செய்யவில்லை என்ற கூக்குரலும் தெற்கில் எழத் தொடங்கியது. அரசுக்கும் விக்னேஸ்வரனுக்குமிடையில் ஏதோ தொடர்பு இருப்பது போன்ற மாயையும் இனவாதிகளால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதில் பிரதமரின் பெயரும் அடிபடத் தவறவில்லை. இத்தகையதொரு சூழ்நிலையில்தான் பிரதமரைப் பதவி விலக்க வேண்டுமென்ற கோரிக்கை மகிந்த அணியிடமிருந்து கிளம்பியுள்ளது.

ஆனால், மகிந்த அணியினரின் கபடத்தனங்களை ஜனாதிபதி மைத்திரி நன்கு புரிந்து வைத்துள்ளார். மேலும், தம்மை ஜனாதிபதிப் பதவியில் அமர்த்துவதற்கு ஆரம்ப கர்த்தாவாக இருந்து பாடுபட்டவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்பதையும் அவர் ஒரு போதுமே மறந்துவிடமாட்டார். ஆனால் மகிந்த அணியினர் பல்வேறு குற்றச்சாட்டுக்களில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கும், மத்தியில் அதிகாரம்மிக்க பதவியொன்றின் தேவையை உணர்ந்துள்ளனர். ஜனாதிபதியும், பிரதமரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்துவிட்டால் தாம் நினைத்ததை எல்லாம் சாதித்து விடலாமெனஇவர்கள் நம்புகின்றனர்.

**அரசியலில் இருந்து ஒதுங்காததால் உலக ரீதியான மகிந்தவின் பிம்பம்**

ஏதாவதொரு உயர்ந்த பதவியில் அமர்ந்திருந்தவர் அதற்குக் கீழுள்ள பதவியில் அமர்கின்ற வழக்கம் எங்கும் இடம்பெறுவதில்லை. இதையொரு அவமானமான செயலாகவே பலரும் கருதுகின்றனர். ஆனால், எமது நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் இதில் கூடத் தவறான முன்னுதாரணத்தைக் கொண்டிருக்கின்றனர். சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்திருந்தவர் மகிந்த ராஜபக்ச. நீதிமன்றங்கள்கூட அவரது உத்தரவுக்காகக் காத்திருந்தன. காவல் துறை யின் உயரதிகாரிகள் அவர் இட்ட கட்டளைகளை நிறைவேற்றுவதற்குக் காத்துக்கிடந்தனர். முப்படைகளின் பிரதான தளகர்த்தரும் அவர்தான். சுருக்கமாகக் கூறினால் இந்த நாட்டில், எல்லாமே மகிந்தவின் காலடியில் கட்டுண்டு கிடந்தன. இத்தகைய பெருமைக்குரியவராகத் திகழ்ந்த மகிந்த ராஜபக்ச, தற்போது சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற ஆசன மொன்றை அலங் கரித்து வருகின்றார். தமது ஆயுள் காலம் முடிவடைவதற்குள் நாட்டின் ஏதாவதொரு உயர் பதவியில் அமர்ந்து விடுவதே இவரது பிரதான நோக்கமாக உள்ளது. இவரைத் தூண்டி விடுவதற்கென்றே சிலர் இவருக்கு அருகில் அமர்ந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியை நல்லாட்சியிலிருந்து ஒதுக்கி வைப்பதென்பது கனவிலும் முடியாத ஒரு காரியமாகும். ஏனென்றால் அது இன்று நாட்டில் பலமாக வேரூன்றி நிற்கின்றது. அந்தக் கட்சியில் புதிதாக இணைந்து கொள்பவர்களின் தொகையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் வெளிநாடுகளின் ஆதரவைப் பெற்ற ஒரு தலைவராகக் காணப்படுகின்றார். நாட்டு மக்களின் பொருளாதாரச் சுமைகளைக் குறைத்துவிட்டால் இவரது செல்வாக்கு மேன்மேலும் உயர்ந்து விடும்.

ஆகவே மகிந்த அணியினரின் அரசியல் சித்து வேலைகள் இவரிடம் ஒருபோதுமே எடுபடப் போவதில்லை. அது மட்டுமல்லாது அடுத்த சில ஆண்டுகளுக்கு மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்த நல்லாட்சி தொடரத்தான் போகின்றது.

## சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மனித நேயச் செயற்பாடுகள் பெறுமதிமிக்கவை

கடந்த காலப் போராட்டப் பின்னடைவையும், மக்களின் அநியாயச் சாவுகளையும் பொறுக்க முடியாததால் கடுமையான மனச் சோர்வு, ஆளுமைக் குறைபாடு, மனக்குழப்பம் போன்ற உளவியல் தாக்கங்களால் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். 2009 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து இன்று வரை அதற்கான சிகிச்சை பெற்று வருகின்றேன். இப்படிப்பட்ட என்னால் தொழில் எதுவும் செய்ய முடியவில்லை. எனக்கு மூன்று சிறுகுழந்தைகள். வறுமை எனும் நோயோடு போராடி வருகின்றார் மனைவி. எனக்கு எவருடைய உதவிகளும் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் வாழ்ந்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் என்ற மன ஆவல் இன்றும் எனக்குண்டு. தமிழ்ப்புலவர் ஒளவையார் 'ஐயம் புகினும் செய்வன செய்' என்கின்றார். எனக்கு அடிக்கடி உள நெருக்கீடுகள் தோன்றிய வேளைகளில், சாவே முடிவென முடிவெடுத்தும் இருக்கின்றேன். இப்படிப்பட்ட தருணங்களில் உதவவும் இன்னும் பல சேவைகளை வழங்கவும் சுகாதார சேவைகள் திணைக்களம் தற்போது 'நேயம்' என்ற பெயரூடாக இலவச தொலைபேசிச் சேவையை 24 மணி நேரமும் வழங்கி பெரும் ஆறுதலையும் அன்பையும் காட்டி வருகின்றது. என் போன்ற உளவியல் தாக்கத்துக்கு உள்ளான, நான்நேசிக்கும் நோயாளர்களே! நீங்களும் தற்கொலை புரிவதை மறந்து மன ஆறுதல் அடைய வேண்டுமானால் உங்களால் முடியாவிட்டால் தங்கி வாழ்வோரிடமாவது உதவியைப் பெற்று தொலைபேசி இலக்கம் 0212226666 என்ற இலக்கத்தின் ஊடாக குறித்த சேவையைப் பெற்றுக் கொள்வது பெறுமதிமிக்கது.

கறுக்காயூரான்.

## பருத்தித்துறை நகரச் சூழலில் தேசிய பாடசாலை ஒன்று அவசியம்

பருத்தித்துறை நகரச் சூழலில் தேசிய பாடசாலையொன்று இல்லாமை பெரிய குறையாகும். பருத்தித்துறைத் தொகுதியில், சிதம்பராக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயம், மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி என்பவை முன்னணிக் கல்வி நிறுவனங்களாக இயங்கி வருகின்றன. அண்மையில் வெளியான 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் படி 152 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர் களுக்கே இந்தப் பாடசாலைகளில் அனுமதி கிடைக்கவுள்ளது. ஏனையோர் நெல்லியடி மத்திய கல்லூரியை (தேசியப் பாடசாலை) நாடுகின்றனர். கிட்டத்தட்ட 5கி.மீ தூரம் கடந்து நெல்லியடிக்கு போக்கு வரவு மேற்கொண்டாக வேண்டும். எனவே சகல வளங்கள் நிரம்பிய ஆண், பெண் கல்லூரிகளைத் தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்தினால் பருத்தித்துறை சூழலுக்கு வரப்பிரசாதமே. உரிய கல்வி நிர்வாகம் கவனம் செலுத்துமாக.

வ.சி. ஸ்ரீஸ்கந்தராசா ஆத்தியடி. புலோலி.

## இருண்ட வீதியில் எதிர்படும் இடர்கள்

யாழ். அளவெட்டி அருணாசலம் பாடசாலை வீதியில் மின் விளக்குகள் பொருத்தப்படாததன் காரணமாக அந்தப் பகுதி வாழ் மக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த வீதிவழியாக வயல் வேலைக்குச் சென்று வீடு திரும்பும் விவசாயிகள், கால்நடை மேய்ப்போர் போன்றோர் அதிக அளவில் பயணம் செய்கின்றனர். மேலும் விசப் பிராணிகளின் நடமாட்டமுள்ள இடமாகவும் மது அருந்துபவர்களுக்கு ஒரு களமாகவும் இந்த வீதி காணப்படுகின்றது. பருவகால மழை தொடங்கவுள்ளதனால் இந்த வீதிக்கான மின்விளக்கின் தேவை அதிமுக்கியமானதாகக் காணப்படுகின்றது. இது குறித்து உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வது வலிகாமம் வடக்கு உள்ளூராட்சிச் சபையின் பிரதான கடமையாகும். இந்தப் பிரச்சினைக்கான தீர்வை உரிய அதிகாரத் தரப்பினர் பெற்றுத் தருவார்கள் என உறுதியாக நம்புகின்றேன்.

அளவையூரான்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விபரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ். ஆயுதக்குழுவுக்கு முடிவுகட்ட ஈராக் இராணுவம் தீவிர முனைப்பு

பக்தாத், ஒக். 17
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து மோசூலைக் கைப்பற்றவும் அந்த அமைப்புக்கு மிகப்பெரும் பின்னடைவை ஏற்படுத்தவும் தாம் தயாராகிவிட்டதாக ஈராக் இராணுவம் அறிவித்தது.



ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடாக ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரியா இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு அறிவித்து அங்கு தனது கொடூரத்தனமான ஆட்சியை அரங்கேற்றி வருகிறது. அமெரிக்காவின் தலைமையில் கூட்டுப்படைகளும், ரஷ்யாவும், சிரிய அரச படையும், ஈராக் இராணுவமும் அந்த அமைப்புக்கு எதிராக கடும் போரில் ஈடுபட்டு வருகின்றன.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரின் பலமாகவும் தலைமையகமாகவும் ஈராக்கின் மோசூல் நகரமே உள்ளது. இந்த நிலையில் அதை மீட்க ஈராக் இராணுவத்தினர் தயார் நிலையில் உள்ளதாக ஈராக் இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.


30 ஆயிரம் இராணுவத்தினர் மோசூலை மீட்கத் தயார் நிலையில் உள்ளனர். 2003 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஈராக் இராணுவத்தின் மிகப்பெரும் நடவடிக்கையாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது. அனைத்தும் தயார் அனைவரும் தயார். பிரதமரின் கட்டளையை எதிர்பார்த்துள்ளோம். கட்டளை கிடைத்ததும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மோசூலில் வேட்டையாடப்படும். சமீபகாலமாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் பின் தள்ளப்பட்டுள்ள நிலையில் இந்தப் போர் வெற்றியைத்தரும் என என ஈராக் படைத்தளபதி நிஜிம் அல் ஜுபோரி தெரிவித்தார்.

அண்மையில் குவயாராப் பகுதியை இராணுவத்தினர் ஐ.எஸ் அமைப்பிடம் இருந்து கைப்பற்றினர். இதனை அடுத்து, அப்பகுதி வீடுகள் சோதனையிடப்பட்டன. தொலைத்தொடர்பு சாதனங்கள், ஏனைய சாதனங்கள் பல கைப்பற்றப்பட்டதாகவும் அரசுக்கு எதிராகச் செயற்படுபவர்கள் பலரைக் கைது செய்ததாகவும் இராணுவம் தெரிவித்திருந்தது. ஆனால் குவயாராப் நகரைப் போன்று மோசூலை எடைபோட்டுவிட முடியாது. மோசூல் நகரில் 6 லட்சம் குடியிருப்புக்கள் உள்ளன.

அவர்களைத் தமது பாதுகாப்புக் கேடயமாகப் பயன்படுத்தி. அவர்கள் மத்தியில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் தமது இருப்பைத் தக்கவைத்துள்ளனர். இதனால் ஈராக் இராணுவம் மக்களைப் பாதுகாக்கும் அதேநேரம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைக் கொன்று குவிக்கவேண்டிய இருமுனைப் போரில் ஈடுபடவேண்டிய அவசியம் உள்ளது.

மோசூல் மீட்கப்பட்டால் அது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் அழிவுக்கான பலமான அடித்தளமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. ஈராக் படையுடன் அமெரிக்காவின் தலைமையில் கூட்டுப்படைகளும் களமிறங்கவுள்ளமை இராணுவ பலத்தை இரட்டிப்பாக்கியுள்ளது. (ம-ரி4)

## இந்தியா- ரஷ்யா இடையே 16 ஒப்பந்தங்கள் கைச்சாத்து



இந்தியா - ரஷ்யா இடையே காவோவ் ஹெலி, ஏவுகணைத் தயாரிப்பு, அணுவுலை உள்ளிட்ட 16 ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன.

பிரிக்ஸ் மாநாடு கோவாவில் நேற்றும், நேற்றுமுன்தினமும் நடைபெற்றது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் இதில் கலந்து கொண்டார். இந்தியா- ரஷ்யா இடையிலான நல்லுறவு தொடர்பாக மோடியும், புடினும் ஆலோசனை நடத்தினர். ஏற்கனவே திட்டமிட்டபடி 16 ஒப்பந்தங்கள் உத்தியோகபூர்வமாகக் கைச்சாத்தாகின.

ஆந்திரா ஸ்மார்ட் நகரத் திட்டம், ஆந்திராவில் கப்பல் கட்டுமான மையம், ஹரியானா ஸ்மார்ட் நகரத் திட்டம், எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகள், எரிசக்தி ஒப்பந்தம், அதிவிரைவு ரயில் திட்டம், காவோவ் ஹெலிகாப்டர் ஒப்பந்தம், எரிசக்தித் துறை ஒப்பந்தம், இந்திய - ரஷ்யா அயலுறவுத்துறை அமைச்சர்கள் ஆலோசனைக்கான முன்னேற்பாடு திட்டம், சைபர் பாதுகாப்பு, அணுவுலை ஏனைய ஏவுகணை ஒப்பந்தங்கள் என 16 மிகமுக்கிய ஒப்பந்தங்கள் இருநாடுகளுக்கும் இடையில் கைச்சாத்தாகின.

புடினுடன் விரிவான ஆலோசனை மேற்கொண்டேன். இந்தியா மீது அவர் கொண்டுள்ள ஈடுபாடு இரு நாட்டு உறவையும் வலுப்படுத்துவதற்கான மிகப் பெரிய ஆதாரம். இந்தியாவின் பழைய நண்பர் ரஷ்யா. புதிய நண்பர்கள் இருவரைவிட ஒரே ஒரு பழைய நண்பர்மேலானவர். பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் ரஷ்யா இந்தியாவைப் பிரதிபலிக்கிறது. எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ரஷ்யா ஆதரவளிப்பதை வரவேற்கிறேன். பயங்கரவாதிகளையும், அவர்களுக்கு துணை போகிறவர்களையும் இந்தியாவும், ரஷ்யாவும் எள்ளளவும் ஏற்றுக் கொள்ளாது என மோடி தெரிவித்தார். (மரி4)



ஆஸ்திரேலியாவில் வருடாந்த சேற்றுத் திருவிழா அண்மையில் நடைபெற்றது. சேற்றில் காளையை அடக்கும் போட்டி, வாகன ஓட்டம், கேளிக்கை நிகழ்ச்சிகள் ஆகிய போட்டிகள் சேற்றுத் திருவிழாவின் சில பகுதிகளாக அமைந்துள்ளன. (ம-ரி4)

## காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த

கிகாலி, ஒக். 17
200 நாடுகள் இணைந்து காலநிலை மாற்றத்துக்கு எதிரான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.



உலக வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான மாநாடு ருவண்டாவில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. 200 நாடுகளுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்ட னர். காபன் வாயு வெளியேற்றத்தை முற்றாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சீறிப் பாயவுள்ளது ஷெங்ஸோ – II

சீனாவின் ஷெங்ஸோ– II என்ற விண்கலம் விஞ்ஞானி களுடன் இன்று விண்ணில் சீறிப்பாயவுள்ளது.
விண்வெளியில் நிரந்தரமான ஆய்வு நிலையத்தை நிறுவி விடத் திட்டமிட்டுள்ள சீனா கடந்த 2013 ஆம் ஆண்டு டியாங்காங் – 1 என்ற ஆய்வு விண்கலத்தை விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலத்தில் சென்ற மூன்று சீன விஞ்ஞானிகள் 15 நாட்கள் விண்வெளியில் தங்கியிருந்து பல்வேறு கட்ட ஆராய்ச்சிகளை நடத்தி முடித்து, வெற்றிகரமாகப் பூமிக்கு திரும்பினர்.
ஜிகுவான் மாகாணத்தில் உள்ள கோபி பாலைவனம் பகுதியில் இருந்து டியாங்காங் – 2 என்ற விண்கலத்தை கடந்த மாதம் 15 ஆம் திகதி சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
இதனையடுத்து, ஷெங்ஸோ – II என்ற விண்கலத்தில் இரண்டு விஞ்ஞானிகளை விண்வெளிக்கு அனுப்பி டியாங்காங் –2 விண் கலத்துடன் இணைத்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள சீனா பரிசோதனை செய்தது. நீண்ட முயற்சியின் பின்னர் குறித்த விண்கலம் இன்று காலை 7.30 மணிக்கு விண்ணில் சீறிப்பாயவுள்ளது. எதிர்வரும் 2022 ஆம் ஆண்டுக்குள் விண்வெளியில் நிரந்தரமான ஆய்வு நிலையத்தை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம–ரி4)

# ஐ.எஸ்.ஐ.ஸ். ஆயுததாரிகள் 100 பேர் உடல் சிதறிச் சாவு


## எகிப்துஅதிரடி



கைரோ, ஒக். 17
சீனாய்பகுதியில்ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் நடத்திய தாக் குதலில் 15 எகிப்து இராணுவச் சிப்பாய்கள் சாவடைந்தனர். இதற்குப் பதிலடியாக ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் நூறு ஆயுததாரிகளைக் கொன்று குவித்தது எகிப்து.
சீனாய் பகுதியில் எகிப்து இராணுவத்தினருக்குச் சொந்த மான சோதனைச் சாவடியில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 15 இராணுவச் சிப்பாய்கள் சாவடைந்தனர். சிலர் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்கு தலைத் தாமே நடத்தியதாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது.
இதற்குப் பதிலடியாக எகிப்திய இராணுவம் நேற்று வான் தாக்குதல் நடத்தியது. ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் முகாம்களைக் குறிவைத்து குண்டுமழை பொழியப்பட்டது. இந்தத் தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமான வர்கள் கொல்லப்பட்டனர் என எகிப்து இராணு வம் தெரிவித்தது. (ம–ரி4)

# அபுதாபியில் இந்து ஆலயம்

அபுதாபி, ஒக். 17
ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் முதல் முறையாக இந்துக் கோயில் ஒன்றை நிர் மாணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
அபுதாபியில் இந்துக் கோவில்கள் இல்லை. இந்தியப் பிரதமர் மோடி அண்மையில் அங்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது இந்துக் கோவிலொன்று அபுதாபியில் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். குறித்த விடயம் பரிசீலனை செய்யப்பட்டு அங் குள்ள அல் வத்பா பகுதியில் 20 ஆயிரம் சதுர அடிப் பரப்பில் இந்துக் கோயிலொன்று அமைக் கப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அடுத்த வரு டம் கட்டுமானப்பணிகள் ஆரம்பமாகும். 9 மாதங் களில் கட்டுமானப் பணிகள் முடிவடையும் என ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்த னர். (ம–ரி4)





# பங்களாதேஷுடன் 27 ஒப்பந்தங்கள் சீன ஜனாதிபதி ஜின்பிங் அதிரடி

பங்களாதேஷுடன் 27 ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது சீனா.
கோவாவில் நேற்றும் நேற்றுமுன்தினமும் பிரிக்ஸ் உச்சி மாநாடு நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக சீனாவிலிருந்து புறப்பட்ட அந்த நாட்டு ஜனாதிபதி ஜின்பிங் முன்னதாக பங்களாதேஷுக்குச் சென்றிருந் தார். இந்த திடீர் சுற்றுப்பயணத்தின் மூலம் 30 வருடங்களின் பின்னர் பங்களாதேஷுக்குச் சென்ற முதல் சீன ஜனாதிபதி என்ற சிறப்பை அவர் பெற்றார்.
பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவைச் சந்தித்துப் பேசிய அவர், இரு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் வர்த்தக தொடர்புகள் தொடர்பாக விரிவான ஆலோசனை நடத்தி 27 முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். பாதுகாப்பு, கடன்கள், உள்கட்ட மைப்பு, வர்த்தகம் ஆகிய துறைகளில் குறித்த ஒப்பந்தங்கள் அமைந் ததாக பங்களாதேஷ் பிரதமர் தெரிவித்தார். (ம–ரி4)

## இந்தியாவில்

# 200 கோடிமதிப்புள்ள பாம்பு விசம் பறிமுதல்

இந்தியாவில் இருந்து பிரான்ஸ் நாட்டுக்குக் கடத்துவதற்குத் திட்டமிட்ட 200 கோடி ரூபாய் மதிப்புள்ள பாம்பு விசம் இந்திய வனத்துறையினரால் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டது.
இந்தியாவின் சிலிகுரி மாவட்டத்தில் உள்ள விடுதியில் சிலர் பல கோடி ரூபாய் மதிப்புள்ள நாகபாம்பு விசத்துடன் காத்திருப்பதாக அந்த மாநில வனத்துறைக் காவலர்களுக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, வாடிக்கையாளர்கள்போல் அந்த விடுதிக்குச் சென்ற வனத்துறை அதிகாரிகள் அங்கு ஐந்து ஜாடிகளில் வைக்கப்பட்டிருந்த பாம்பு விசத்தைப் பறிமுதல் செய்தனர். சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டனர். ஐந்து ஜாடிகளிலும் உள்ள விசம் பன்னாட்டுச் சந்தையில் கிட்டத்தட்ட 200 கோடி ரூபா மதிப்புடையது. சம்பவம் தொடர் பாக நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடத்தில் முன்னெடுக்கப் பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த விசம் இந்தியாவிலிருந்து பிரான்ஸுக்குக் கடத்தத்திட்டமிடப்பட்டிருந்தது தெரியவந்தது. தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)



# 200 நாடுகள் சேர்ந்து கூட்டு ஒப்பந்தம்



கட்டுப்படுத்தும் திட்டத்துக்கு அவர்கள் அனைவரும் தமது ஆதரவைத் தெரிவித் தனர்.
சீனா உள்ளிட்ட 100 நாடுகள் 2024 ஆம் ஆண்டிலிருந்து தமது நடவடிக்கை ஆரம்பிப்பதாகவும். இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் தமது நடவடிக்கைகளை 2018 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கவுள் ளதாகவும் தெரிவித்தன.
இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் இந்த நூற்றாண்டுக்குள் உலக வெப்பநிலை 0.5 பாகையால் குறையும் எனச் சொல்லப்படுகிறது.
காபன் வெளியீடு அற்ற உலகத்தை உருவாக்கு வதற்கு அனைத்து நாடுகளும் ஓர் இலட்சியத் தின் கீழ் ஒன்று திரண்டுள்ளமை பெருமிதம் தருகிறது. அனைத்து நாடுகளும் பாராட்டப்பட வேண்டியவை என [illegible] வளத்துறை [illegible] தெரிவித்தார். (ம–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரிய ஏவுகணை சோதனை தோல்வி என்கிறது அமெ.

வொஷிங்ரன், ஒக். 17
வடகொரியாவின் கண்டம் விட்டுக் கண்டம் தாண்டும் ஏவுகணைச் சோதனை தோல்வியைத் தழு வியதாக அமெரிக்க இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.
உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி வடகொரியா தொடர்ந்து பல ஏவு கணைச் சோதனைகளையும், அணுவாயுதச் சோதனைகளை யும் நடத்தி வந்தது. அந்த நாட்டின் ஆறாவது சோதனை நேற்றுமுன் தினம் நடைபெற்றது. அயல் நாடான தென்கொரியா இந்தத் தகவலை வெளிப்படுத்தியது.
இதனையடுத்து குறித்த கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையை அமெரிக்காவும் ஐக்கிய நாடுகள் சபையும் தீவிர மாகக் கண்காணித்து வந்தன. நேற்றுமுன்தினம் சோதனை நடத் தப்பட்டது. அது தோல்வியில் முடிந் ததாக அமெரிக்கா தெரிவித்தது. தோல்வியில் முடிவடைந்தாலும், உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி அரங்கேற்றப்பட்ட குறித்த சோத னையைத் தாம் கண்டிப்பதாக அமெரிக்க இராணுவத் தலைமை யக ஊடகப் பேச்சாளர் தெரிவித் தார். (ம–ரி4)

# ஒக்ரோபர் மாத




# ராசி பலன்

## மகரம்

கடந்த காலத்தை எளிதில் மறக்காத மகரராசிக்காரர்களே ராஜ கிரகங்களான குருவும், சனியும் வலுவாக இருப்பதால், உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். குடும்பத்தில் அமைதி திரும்பும். அடுத்தடுத்து சுப நிகழ்ச்சி களால் வீடுகளை கட்டும். பூர்வீகச் சொத்தை சீர்செய்வீர்கள்.

கோயில் விழாக்களில் முதல் மரியாதை கிடைக்கும். பாகப் பிரிவினை நல்ல விதத்தில் முடிவடையும். பங்குச் சந்தை மூல மாக பணம் வரும். வேற்றுமதத்தவர்கள், வெளிநாட்டிலிருப்பவர் களால் அதிரடி மாற்றம் உண்டாகும். புதிய பதவிகள் தேடி வரும். சுக்கிரனும், புதனும் சாதகமான வீடுகளில் செல்வதால் பிள்ளை களின் தனித்திறமைகளைக் கண்டறிந்து ஊக்கப்படுத்துவீர்கள்.

மகனுக்கு அயல்நாட்டில் வேலை கிடைக்கும். உயர் கல்விக்காக வு அனுப்பி வைப்பீர்கள். வீடு கட்டும் பணி விரைவடையும். வாகனம் புதிதாக வாங்குவீர்கள். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். 24 ஆம் திகதி வரை செவ்வாய் 12 ஆம் இடத்தில் மறைந்திருப்பதால் திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர் கள். சகோதரங்களுடன் விவாதங்கள் வரும். வீடு, மனை வாங்கு வது, விற்பதில் சிக்கல்கள் வந்து போகும்.

16ஆம் திகதி வரை 9ஆம் வீட்டில் சூரியன் நிற்பதால் தந்தை யாருக்கு மூச்சுத் திணறல், மூட்டு வலி வந்துபோகும். அரச விட யம் தள்ளிப் போய் முடியும். அநாவசியச் செலவுகளை தவிர்க்கப் பாருங்கள். சர்ப்ப கிரகங்கள் உங்களுக்குச் சாதகமாக இல்லாத தால் உங்களைப் பற்றிய வதந்திகள் ஆங்காங்கே பரவும். பல வற்றையும் நினைத்துக் குழம்பாதீர்கள். முன்கோபத்துடன் பேசி, சொற் குற்றம், பொருட் குற்றத்தில் சிக்கிக் கொள்ளதீர்கள்.

**கன்னிப் பெண்களே!**

பெற்றோருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். நீண்ட நாள்களாக பார்க்க நினைத்த தோழியைச் சந்திப்பீர்கள். வியாபாரத்தில் புதிய சரக்கு கள் கொள்முதல் செய்வீர்கள். சந்தை ரகசியங்களைத் தெரிந்து கொள்வீர்கள். புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். மூத்த அதிகாரிகள் பக்கபலமாக இருப்பார்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலை களைப் பகிர்ந்து கொள்வார்கள். கலைத்துறையினரே! புதுமையாகச் சில படைப்புக்களை வெளியிட்டு, அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். புதிய பாதையை நோக்கிப் பயணித்து வெற்றி பெறும் மாதம் இது.

## நாளை

**ஐப்பசி-02**

செவ்வாய்க்கிழமை -18.10.2016
திதி: பரணி மு.ப. 09.24
நட்சத்திரம்: திருதியை பி.இ.03.33
ராகுகாலம்: 03.02-04.32 வரை
சுபநேரம்: 10.32-12.02 வரை
கார்த்திகை விரதம்

## சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுக்காத அரச அதிகாரிகள்

வடக்கு மாகாணத்தில் தற்போது போதைப் பொருள்கள் கடத்தி வரப்படுகின்றன. அவை இந்தியாவில் இருந்து கடல் வழியாக எடுத்து வரப்பட்டு யாழ். குடாநாடு உட்பட, வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் புழக்கத்திற்கு விடப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட அமைச்சர்களும், அதிகாரிகளும் அடிக்கடி கூறிக் கொள்கின் றார்கள். இதைத் தடுப்பதற்கு பொலிஸார் மற்றும் கடலோரக் காவல் படையினர் மும்முரமாகச் செயற் படுகின்றனர் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கஞ்சா போன்ற போதைப் பொருள்கள் வடக்கில் உற்பத்தி செய்யப் படுவதில்லை. அவை வெளிநாடுகளில் இருந்துதான் இங்கு கொண்டுவரப்படுகின்றன. எனவே அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குக் காலம் எடுக்கும் என வைத்துக்கொள்வோம்.

வடக்கு மக்களுடைய குறிப்பாகப் பெண்களுடைய வாழ்க்கையைச் சீர்குலைக்கின்ற கசிப்பு எங்கிருந்தும் இங்கு கொண்டுவரப்படுவதில்லை. அது இங்கேயே உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் பல குடும்பங்களில் இன்றும் பிரச்சினைகள் அதிகம். பல குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன. இதுவும் அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தெரியாத விடயம் அல்ல. வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் போதைப் பொருள்களைத் தடுப்பதற்கு அல்லது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு முயற்சிக்கும் அவர்கள், ஏன் எமது பிரதேசங்களில் உற்பத்தியாகும் இவ்வாறான சட்டவிரோத உற்பத்திகளுக்கு இன்றுவரை முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்பதே மக்களுடை ய கேள்வியாக உள்ளது.

இந்தக் கசிப்பை உற்பத்தி செய்பவர்களும், நுகர்பவர்களும் எமது பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். இவ்வாறு இருக்கையில், எமது பிரதேசத்தைச் சேர்ந்த அதிகாரிகளாலோ, அல்லது, அரசியல் தலைவர்களாலோ இவற்றை ஏன் முறியடித்து எமது மக்களைப் பாதுகாக்க முடிய வில்லை? மாவட்டத்துக்குப் பொறுப்பாக உள்ள மாவட் டச் செயலாளர்கூட இது குறித்து எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதுதான் உண்மை.

பின்தங்கிய பிரதேசங்களில் கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பத் தலைவர்களை இலக்காகக் கொண்டு விற்பனை செய்யப்படுகின்றது. ஆங்காங்கே இதுபோன்ற ஒரு சில கசிப்பு உற்பத்திகள் முறியடிக்கப்பட்டாலும்; பெருமளவில் தற்போதும் உற்பத்தி செய்யப்படுகின்றதைப் பத்திரிகைகள் வாயிலாகக் காணக் கூடியதாகவே உள்ளது. இப்போது கசிப்பு விற்பனை தந்திரமாக இடம் பெறுகின்றது.




கடைகளில் உணவு பார்சல் கட்டும்போது, "இரசத்தை" எவ்வாறு சிறிய சொப்பிங் பையில் கட்டித் தருவார்களோ அதேபோன்று இப்போது கசிப்பும் சொப்பிங் பையில் கட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு பைக்கட் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

அந்தப் பைக்கட்டுக்களை வெளியில் கொண்டு செல்லும்போது பிரச்சினைகள் ஏற்படாத வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டவிரோதச் செயற்பாட்டாளர்களே இதுபோன்று பல விதமாக சிந்தித்து தங்களுடைய செயற்பாடுகளை விரிவாக்கும் போது கல்வி அறிவு உடையவர்கள் என்று கூறப்படும் அதிகாரிகள், என்ன செய்கின்றார்கள்? மாவட்டச் செயலாளரால் இந்த செயற்பாடுளை கட்டுப்படுத்த இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கமுடியாதா? இதுபோன்ற பல கேள்விகள் எம்முள் எழுகின்றன.

இதைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. செய்திகள் வந்தால் இதுபோன்ற செயற் பாடுகள் இடம்பெறுகின்றன என்பதை அறிவார்கள். அதன் பின்னர் எதுவும் கிடையாது. இவர்களிடம் இந்த அசமந் தப்போக்கு இருக்கும்வரை, எமது பிரதேசத்தில் இடம் பெறுகின்ற சட்ட விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தமுடியாது. எமது சமுதாயத்தினுடைய நலன்கள் கேள்விக்குறியாகவேதான் இருக்கும். கொழும்பு அமைச்சால் முன்னெடுக்கப்படும் தேசிய நிகழ்வுகளை இங்கு நடைமுறைப்படுத்துவதற்கு மட் டுமே இந்த ஜாம்பவான்கள் உள்ளனரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.அஜித் சஞ்ஜீவ்

# திட்டமிடலில் கிராமிய அபிவிருத்தி

கிராமிய அபிவிருத்தி என்பது கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் கிராமியப் பகுதியை முழுமையாக அபிவிருத்தி செய்தல் என்ற விடயத்துடன் தொடர்புடையது. கிராமிய அபிவிருத்தி பல நோக்கங்களைக் கொண்ட எண்ணக்கருவாகும். இது விவசாய அபிவிருத்தி, அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளின் அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில்கள் குடிசைக் கைத்தொழில்களில் அபிவிருத்தி, சமூக பொருளாதார நலக்கட்டமைப்பு, சமூகசேவைகளுக்கான அபிவிருத்தி என்பவற்றுக்கும் மேலாக கிராமமக்கள் மனித வள அபிவிருத்தி என்பவற்றை உள்ளடக்குகின்றது. எனவே கிராம அபிவிருத்தி என்பது பல்வேறுபட்ட தொழில்நுட்ப பொருளாதார கலாசார நிறுவன காரணிகளுக்கிடையிலான இடைத்தொடர்புகளின் விளைவாக அமைகிறது. அபிவிருத்தி எனும் போர்வையில், கிராமிய அபிவிருத்தி என்பது வசதி குறைந்த கிராம மக்களின் சமூக பொருளாதார விடயங்களின் முன்னேற்றத்தில் ஏற்படும் விடயமாக அமைகிறது. கிராமிய அபிவிருத்தி திட்டமிடலில் விவசாயம், சமூகவியல், பொறியியல், முகாமைத்துவ விஞ்ஞானம் போன்ற துறைகளை அடக்கிய ஒரு நெறியாக உள்ளது. இவ்வகையில் Roberts Chambers என்பவர் கிராமிய அபிவிருத்தி என்பது குறிப்பிட்ட மக்கள் தொகுதியின் உபாயம் என்கிறார். குறிப்பாக கிராமிய அபிவிருத்தியின் பயன்களை அனுபவிக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற மக்கள் தொகுதியினுள் அடங்குகின்ற வறியவர்களுக்கு உதவிகளை வழங்கும் ஒரு உபயமாக விளங்குகின்றது. இதனுள் சிற்றுடைமை விவசாயிகள், குடியானவர்கள். நிலமற்றோர் போன்றவர் அடங்குவர். கிராமிய அபிவிருத்தியை வறியமக்களின் வாழ்க்கைத் தரத்தில் நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு செயற்பாடு என வரையறுக்கலாம். எனவே இந்தச் செயற்பாடு பொருளாதார வளர்ச்சி மட்டுமன்றி, மக்களின் நடத்தைகளை, மாற்றியமைப்பதிலும் தொடர்புடையது. எனவே கிராமிய அபிவிருத்திச் செயற்பாடு என்பது திருப்தியற்ற ஒருவாழ்க்கை நிலையிலிருந்து பொருளாதார நிலையிலும், உளரீதியிலும் திருப்தியான சிறந்த ஒரு வாழ்க்கை நிலைக்குக் கொண்டு செல்வதற்கான சமூக ஒழுங்கின் மாற்றத்தை வலியுறுத்துகின்றது. கிராமிய அபிவிருத்திச் செயற்பாட்டை ஓடுகின்ற புகையிரதத்துக்கு ஒப்பிடுவர். ஒவ்வொரு பெட்டிகளும் அதற்கு முன்னால் உள்ள பெட்டிகளைத்தள்ளுகின்றன. அதேவேளை மொத்த பெட்டிகளும் நகர்வதற்கு ஒரு பலமான எஞ்சின் அமைவதைப்போல அதாவது கிராமிய அபிவிருத்தியின் வெற்றிக்கான இரகசியம் பொருத்தமான ஓர் எஞ்சினை அடையாளம் காண்பதாகும். கிராமிய அபிவிருத்திக்கான பொருத்தமான எஞ்சின்களை அடையாளம் காண்பதற்கான விரிவுரைகள் பொதுவாகக் காணப்படுவதில்லை. இது காலம், இடம், கலாசாரம் போன்றவற்றால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றது.

ஒரு சமூகத்தின் அபிவிருத்திப்படிகள் எத்தகைய கலாசாரம், வரலாறு போன்றவறைக் கொண்டிருந்தாலும், உண்மையான கிராமிய அபிவிருத்தி என்பது மூன்று 3 அடிப்படையான விடயங்களை உள்ளடக்குகின்றது.

### வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள்

மனித வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகள் உள்ளன. அவை உலகில் இல்லாவிடின் உயிர் வாழ முடியாது. அத்தகைய அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறையுள், கல்வி, அடிப்படை சுகாதார வசதிகள், வாழ்க்கைக்குரிய பாதுகாப்பு, சொத்துக்குரிய பாதுகாப்பு என்பன அடங்கும். இவற்றுள் ஏதாவது ஒன்று அல்லது பலதும் இல்லாதுவிடின் அல்லது குறைவாகக்காணப்படின், அந்தநிலையை முழுமையான அபிவிருத்தி இன்மை எனக் குறிப்பிடலாம். ஆகவே எந்தவொரு பொருளாதாரமும் ஒவ்வொருவருக்கான அடிப்படைத் தேவைகளை வழங்குவது மிகப் பொறுப்புடைய விடயமாகும். பொருளாதார அமைப்பிலோ சோஷலிஸ அமைப்பிலோ கலப்புப் பொருளாதாரமாக இருப்பினும், அடிப்படைத் தேவைகளை வழங்குவது அவசியம். இந்தவகையில் பொருளாதார வளர்ச்சி வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான அடிப்படையானதொரு நிபந்தனையாக உள்ளது. குறிப்பாக கிராமிய அபிவிருத்தியை முன்னெடுப்பதற்குப் பொருளாதார வளர்ச்சி அவசியமாகும்.

### சுயமரியாதை

ஒவ்வொரு மனிதனும் சுயகௌரவத்தைப் பெற முயற்சிப்பதைக் காணலாம். மேற்படி சுயகௌரவம், மதிப்பு இல்லாதிருந்தால் அல்லது மறுக்கப்பட்டிருந்தால் அதுவும் அபிவிருத்தி இன்மையையே காண்பிக்கின்றது.

### சுதந்திரம்

சுதந்திரம் என்ற அடிப்படையில் இது அரசியல் தத்துவார்ந்த சுதந்திரம், பொருளாதார சுதந்திரம், சமூக அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. ஒரு சமூகம் எவ்வளவு காலம் ஒரு தனி மனிதனின் கீழ் , மூடநம்பிக்கைகள் புறக்கணிப்புகள் நிறுவனங்களின் கீழ் அடிமைப்பட்டு காணப்படுகிறதோ அந்தச் சமூகம் அபிவிருத்தி இலக்கையும் அடைய முடியாது. இதனை இங்கு அடிமைத்தனம் ஒருவகையிலான அபிவிருத்தி இன்மையே எடுத்தக் காட்டுகிறது.

### கிராமிய அபிவிருத்தியைத் தீர்மானிக்கும் காரணிகள்

கிராமிய அபிவிருத்தியைச் சாதகமாக அல்லது பாதகமாகப் பாதிக்கும் காரணிகள் பல உள்ளன. அத்துடன் பல்வேறு வழிகளில் காலத்துக்குக் காலம் அவற்றின் தாக்கம் வேறுபட்டவை. கிராமிய அபிவிருத்தியின் அளவையும் போகக்கையும் குறிப்பாக பௌதிகவியல் பொருளியல், தொழில்நுட்பவியல், சமூக கலாசார அரசியல் காரணிகள் பாதிக்கின்றன. மேற்படி காரணிகள் எல்லா மட்டங்களிலும் பாதிக்கின்றன. அதாவது ஒருகுடும்பம் அல்லது கிராமம் மாவட்டம் அல்லது மாகாணம் அல்லது நாடுஎன அனைத்துமட்டங்களையும் தாக்குகின்றன. அபிவிருத்தியில் மேற்படி காரணிகளின் தாக்கங்களில் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ காணப்படும். இது அந்தக் காரணிகளைக் கையாளுகின்ற தன்மையைப் பொறுத்துள்ளது. உதாரணமாக: "ஒருநாட்டின் மனித வளங்கள் போதிய போஷாக்கு சுகாதாரப் பராமரிப்பு, கல்வி, தொழிற்பயிற்சி போன்றவை போதியளவு வழங்கப்படுதலில் வளர்ச்சியடைகின்றன. அவ்வாறு வழங்கப்படாவிட்டால் அல்லது மனித வளங்கள் பயன்படுத்தப்படாது விட்டால் இந்த வளங்கள் அபிவிருத்திக்கு ஒரு தடையாகவும் அதிக பழுவை ஏற்படுத்துவதாகவும் காணப்படுகின்றது. மறுவகையில் அந்த வளங்கள் சரியான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுமாயின் அவை அபிவிருத்திக்கு உதவுகின்ற பெறுமதியான சொத்தாகவும் பிரதான காரணிகளாகவும் அமையும்.

மனித வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகள் உள்ளன. அவை உலகில் இல்லா விடின் உயிர் வாழ முடியாது. அத்தகைய அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறையுள், கல்வி, அடிப்படை சுகாதார வசதிகள், வாழ்க்கைக்குரிய பாதுகாப்பு, சொத்துக்குரிய பாதுகாப்பு என்பன அடங்கும். இவற்றுள் ஏதாவது ஒன்று அல்லது பலதும் இல்லாதுவிடின் அல்லது குறைவாகக் காணப்படின், அந்த நிலையை முழுமையான அபிவிருத்தி இன்மை எனக் குறிப்பிடலாம்.

கிராமிய அபிவிருத்தியைத் தீர்மானிக்கின்ற பல்வேறு காரணிகளிலும் வெவ்வேறுபட்ட தாக்கங்களும் அவற்றின் நிலைகள் பற்றிய அறிவும் கிராமிய அபிவிருத்தித் திட்டமிடலாளர்களுக்கு மிகவும் அவசியமாகும். குறிப்பாக அபிவிருத்தி இலக்குகளைச் சிறப்பாக அடைவதற்கு மேற்படி காரணிகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு இந்த அறிவு மிகவும் அவசியமாகும். கிராமிய அபிவிருத்தி என்பது பல நோக்கங்களைக் கொண்ட பண்பைக் கொண்டது. இந்த நிலையில் கிராமிய அபிவிருத்தியின் நிலப்பாடு பல பரிமாணங்களைக் கொண்டது. இத்தகைய பல பரிமாணங்களைக் கொண்ட கிராமிய அபிவிருத்தி தனி ஒரு சுட்டியாகவோ அல்லது குறிகாட்டியாகவோ ஆதாரங்களுடன் காட்ட முடிவது கடினம். அதே நேரம் கிராமிய அபிவிருத்தியின் பண்பினை சரியான முறையில் அளவீடு செய்யாவிட்டால் மேற்படி காரணிகளின் அளவுசார் பாதிப்புகளை நாம் அறிந்து கொள்ள முடியாது.

கிராமிய அபிவிருத்தியை எடுத்துக்காட்டக் கூடிய ஒரு தனிச்சுட்டி இதுவரை முன்வைக்கப்படவில்லை. அவ்வாறு இல்லாத நிலையில் மேற்படி கூறப்பட்டுள்ள பல்வேறு காரணிகளின் பங்களிப்பு அவற்றின் செல்வாக்கு அடிப்படையில் அளவீடு செய்யவேண்டிய தேவை காணப்படுகின்றது.

கிராம அபிவிருத்தி என்பது பல்வேறு காரணிகளின் ஒருவெளியீடு (Out put) ஆகும். இந்த வெளியீட்டில் ஏற்படும் மாற்றம் இயற்கை வளங்கள் தொழில்வளம் மூலதனம், தொழில்நுட்பம், அமைப்புக்கள் ஆகிய செயற்படுகளில் மாற்றங்களில் தங்கியுள்ளது. இதனை கிராமிய அபிவிருத்தியில் தாக்கங்களை ஏற்படுத்தும் காரணிகள் எனவும் எடுத்துக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவனின் நல்ல சிந்தனை



பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்த அந்தச் சிறுவன், சாலை ஓரத்தில் நின்ற அழகான காரைப் பார்த்தான். அதன் அருகே சென்று, அதைத் தொட்டு ரசித்தபடி நின்றான்.

"தம்பி, என்ன செய்கிறாய்?" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அங்கே ஒருவர் நிற்பதைக் கண்டான். அவர் கையில் ஒரு சாவி இருந்தது.

"இந்தக் காரின் அழகை ரசித்துக்கொண்டிருந்தேன்" என்றான் சிறுவன்.

"உனக்கு இதில் சவாரி செய்ய ஆசையா? நீ எங்கே இறங்க வேண்டுமோ, அங்கே இறக்கிவிடுகிறேன்" என்றார் அவர்.

சிறுவன், உற்சாகத்துடன் காரில் ஏறிக்கொண்டான். கொஞ்சத் தூரம் சென்றதும்

"உங்கள் கார் மிகவும் அருமையாக இருக்கிறது. இதன் விலை என்ன?" என்று கேட்டான் சிறுவன்.

"10 லட்சம் ரூபா. ஆனால், இதை நான் வாங்கவில்லை. இது, என் சகோதரன் எனக்குப் பரிசாக அளித்தது" என்றார்.

"ஓ... நீங்கள் கொடுத்து வைத்தவர். உங்கள் சகோதரர் மிகவும் நல்லவர்" என்றான் சிறுவன்.

அதன் பிறகு, சிறுவன் அமைதியாக இருந்தான். அவன் இறங்கவேண்டிய இடம் வந்தது. நன்றி சொல்லிவிட்டு இறங்கினான்.

"ஏன் மௌனமாகிவிட்டாய்? நீ மனதில் என்ன நினைத்தாய் என்பதைச் சொல்லவா? என் சகோதரனைப்போல ஒரு சகோதரன் உனக்கும் வேண்டும் என்றுதானே நினைத்தாய்?" என்று புன்னகையுடன் கேட்டார் அவர்.

அதற்கு அந்தச் சிறுவன், "இல்லை ஐயா, நானும் உங்கள் சகோதரனைப்போல பிறருக்குப் பரிசு அளித்து மகிழும் அளவுக்கு உயர வேண்டும் என நினைத்தேன்" என்றான்.

வியந்துபோன அவர், "நிச்சயம் அந்த நிலைக்கு நீ உயர்வாய்" என வாழ்த்திவிட்டுச் சென்றார்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.



## கலாம் சிந்தனைகள்



- விவேகம் தராத கல்வி பயனற்றது. எனவே, உங்களை நீங்கள் அறிந்து, அதற்கேற்ப உங்களுக்கு நீங்களே வழிகாட்டுங்கள்.
- கற்றல், கற்பனைச் சக்தியை வளர்க்கிறது. கற்பனைச் சக்தி, சிந்திக்கும் திறனைத் தூண்டுகிறது. சிந்தனை, அறிவை வளர்க்கிறது. அறிவு, உன்னை மகான் ஆக்குகிறது.
- உங்களுடைய குறிக்கோளில் வெற்றிபெற வேண்டுமெனில், உங்கள் இலக்கில் சிறிதும் பிசகாமல் குறி வைத்து, அதே சிந்தனையோடு செயல்பட வேண்டும்.
- நீங்கள் எதைக் கற்பனை செய்கிறீர்களோ அதுதான் செயல் வடிவம் பெறும். நீங்கள் எதை நம்புகிறீர்களோ அதைத்தான் சாதிக்க முடியும்.
- வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நிர்ணயிப்பதுதான் பிரச்சினை. பிரச்சினைகள்தான் ஒருவனின் உள்ளார்ந்த துணிச்சலையும் ஞானத்தையும் வெளிப்படுத்துகின்றன.



# வரலாற்றில் இன்றைய தினம்

1456 - வட ஐரோப்பாவின் மிகப் பழைமை வாய்ந்த இரண்டாவது பல்கலைக்கலைக்கழகம் ஜேர்மனியில் ஸ்தாபிக்கப்பட்டது.

1558 - போலந்தில் தபால் சேவை தொடங்கப்பட்டது.

1662 - இங்கிலாந்தின் இரண்டாம் சாள்ஸ் அரசரால், பிரான்ஸுக்கு டன்கேர்க் பகுதி 40,000 பவுண்ஸ்ஸுக்கு விற்கப்பட்டது.

1800 - கரீபியன் கடல் குறாகோ தீவின் கட்டுப்பாட்டை ஒல்லாந்தரிட மிருந்து பிரித்தானியா கைப்பற்றியது.

1917 - முதலாம் உலகப் போரில் ஜேர்மனி மீது முதலாவது தடவையாக பிரிட்டன் குண்டு வீச்சை நடத்தியது.

1933 - அல்பேட் ஐன்ஸ்டீன் நாஸி ஜேர்மனியிலிருந்து தப்பியோடி, அமெரிக்கா சென்றடைந்தார்.

1979 - அன்னை தெரேசாவுக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது.

1992 - அரபு நாடுகளின் உதவி பெற்று முஸ்லிம் படை அமைக்க அஷ்ரப் இரகசிய நடவடிக்கை என முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலக செய்தி ஏஜென்சி ஒன்றுக்குத் தெரிவிப்பு.

1992 - தடுப்புக்காவல் கைதிகளாக ஆறாம் மாடியில் 51 தமிழர்கள் என ஐ.நா.மனித உரிமைகள் குழுவுக்கு மனு.

2001 - பயங்கரவாதத் தாக்குதல் ஒன்றில் உயிரிழந்த முதலாவது இஸ்ரேலிய அமைச்சரானார் சுற்றுலாத் துறையமைச்சர் றெஹவம் ஷீவி.

2007 - தமிழ் மக்களை மன்னாரில் இருந்து அரசு ஷெல் வீச்சு நடத்திப் பலவந்தமாக வெளியேற்றியதாக மூத்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவிப்பு.

2007- இலங்கைக்கு இந்தியா ஆயுத உதவி வழங்கினால் போர் நீடித்துச் செல்லும் என்று அரசு தரப்பு தெரிவிப்பு.

# தீபாவளி



பண்டைய இந்தியாவில் தொடங்கிய இந்துக்களின் பண்டிகை, தீபாவளி. 14 ஆண்டுகள் வனவாசம் முடிந்து அயோத்திக்கு ராமன் திரும்பிய நாள் என்றும், நரகாசுரன் என்ற அசுரனைக் கிருஷ்ணர் அழித்த நாள் என்றும் தீபாவளி பற்றி இந்தியப் புராணங்களில் வெவ்வேறு கருத்துக்கள் உள்ளன. இந்தப் பண்டிகையை, பொற்கோயிலை மையப்படுத்தி சீக்கியர்களும், மகாவீரரை வணங்கும் [illegible] கொண்டாடுகிறார்கள். இந்துக்கள் அதிகம் வசிக்கும் நேபாளம், இலங்கை, மியன்மார், சிங்கப்பூர், மலேசியா, பிஜி தீவுகள் போன்ற நாடுகளில் அரச விடுமுறை அளிக்கப்பட்டு, தீபாவளி கொண்டாடப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில், கூடுதல் முயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

**இடபம்:** திறமையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். லாபம் பன்மடங்கு உயரும். பெண்கள்சந்தோச வாழ்வு நடத்துவர்.

**மிதுனம்:** வெற்றிப் பாதையில் நடைபோடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வியத்தகு வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் பெருகும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கடகம்:** பொது விடயங்களில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம், மந்தகதியில் இயங்கும். லாபம் மிதமாக இருக்கும். பெண்கள், வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். மாணவர்கள் படிப்பில் அக்கறைகொள்வர்.

**சிங்கம்:** திட்டமிட்ட செயல் நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில், லாபம் சுமாராகஇருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்களுக்கு, சகோதரர் வழியில் உதவி கிடைக்கும்.

**கன்னி:** உங்களின் நல்ல குணத்தை பலரும் பாராட்டுவர். தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபாரம் செழிக்க, புதியவாய்ப்பு கிடைக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும்.

**துலாம்:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில், பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருளைவாங்கித் தருவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**விருச்சிகம்:** உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்ததை விட வருமானம் உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப் படலாம்.

**தனுசு:** குடும்பத்தினரின் அன்புகண்டு நெகிழ்வீர்கள். எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் படிப்படியாக உயரும். ஒவ்வாத உணவைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்:** கலகலப்பாகப் பேசி, பிறர்மனத்தை கவர்வீர்கள். கூடுதல்உழைப்பினால், தொழில், வியாபாரத் தில், வளர்ச்சிகாண்பீர்கள். வருமான உயர்வால் ஆடம்பரச் செலவு கூடும். புத்திரர் படிப்பில் முன்னேற தேவையான வழிவகை செய்வீர்கள்.

**கும்பம்:** உங்களின் நற்செயலை, சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப்பணி நிறைவேற தாமதமாகும். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள், தகுதிக்கு மீறி வாக்குறுதி தருவதை தவிர்க்கவும்.


**மீனம்:** சூழ்நிலைஅறிந்துபேசுவதுநல்லது. தொழில், வியாபாரத்தில், லாபம்சுமாராக இருக்கும். பெண்கள்முக்கியசெலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

அம்மா: திப்பு சுல்தான் யாரு?
பையன் : (கொஞ்சம் நேரம் யோசிச்சிட்டு) தெரியாது...
அம்மா: ஒழுங்கா பாடத்து மேல கவனம் வைச்சா தெரியும்
பையன்: சரிம்மா புவனா யாரு??
அம்மா: யாருடா??



பையன்: ஒழுங்கா அப்பா மேல கவனம் வைச்சிருந்தா தெரிஞ்சிருக்கும்.

10 பேர் சேர்ந்து ஒரு கட்டடத்தை 20 நாளில கட்டுறாங்க. அதே கட்டடத்தை 20 பேர் சேர்ந்து கட்டினா, எத்தனை நாள்களில் கட்டுவாங்க?



ஏற்கனவே கட்டின கட்டடத்தை ஏன் சேர் மறுபடியும் கட்டணும்?

"சேர் எதுக்கு என் பையனை அடிக்கிறீங்க?"
"பின்ன என்ன சேர், வெள்ளையர்களை எதிர்த்து உப்பு சத்தியாக்கிரகம் நடந்தது என்று சொன்னால்...



கல் உப்புக்கா, தூள் உப்புக்கா என்று கேட்கிறான். பக்கிப் பயபுள்ளை"

## ஆசியா நெட் தொலைக்காட்சியில் ரஜினியின் கபாலி



ரஜினி நடிப்பில் கடந்த ஜூலை மாதம் திரைக்கு வந்த படம் கபாலி. ரஞ்சித் இயக்கிய இந்தப் படம் உலக அளவில் வெற்றிகரமாக ஓடி, புதிய சாதனை படைத்தது. தமிழில் உருவான கபாலி படம் பல மொழிகளிலும் டப் செய்து வெளியிடப்பட்டபோதும், கேரளாவில் எல்லா தமிழ்ப் படங்களையும் போல தமிழிலேயே வெளியானது. இந்த நிலையில் எதிர்வரும் தீபாவளி தினத்தில் ஆசியா நெட் அலை வரிசையில் கபாலி படம் ஒளிபரப்பாக இருப்பதாக அறிவிக்கப்பட்டு வருகிறது.

மேலும், ஆசியா நெட் டிவி மலையாள அலைவரிசை என்றபோதும், கபாலி படத்தை மலையாள மொழியில் டப்பிங் செய்யாமல் தமிழிலேயே ஒளிபரப்புகிறார்களாம். அந்த வகையில் உலகத் தொலைக் காட்சிகளில் முதன் முறையாக ஆசியா நெட் அலைவரிசையில் தான் ரஜினியின் கபாலி ஒளிபரப்பாகிறதாம். அதன் பிறகுதான் தமிழ் அலை வரிசைகளில் ஒளிபரப்பாக உள்ளதாம்.



**வீட்டுக்கு வந்தவர்:** ஏன் பாப்பா அழுகிறாய்...?
**குழந்தை:** அம்மா அடிச்சுட்டா அங்கிள்...
**வீட்டுக்கு வந்தவர்:** அப்பாக்கிட்ட சொல்லேல்லையா...?
**குழந்தை:** அப்பாவும் அழுது கொண்டிருக்கிறார் அங்கிள்...

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 4 | 9 | | 5 |
| | 1 | | | 9 | | | | |
| | 2 | | 8 | 3 | | | | |
| | 8 | | | | | 3 | | 2 |
| | | 6 | 3 | | 7 | 1 | | |
| 7 | | 1 | | | | | 6 | |
| | | | | 7 | 3 | | 5 | |
| | | | | 8 | | | 9 | |
| 3 | | 4 | 5 | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்களை, இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்ப வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 8 | 4 | 2 | 6 | 7 | 5 | 1 |
| 5 | 7 | 6 | 8 | 1 | 3 | 9 | 2 | 4 |
| 4 | 1 | 2 | 7 | 9 | 5 | 3 | 6 | 8 |
| 7 | 6 | 3 | 2 | 4 | 1 | 8 | 9 | 5 |
| 8 | 4 | 5 | 3 | 6 | 9 | 1 | 7 | 2 |
| 1 | 2 | 9 | 5 | 7 | 8 | 6 | 4 | 3 |
| 6 | 5 | 7 | 1 | 3 | 4 | 2 | 8 | 9 |
| 2 | 8 | 1 | 9 | 5 | 7 | 4 | 3 | 6 |
| 3 | 9 | 4 | 6 | 8 | 2 | 5 | 1 | 7 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறி கட்லட்

### தேவையான பொருள்கள்

கரட், பீன்ஸ், பீட்ரூட், கோவா, முட்டைக்கோவா, பட்டாணி– 2கப்
இஞ்சி, உள்ளி விழுது – தேவையான அளவு
மஞ்சள் தூள் – தேவையான அளவு
சீரகம்–சிறிதளவு
பச்சை மிளகாய்– 2
வெங்காயம்–3
கொத்தமல்லி– 1/4 கப்
கடலைமாவு– 1/4 கப்
கரம் மசாலா– 1/2 தேக்கரண்டி
பெருங்காய தூள்– சிறிதளவு
உப்பு – தேவைக்கு



### செய்முறை

காய்கறிகளை வேக வைத்து ஆறியதும் மசித்துக்கொள்ளவும். வெறும் சட்டியில் கடலைமாவு லேசாக வறுக்கவும் சட்டியில் எண்ணெய் விட்டு பெருங்காயத்தூள், சீரகம், பச்சை மிளகாய், வெங்காயம் வதக்கவும் பின் இஞ்சி உள்ளி விழுதும் அதன் பின் மஞ்சள் தூள், கரம்மசாலா தூள் சேர்த்து வதக்கவும். இப்போது மசித்த காய்கறிகளை சேர்த்து சிறிது நேரம் கிளறவும். கடைசியில் கொத்தமல்லி மற்றும் வடைகளாக தட்டும் கெட்டித்தன்மை வரும் அளவுக்கு கடலைமா தூவி பிசைந்து கொள்ளவும் சிறுசிறு உருண்டைகளாக தட்டி வடைகளாக பொரித்து எடுக்கவும். மரக்கறி கட்லட் தயார்.






வித்தியா

சமான உருவ அமைப்பில் மீன் தொட்டிகள் அறிமுகமாகியுள்ளன. மேசைகளில் அலங்கார பொருளாக வைக்கக்கூடிய இவை, சிறிய மீன்களை வளர்க்க உதவும். இந்த மீன் தொட்டி ஒன்றின் விலை 3 ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து விற்பனை செய்யப்படுகின்றது.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 40 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 60 | 60 | 70 | 40 | 50 | 90 | 35 |
| கரட் | 70 | 100 | 120 | 100 | 80–100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 60 | 60 | 50–60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 120 | 100 | 120 | 140 | 140 | 160 | 100 | 60 |
| பாகல் | 120 | 120 | 140 | 160 | 180 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 80 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 100 | 100 | 80–100 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 | 25–30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 80 | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 60 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 15 | 20 | 30 | 20 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 60 | 60 | 60 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 50 | 50 | 40 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 160 | 120 | 160 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 80 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 30 | 40 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100–110 | 120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 500 | 350 | 300 | 400 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 90 | 120 | 100 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 100 | 80 | 80 | 200 | 80 | 100 |



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | 700 | 700 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | 500 | – |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 500 | 400 | – |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 600 | – | – |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 300 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | 400 | 600 |
| முரல் | 300 | 350 | 300 | 500 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 300 | 250 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | 200 | – |
| ஒரா | 400 | 300 | 300 | – | 300 | 250 | 400 |
| திரளி | 300 | 250 | 100 | 150 | 200 | 150 | 350 |
| நகரை | 250 | 250 | 100 | 250 | 300 | 250 | 400 |
| சூடை | 150 | 130 | 100 | 200 | 100 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 200 | – | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 200 | 300 | 130 |
| மதனம் | 150 | 150 | – | 400 | 300 | 250 | 300 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 100 | 50 | [illegible] |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 200 | 300 | [illegible] |
| வ்ாழை | 100 | 150 | – | 400 | 300 | 250 | – |

# மருத்துவக் குணங்கள் அதிகம் நிறைந்துள்ள வெந்தயம்



☆100 கிராம் வெந்தயத்தை வறுத்து, பொடியாக்கி, 200 கிராம் சர்க்கரை சேர்த்து உண்ண பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் வயிற்று வலி, இடுப்பு வலி நீங்கும். வெந்தயத்தை காயமாக்கி குடித்தாலும் வலி தீரும்.

☆200 கிராம் வெந்தயத்தை பாலில் ஊற வைத்து, மீண்டும் இளநீரில் ஊற வைத்து, உலர்த்தி பொடியாக்கி, கற்கண்டைச் சேர்த்து, காலை உணவுக்குப் பின் ஒரு கரண்டி சாப்பிட்டு சுடுநீர் அல்லது பால் சாப்பிட்டு வர (40 நாள்) உடல் பலம் ஏற்படும். ஆரோக்கியம் பெருகும். தோசைக்கு சேர்க்கும் உளுந்துடன் சிறிதளவு வெந்தயம் சேர்க்க பலம் ஏற்படுவதோடு தோசை நிறமாக இருக்கும்.

☆தேங்காய் எண்ணெய்யில் வெந்தயம், கற்பூரத்தை போட்டு ஊற வைத்து தேய்த்து குளிக்க பேன், பொடுகு ஒழியும். பாலில் ஊற வைத்த வெந்தயத்தை அரைத்து தேய்த்து குளிக்க பேன், பொடுகு தீரும்.

☆வெந்தயம், பாசிப்பயறு இவற்றை இரவு ஊற வைத்து காலையில் அரைத்து உடலில் தேய்த்து குளிக்க கற்றாழை நாற்றம் நீங்கும். இதை தலையில் தேய்த்து குளிக்க முடி உதிராது. கண் குளிர்ச்சி ஏற்படும். தலைச்சூடு நீங்கும். பேன், பொடுகு, அரிப்பு நீங்கும்.

☆வெந்தயத்தை மாவாக்கி, இனிப்பு சேர்த்து களி போல கிளறி உண்டு வந்தால் நோய்கள் நீங்கும். உடல் சூட்டையும் கட்டுப்படுத்தும். மேலும் ஊற வைத்த வெந்தயத்தை அரைத்து பருக்கள் உள்ள இடத்தில் பூச, பரு மறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைமைக்கு...

புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது என அறிய வந்தது.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலான புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதற்கான சட்டவரைவு அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டு தேசிய பாதுகாப்புத் தொடர்பான குழுவின் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள் பல கட்சிகளையும் சேர்ந்தவர்கள்.

புதிய சட்டவரைவில் உள்ள விடயங்கள் தற்போது கசிய ஆரம்பித்துள்ளன. அந்த வரைவில் பயங்கரவாதச் செயல்கள் எவை என பட்டியலிடப்பட்டுள்ளன. சுமார் நான்கு பக்கங்களுக்கு இந்தப் பட்டியல் நீண்டுள்ளது. அது தவிர பட்டியலிடப்பட்டுள்ள பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புபட்ட குற்றங்கள் குறித்தும் மற்றொரு பட்டியல் காணப்படுகின்றது.

பயங்கரவாதத்திற்காக அல்லது அதனோடு தொடர்பு பட்ட குற்றங்களுக்காக இரகசியத் தகவல்களை சட்டத்துக்கு மாறாக பெறுவதும் பயங்கரவாதச் செயல் என்று அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தக் குற்றத்துக்காக ஏழு வருட கடுங்காவல் தண்டனை வழங்கப்படலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதச் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் தமது காவலில் எடுத்து 48 மணித்தியாலங்களுக்குப் பின்னரே அவரது சட்டத்தரணியைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவார் என்றும் சந்தேகநபரிடமிருந்து முதல் வாக்குமூலத்தைப் பொலிஸார் பெறுவதற்கிடையில் சட்டத்தரணியைத் தொடர்பு கொள்ள சந்தேகநபர் அனுமதிக்கப்படமாட்டார் என்றும் புதிய சட்டவரைவு தெரிவிக்கின்றது.

இந்தச் சட்டவரைவின் அடிப்படையில் பயங்கரவாதச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ்மா அதிபர் தனியான புதிய பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவார் என்றும் சொல்லப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகள், விசாரணைகள் அனைத்துக்கும் இந்தப் பிரிவே பொறுப்பாகும். (உ-4)

## ஊழலை...

முயற்சியில் மகிந்த அணி இறங்கியுள்ளது என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியது.

ஜே.வி.பியின் செய்தியாளர் சந்திப்பு அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பரப்புரைச் செயலாளருமான விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ஆட்சியின்போது ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடின. அரச சொத்துகள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டன. ராஜபக்ச குடும்பத்துக்கு இதில் பெரும்பங்குண்டு என்பதை மறந்துவிடமுடியாது.

ஊழல், மோசடிக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற நோக்கத்திலேயே 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8இல் மக்கள் மாற்றத்துக்காக வாக்களித்தனர். மக்கள் எதற்காக ஆணை வழங்கினார்களோ அதை மீறி அரசு செயற்படக்கூடாது. ஆனால் தற்போது வெளிவரும் அறிவிப்புகளைப் பார்க்கும் போது சந்தேகம் எழுகின்றது.

அவன்கார்ட் நிறுவன விவகாரத்தில் இடம்பெற்றுள்ள மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். இந்த விடயத்தில் அரசிலுள்ள சில அமைச்சர்களும் தொடர்புபட்டுள்ளனர். சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவியை வகித்தவருக்கு அந்தப் பதவியிலிருந்து விலக வேண்டிய நிலையேற்பட்டது.

அவன்கார்ட் நிறுவனத்திடம் மாதம் இலட்சக்கணக்கில் சம்பளம் பெற்ற அதிகாரிகளும் இருக்கின்றனர். அவர்கள் பற்றி விசாரணை செய்வது தவறா? சட்டம் யாவருக்கும் சமமாகச் செயற்படவேண்டும். ஆனால் இங்கு நடப்பது என்ன?

குற்றச்செயலுடன் தொடர்புடைய ஒருவர் கைதுசெய்யப்பட்டால் உடனேயே இந்த அரசு இராணுவத்தைக் கைதுசெய்கின்றது என மகிந்த அணி போலித் தேசப்பற்று பேசித் தண்டனைகளிலிருந்து தப்பிக் கொள்ளவும், மோசடிகளை மூடிமறைக்கவும் முயற்சிக்கின்றது. இதைத் தடுத்து நிறுத்தும் வகையிலேயே ஜனாதிபதி செயற்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவர் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை.

அரச பிரதானி என்ற அடிப்படையில் மக்களின் ஆணைக்கு அவர் கட்டுப்பட வேண்டும். ஊழல், மோசடிக்கு எதிரான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். அதற்குரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும்.

தமது குற்றங்களை மூடிமறைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும், கடந்தகால மோசடிகளிலிருந்து தப்பிப்பதற்கு சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் முயற்சிக்கின்றனர். இதனால்தான் சட்டத்தால் வீரியமாகச் செயற்படமுடியாத நிலை உள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு முழு சுதந்திரம் இருக்கவேண்டும். அங்கு நடைபெறும் விசாரணைகள் பற்றி எவருக்கும் அறிவிக்க வேண்டிய அவசியமில்லை.

அதேவேளை பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில்தான் சுயாதீன நிறுவனங்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன. இந்த நிலையில் அதிகாரிகளை உளரீதியாகத் தாக்கி, விசாரணைகளைத் திசைதிருப்பும் வகையில் எவரும் அறிவிப்பு வெளியிடக்கூடாது.

திருடர் கள் அரசுக்குள் இருக்கின்றார்களா அல்லது வெளியில் இருக்கின்றார்களா என் பது முக்கியமில்லை. எங்கிருந்தாலும் திரு டர்கள் திருடர்கள்தான். ஆகவே நீதியை நிலைநாட்டுவதற்குரிய முயற்சியில் துணி கரமாக இறங்கிச் செயற்படுங்கள்.

ஊழல் மோசடி தொடர்பான வழக்குகள் சாதாரண நீதிமன்றத்தில் இடம்பெறுவதால் காலதாமதம் ஏற்படுகின்றன. இதனால் ஏனைய வழக்குகளுக்கும் சிக்கல் ஏற்படுகின்றது. ஆகவே ஊழல் மோசடி சம்பந்தமாக விசாரிக்கத் தனி நீதிமன்றத்தை அமைக்குமாறு தலைமை நீதியரசரிடமும். நீதி அமைச்சரிடமும். அரசிடமும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார் விஜித ஹேரத். (உ-4)

## போர்க்குற்ற...

வருகிறது. தன்னுடைய இந்த நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதற்கு பிரிட்டன் பிரதமர் எடுத்த அரசியல் நிலைப்பாட்டை அமைச் சரவையில் சுட்டிக்காட்டியுள்ளார் மைத்திரிபால. பிரிட்டனின் புதிய பிரதமரான தெரசாமே அண்மையில் விடுத்த ஓர் அறிவிப்பில் ஈராக்கிய மக்கள் சார்புசட்டத்துணிகள் குழு ஒன்றினால் பிரிட்டன் படை வீரர்கள் அவமானப்படுத்தப்படுவதை தடுத்து நிறுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். இது தொடர்பில் வெளியான செய்திகளைச் சுட்டிக்காட்டி அமைச்சரவையில் பேசிய ஜனாதிபதி இது போன்றே இலங்கைப் படையினருக்கு ஆதரவான நிலைப்பாட்டை தானும் எடுக்கவுள்ளார் என்று தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை இலங்கை தொடர்பில் இன்னொரு நிலைப்பாட்டையும் வேறு நாடுகள் தொடர்பில் ஒரு நிலைப்பாட்டை கடைப்பிடிக்கக் கூடாது, போர்க் குற்ற விசாரணைகள் தொடர்பில் ஒரே நிலைப்பாட்டையே நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேன அன்று வலியுறுத்தினார். இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டி உலகத் தலைவர்களுக்குக் கடிதங்களை அனுப்பி வைக்க தான் தயாராக இருக்கிறார் என்றும் அவர் அமைச்சரவையில் தெரிவித்தார்.

தன்னுடைய கருத்துக்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளும்படி அமைச்சரவையில் இருந்த அயலுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீரவிடம் அவர் குறிப்பாகச் சுட்டிக்காட்டினார்.

போர் வெற்றியையும் அதன் பின் ஏற்பட்டுள்ள அமைதியையும் சீர்குலைக்க அனுமதிக்க முடியாது என்றும் அவர் ஆணித்தரமாகத் தெரிவித்தார்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் வெளிநாட்டு நீதிபதிகள் சட்டவாளர்கள் அடங்கிய விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு அதன் ஒரு அனுசரணையாளராகவும் 2015 மார்ச் மாதம் செயற்பட்டிருந்தது இலங்கை. அதன் பின்னர் அத்தகைய ஒரு விசாரணைக்கு மாறான கருத்துக்களை ஜனாதிபதியும் பிரதமரும் பகிரங்கமாகவே வெளியிட்டு வருகின்றனர்.

இந்தப் பின்னணியில் ஜனாதிபதி அமைச்சரவையில் தெரிவித்திருக்கும் கருத்து போர்க்குற்ற விசாரணைகள் இலங்கையில் நடைபெறுவதை சந்தேகத்துக்கு உள்ளாக்கியுள்ளன என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-4)

## தெற்காசியாவில்...

மற்றும் பிம்ஸ்டெக் சமாந்தர மாநாட்டில் கலந்துகொள்வதற்கு அழைப்பு விடுத்ததாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்தார்.

பிரிக்ஸ் மற்றும் பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியா சென் றுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, இந்தியப் பிரதமர் மோடி நேற்றுக் காலை கோவாவிலுள்ள நட்சத்திர விடுதியில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே பிரதமர் மோடி மேற்கண்ட வாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியை மிகவும் உற்சாகமாக வரவேற்ற இந்திய பிரதமர், தமது அழைப்பினையேற்று மாநாட்டின் சமாந்தர சந்திப்பில் கலந்துகொள்வதற்கு வருகை தந்தமையானது தனக்கும் இந்தியாவுக்கும் பெரிய பலமென்றும் மோடி தெரிவித்தார்.

மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அழைப்பு விடுத்தமைக்கு இந்தியப் பிரதமருக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கை மற்றும் இந்தியாவுக்கான நீண்டகால நட்புறவை இது உறுதிப்படுத்துகின்றது எனவும் குறிப்பிட்டார். இலங்கை கடினமான நிலமைகளுக்கு முகம் கொடுக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இந்தியாவின் உதவிகள் இலங்கைக்குக் கிடைத்து வருவதையும் ஜனாதிபதி இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்தார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## சிசு இறப்பு...

22, முல்லைத்தீவு மாவட்டத்தில் 15, கிளிநொச்சி மாவட்டத்தில் 10 சிசுக்களும் இறந்துள்ளன. இதில் யாழ். மாவட்டத்தில் தான் அதிகளவிலான சிசு இறப்பு நிகழ்ந்துள்ளது. அதிலும் பிறவிக்குறைபாட்டு நோயினால்தான் அதிகளவிலான சிசுக்கள் இறந்துள்ளன.

மூச்சுத் திணறல், குழந்தை சீழ்பிடிப்பு, முதிராநிலை மற்றும் வேறு காரணங்களாலும் இந்தச் சிசு இறப்புக்கள் நடைபெறுகின்றன. இந்த வருடத்தில் கடந்த 6 மாத காலப்பகுதிக்குள் சாவகச்சேரியில் 3 குழந்தைகளும், பருத்தித்துறையில் 7 குழந்தைகளும், கரவெட்டியில் 2 குழந்தைகளும், ஊர்காவற்றுறையில் ஒரு குழந்தையும், உடுவிலில் 2 குழந்தைகளும், சண்டிலிப்பாயில் 3 குழந்தைகளும், சங்கானையில் 4 குழந்தைகளும், கோப்பாயில் 3 குழந்தைகளும், நல்லூரில் 4 குழந்தைகளும், யாழ்ப்பாணத்தில் 4 குழந்தைகளும், வேலணையில் 3 குழந்தைகளும் என மொத்தமாக 34 குழந்தைகள் இறந்துள்ளன. பிறவிக் குறைபாட்டினால் மட்டும் 15 குழந்தைகள் இறந்துள்ளன என சுகாதாரப் பணிமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிறக்கும் குழந்தைகளில் 33 பேரில் ஒருவர் பிறவிக் குறைபாடு உடையவராகப் பிறக்கின்றார். இதன் விளைவாக ஒவ்வொரு வருடமும் 3.2 மில்லியன் குழந்தைகள் ஏதோவொரு அங்கவீன குறைபாடு உடையவர்களாக இவ்வுலகில் பிறக்கின்றனர். ஏறத்தாழ அரைவாசிக்கு மேற்பட்ட பிறவிக் குறைபாடுகளுக்கு நிச்சயமான ஒரு காரணத்தை கூற முடியாதுள்ளது. எனினும் சில காரணங்கள் பிறவிக் குறைபாடுகளுக்கு ஏதுவாக அமைகின்றன.

சமூக பொருளாதார காரணிகள் பிறவிக் குறைபாடுகளுக்கு மறைமுகமான காரணமாக அமைகின்றன. ஏறத்தாழ 94 வீதமான கடும் பிறவிக் குறைபாட்டு நோய்கள் பொருளாதார வளங்குன்றிய அல்லது இடைத்தர வளமுள்ள நாடுகளிலேயே நிகழ்கின்றன. இந்த நாடுகளில் பெரும்பாலான [illegible] காணப்படும் ஊட்டச் சத்துக் குறைபாடுகள், பிறவிக் குறைபாட்டை உண்டுபண்ணும் இரசாயனங்களின் தாக்கம் அதிகமாக இருத்தல் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு நோய்க் கிருமிகள் தொற்ற வாய்ப்பு அதிகம் காணப்படல் என்பன இதற்கான காரணங்களாகும்" என்றார் குழந்தை மருத்துவ நிபுணர் சிறி சரவணபவானந்தன்.

தகுந்த பொது சுகாதார தடுப்பு முறைகளை பெண்ணொருவர் கர்ப்பமாக முன்னரும், கர்ப்பகாலத்திலும் பின்பற்றுவதன் மூலம் சில பிறவிக் குறைபாடுகளைத் தவிர்க்கலாம் என்றும் அவர் அறிவுறுத்தினார். (உ-ரி)

## அதிகாரப்...

அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சி யின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு முன்னர், ரணில், மைத்திரி, சந்திரிக்கா மூவரையும் இரண்டு தடவைகள் எங்கள் தலைவர்கள் சந்தித்துப் பேசினர். எழுத்து வடிவில் இதன் போது எங்களுக்குள் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை. எழுத்துவடிவிலான உடன்பாட்டுக்கு அவர்கள் தயாராக இருந்தனர். கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இதன் போது ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார். கடந்த காலங்களில் எழுத்தில் எழுதப்பட்ட ஒப்பந்தங்களே நடைமுறைப்படுத்தப்படாமல் கிழித்தெறியப்பட்டன. புரிந்துணர்வுடன் இந்த விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதில் ஒற்றை ஆட்சி முறைமை இருக்கக் கூடாது என்ற புரிந்துணர்வுடன் தான் ஆட்சிமாற்றத்துக்கு ஆதரவளித்தோம். ஆட்சிமாற்றத்தின் பின்னர் முதல் தடவையாக யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எங்களுடன் எழுத்தில் எழுதப்படாத மனதளவிலான உடன்பாடு இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டினார். பகிரங்கமாகப் பேசினார். சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முற்பட்ட கதைகள் இவை. புதிய அரசமைப்பு தயாரிப்புக்கான நடவடிக்கையும் ஆரம்பமாகி விட்டது.

2016ஆம் ஆண்டுக்குள் தீர்வு எட்டப்படும் என்று கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன், கடந்த ஓகஸ்ட் மாதம் பொதுத் தேர்தலின் போது தெரிவித்திருந்தார். இலங்கை அரசு கடந்த வருடம் ஒக்டோபர் மாதம்தான் புதிய அரசமைப்பு உருவாக்கத்தை அறிவித்தது. அதற்கு முன்னரே எங்களுடைய கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் 2016 இற்குள் தீர்வு என்று தெளிவாகச் சொல்லியிருந்தார். ஒக்டோபர் மாதம் அரசு வாக்குறுதி வழங்கியது அமைவாக, புதிய அரசமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்ற மக்கள் கருத்தறியும் அமர்வு டிசெம்பர் மாதம் ஆரம்பமானது. புதிய அரசமைப்புத் தேவையில்லை, 2016 இற்குள் தீர்வு கிடைக்காது என்றவர்களெல்லாம், அவசர அவசரமாக தீர்வுப் பொதியைத் தயாரித்து மக்கள் கருத்தறியும் குழுவிடம் ஒப்படைத்தனர்.

தீர்வு தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி எங்களுடன் கலந்துரையாடினார். இதன் போது சில விடயங்களைக் குறிப்பிட்டார். ஒரு குறித்த இனத்துக்கோ, மதத்துக்கோ புதிய அரசமைப்பில் முதலிடம் கொடுக்கக் கூடாது. தென்பகுதியில் கூட்டாட்சி என்ற வார்த்தையைச் சொன்னால் பயப்படுகின்றார்கள். வடபகுதியில் ஒற்றையாட்சி என்று சொன்னால் அவர்கள் பயப்படுகின்றார்கள்.

ஒரு நாட்டினுடைய அரசமைப்பு, மக்கள் பார்த்து பயப்படுவதாக இருக்கக் கூடாது. அது நவீனத்துவமானதாக இருக்க வேண்டும் என்று சொன்னார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்காக வழி நடத்தல் குழுவும், ஆறு உப குழுக்களும் அமைக்கப்பட்டன. உப குழுக்கள் தங்கள் பரிந்துரைகளைச் முன்வைத்துள்ளன. அதில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவை இன்னமும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. விரைவில் பகிரங்கப்படுத்தப்படும் - என்றார்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்பட்டது. (வ-5-21-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விசன் கெயார் நடத்திய கனிஷ்ட ஓவியப்போட்டி

சிறுவர்கள் மத்தியில் மகிழ்ச்சியையும், சுய ஆக்கத்திறன் வெளிப்பாட்டையும் வெளிக்கொணரும் வகையில், நாட்டின் முன்னணி கண் பரா்மரிப்பு மற்றும் கேட்டல் குறைபாடு தீர்வுகளை வழங்கும் விசன் கெயார் நிறுவனம், களிப்பான அம்சங்கள் நிறைந்த, விறுவிறுப்பான மற்றும் புத்தாக்கத்திறன் வாய்ந்த ஓவியப்போட்டி ஒன்றை அதன் நவீன வசதிகள் படைத்தத் தலைமையகத்தில் ஏற்பாடு செய்திருந்தது. உலகளாவிய ரீதியில் சிறுவர் தினம் ஒக்டோபர் 1ஆம் திகதி கொண்டாடப்பட்டபோது, இந்தத் தினத்தைக் குறிக்கும் வகையில் இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கிட்ஸ் அன்ட் கலர்ஸ் எனப்பெயரிடப்பட்டிருந்த இந்தக் கனிஷ்ட ஓவியப் போட்டியில், நாடு முழுவதையும் சேர்ந்த 12 வயதுக்குக்குறைந்த நூற்றுக்கணக்கான சிறுவர்கள் பங்குபற்றியிருந்தனர். இறுதிப்போட்டியில் 50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்கள் அனைவருக்கும் அன்பளிப்புகள் வழங்கப்பட்டிருந்ததுடன், பெறுமதி வாய்ந்த சான்றிதழ்கள் மற்றும் சிறந்த ஐந்து ஓவியங்களுக்கானப் பணப்பரிசுகளும் வழங்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வின் முதன்மை அதிதியாக, சௌந்தர்ய கலை பல்கலைக் கழகத்தின் சௌந்தர்ய கலை பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர். எம்.ஆர். பொடிநிலமே பங்கேற்றிருந்தார். மத்தியஸ்தர்கள் குழுவில், ஓவியக் கலைஞரான கல்வி அமைச்சின் – அபிவிருத்தி உதவியாளர் சேனாநந்த இந்திரஜித் மேர்திஸ் மற்றும் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களான தீப்த குமார மற்றும் சத்சர இலங்கசிங்க ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

விசன் கெயார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஜானக பொன்சேகா கருத்துத் தெரிவிக்கையில், சிறுவர்கள் ஓவியங்களில் ஈடுபடுவது என்பது அவர்களுக்கு சிறந்த பயிலும் அனுபவமாக அமைந்துள்ளது. அவர்களுக்கு சுய திறன் வெளிப்பாட்டை மேம்படுத்த உதவியாக அமைந்திருப்பதுடன், நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் முடியும். அத்துடன் மேலும் பல அனுகூலங்களையும் பெற்றுக்கொள்ளலாம். உயர்ந்த மட்ட பங்குபற்றல் மற்றும் ஆர்வத்தைக் கண்டு நாம் வியப்படைந்தோம்–என்றார். (தி)

# நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குகின்றது ஜெய்க்கா



இலங்கை அரசு மற்றும் ஜப்பான் பன்னாட்டுகூட்டாண்மை முகவர் அமைப்பு (JICA) ஆகியன 10,000 மில்லியன் ஜப்பானிய யென் பெறுமதியான (இலங்கை ரூபாயில் 14.45 பில்லியன்) கடன் உடன்படிக்கை யொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த உடன்படிக்கையில் இலங்கை நிதி அமைச்சின் திறை சேரியின் பதில் செயலாளர் சந்திர ஏக்கநாயக்க மற்றும் ஜெய்க்கா அமைப்பின் உப தலைவரான ஹிடெடொசி இரிகாகி ஆகியோர் கைச்சாத்திட்டிருந்தனர். இந்த நிகழ்வு நிதி அமைச்சில் நடைபெற்றது.


அபிவிருத்தி கொள்கை கடன் (தனியார் துறை அபிவிருத்தி, அரசாங்க அபிவிருத்தி மற்றும் துண்டுவிழும் தொகை நிரப்பல்) உலக வங்கியுடன் இணைந்து வழங்கப்படவுள்ளதுடன், இலங்கை அரசாங்கத்தின் கொள்கை மற்றும் நிறுவனசார் மறுசீரமைப்பு செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்குவதுடன், தனியார் துறையின் போட்டிகரத்தன்மை, தடைகளை குறைப்பது, வெளிப்படையான மற்றும் முறையான நிர்வகிக்கக்கூடிய நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்டத்தில் காணப்படும் குறைத் தொகையை நிவர்த்திசெய்ய உதவியாக அமைந்துள்ளது. பொருளாதார மற்றும் துறைசார் போட்டிகரத்தன்மையை மேம்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கைகள் அமைந்துள்ளதுடன்ரூபவ் அதனூடாக இலங்கையின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கும்.

மேலதிக வரி அறவீடுகள் மற்றும் செலவீனங்களை குறைப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், வெளிப்படையான சிக்கனமான வரவு செலவுத்திட்டத்தை முன்வைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கான முயற்சிகளில் தனியார் துறைக்கு முழுமையான வினைத்திறனை எய்துவதற்காக நேரடி வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொடுப்பதில் கவனம் செலுத்துவது போன்றன உள்ளடங்கியுள்ளன.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய கொள்கைள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு பொறுப்பாக செயற்படும். அபிவிருத்தி கொள்கைகள் மற்றும் பன்னாட்டு வியாபார அமைச்சு, நிதி அமைச்சு, நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் பொது ஊடகங்கள் அமைச்சு, [illegible] பணிப்பாளர் நாயகம் திணைக்களம், முதலீட்டு சபை மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியன இதற்காக உதவிகளை வழங்குகின்றன. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்




### தேடல் வசதியை மேம்படுத்தும் கூகுள்

இணையத்தளங்களை தேடித் தருவதில் முன்னணியில் இருக்கும் கூகுள் நிறுவனத்துக்கு போட்டியாக இதுவரை எந்த நிறுவனமும் உருவாகவில்லை.

இதற்குக் காரணம் விரைவான மற்றும் இலகுவான முறையில் தேடுதல் வசதியை அளிப்பதாகும்.

கூகுள் நிறுவனம் தற்போது புதிய மாற்றம் ஒன்றினைக் கொண்டுவரவுள்ளது. அதாவது கைபேசி சாதனங்களிலான தேடுதலில் பல மேம்படுத்தல்களை செய்யவுள்ளது.

கணினிகளைப் பயன்படுத்தி தேடும்போது கிடைக்கப்பெறும் பெறுதிகளை விடவும் அதிகளவான பெறுதிகள் கிடைக்கக்கூடிய வகையில் கைபேசி தேடலை மேம்படுத்தவுள்ளது.

அடுத்து வரும் ஓரிரு மாதங்களுக்குள் அறிமுகம் செய்யப்படவுள்ள இந்த வசதி தொடர்பான மேலதிக தகவல்கள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



### ஓட்டுநர் இல்லாத டிராக்டர்கள்

ஓட்டுநர் இல்லாத டிராக்டர்கள் முதல் முறையாக பிரித்தானியர்களால் உருவாக்கப்பட்டுள்ளன.

எந்த பொருளிடமிருந்தும் ஒரேயொரு அங்குலம் வரை நெருங்கிச் செல்லும் அளவுக்கு மிகத்துல்லியமாக குறித்த டிராக்டர்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அதிகரிக்கும் மக்கள் தொகைக்குத் தேவையான உணவுப்பொருள்களை இருக்கும் நிலத்துக்குள்ளாகவே உருவாக்க வேண்டிய நெருக்கடிக்கு இதுபோன்ற உபகரணங்கள் புதிய தீர்வுகளை உருவாக்கும் என குறித்த டிராக்டரை உருவாக்கியவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

பிரித்தானியாவில் உள்ள எல்லா விவசாயிகளும் இவற்றைப் பயன்படுத்தினால் பிரித்தானியாவில் மட்டும் மேலதிகமாக ஒரு லட்சத்து அறுபதாயிரம் ஏக்கர் நிலத்தை கூடுதலாக விளைநிலங்களாக மாற்றலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## கடைசி...

கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச் சருமான டிலான் பெரேரா தெரிவித்தார். ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, இலங்கை மன்றக் கல்லூரியில் நிகழ்த்திய உரை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையி லேயே, அவர் மேற் கண்டவாறு குறிப் பிட்டார்.

முன்னாள் இராணுவத் தளபதி களை நீதிமன்றத் துக்கு அழைத்து வருவதன் மூலம் தெற்கில் உள்ள இனவாதிகளுக்கு தீனி போடப்படு கின்றது. அவற்றை தவிர்க்குமாறு நாங்கள் கோரு கின்றோம். தெற்கின் இனவாதிகளுக்கு தீனிபோடும் செயற்பாடுகளை அரசு மேற் கொள்ளக் கூடாது. மூளையைப் பாவித்துச் செயற் படவேண் டியது தற்போதைய நிலையில் மிகவும் அவசியமாகும் - என்றார். (உ-5)

## நுரைச்...

மின்மாற்றி இணைப் பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நுரைச் சோலை மின் நிலை யத்தின் மின் விநி யோகத் தில் ஏற்கனவே பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இதனால் சில பகுதி களில் மின் விநியோகம் அடிக் கடி துண்டிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், நுரைச் சோலை அனல் மின் நிலையத்தில் நேற்று வெடிப்பு நிகழ்ந்தது. வெடிப் பினால் தீயும் பரவி யது. இந்த விபத்துக் காரணமாக 900 மெகா வாற்று மின் தட்டுப்பாடு ஏற்படும் என்று இலங்கை மின்சார சபை எச்சரிக்கை விடுத் துள்ளது. (உ-5)

**விற்பனைக்கு**

போட்டோ கொப்பி இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
(2 Side Printing Mechine)
T.P : 077 3302853

**புறொயிலர் கோழிக்குஞ்சு விற்பனைக்கு**

புறொயிலர் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு. விலை 110/=
077 2453673, 077 3404219

**மணமகள் தேவை**

1985.01.07 இல் பிறந்த. 7 இல் செவ்வாய். 62 கிரகபாவம். நட்சத்திரம் - புனர்பூசம் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 077 5856329
076 6299695

## சித்தங்கேணி BARATHY கல்வி நிறுவனத்தின் இதய அஞ்சலி

**பிரபல வணிகக்கல்வி ஆசிரியர் B.S பசில் ஜெனதாஸ்**



05.10.2016 அன்று விபத்துக்குள்ளாகி நேற்றைய தினம் அமரத்துவமடைந்த எங்கள் அன்புக்குரிய சிரேஷ்ட ஆசிரியரே.....

நீங்கள் எழுந்து வருவீர்கள் என்று எதிர்பார்த்த எங்களுக்கு கிடைத்த செய்தி மரணம் தான். உங்கள் சிரித்த முகம் இனிமையான பேச்சு ஆசிரியருடன் மாணவருடன் இருக்கின்ற அன்பு இனி எங்கு காண்போம். கர்த்தரும் தன்னுடன் எடுப்பதற்கு உங்களை விபத்துக்குள்ளாக்கித்தான் எடுக்க வேண்டியிருந்ததோ

சொல்லாமல் கொள்ளாமல் மீண்டும் திரும்ப முடியாத அளவிற்கு உங்கள் உயிரைப் பறித்து விட்டாரோ...

எங்கள் ஆசிரியரே உங்கள் பிரிவு தாங்க முடியாது ஆழ்ந்த துயரடைவதுடன்

நீங்கள் சென்ற இடம் நல்ல இடமாக இருக்க ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

**BARATHY சித்தன்கேணி
பொருளியற் கல்லூரி.
யாழ்ப்பாணம். இணுவில்**

**இயக்குநர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பணியாளர்கள்.**

## மரண அறிவித்தல்

**திருமதி மஞ்சுளா செல்வரத்தினம்**

(உரிமையாளர் சோபிதா ஸ்ரோர்ஸ்-ஆவரங்கால்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 . 06 . 1954 | 16 . 10 . 2016 |

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மஞ்சுளா செல்வரத்தினம்(உரிமையாளர் சோபிதா ஸ்ரோர்ஸ்-ஆவரங்கால்) நேற்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம்-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் ஷர்மிளி, ஷோபிதா, காலஞ்சென்ற தர்ஷிகா மற்றும் அரிபவன், தீவிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும் முரளீஸ்வரன், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் நாதன், விஜயன், ஸ்ரீ, இந்திரன், தயாளன், மல்லிகா,மோகனா, மேனகா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2016) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:
குடும்பத்தினர்
077 3164403**

**சோபிதா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்.**

## இழப்பு

எமது கல்லூரியின் மூத்த வணிகக் கல்வி ஆசிரியர்

**அமரர் பெனடிக்ற் பசில் ஜெனதாஸ்**



அவர்களின் அகால மரணத்தில் துயருறும் குடும்பத்தாருடன் நாமும் பங்கு கொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபத் தையும் தெரிவித்துக் கொள் கின்றோம்.

**உடுவில் மகளிர் கல்லூரி,
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் **திருமதி ஜெயகௌரி ஜெயராஜ்** அவர்களுடைய தந்தையார்

***விசுவப்பிள்ளை செல்லத்தம்பி***

அவர்கள் 15.10.2016 அன்று இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் [illegible] தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

[illegible]
பிரதேச செயலகம்,
வலிகாமம் தெற்கு, உடுவில்

## துயர் பகிர்வு



எமது கல்வி நிலைய ஆசிரியர்

**B.S பசில் ஜெனதாஸ்**

நித்திய ஜீவத்துக்குள் இளைப்பாறிட இறைவனை வேண்டுவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

SHAMROCK ACADEMY
நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் **திருமதி கஜனி லவன்** அவர்களுடைய தந்தையார்

***நாகலிங்கம் தங்கராசா***

அவர்கள் 16.10.2016 அன்று இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவர்களது குடும்பத்திற்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

நலனிபுரி சங்கம்
பிரதேச செயலகம்,
வலிகாமம் தெற்கு, உடுவில்

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டத் திட்டமிடல் செயலக உத்தியோகத்தரும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் பிரத்தியேக உதவியாளராகக் கடமையாற்றுபவருமாகிய **திருமதி ரேவதி பாலேந்திரன்** அவர்களின் பாசமிகு கணவர்

**அமரர் தம்பிராசா பாலேந்திரன்**

14.10.2016 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**திட்டமிடல் பணிப்பாளரும், உத்தியோகத்தர்களும்
மாவட்டதிட்டமிடல் செயலகம், மாவட்டசெயலகம்,
யாழ்ப்பாணம்.** (ஜே.5453) (13.18.17)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் தகவல் தொழில்நுட்ப பாட ஆசிரியை
செல்வி சுஜித்தா கந்தசாமி
அவர்களின் அன்புத் தந்தை

**சுப்பிரமணியம் கந்தசாமி**

13.10.2016 வியாழக்கிழமை இறைபதம் எய்தியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிசங்கம்,
யா/வேலணை மத்திய கல்லூரி.



## கண்ணீர் அஞ்சலி



**பெனடிக் பசில் ஜெனதாஸ் (சுரேஸ்)**

நீண்ட காலம் எம்மோடு
நிலைத்து நின்ற நண்பனே
வேண்டும் உம் உறவன்று நாம்
விரும்பி நிற்கையில்
வேறுலகம் சென்றது ஏனடா
நண்பன் அமரர் பசிலின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

**86/87 Batch
ARTS Faculty
University Of Jaffna**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராசரத்தினம் தெய்வானைப்பிள்ளை**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14.03.1949 | 29.10.2015 |

திதி: அபரபக்க துதியை
(17.10.2016)

அழுத கண்ணீர் காயவில்லை!
அம்மா என்று அழைக்க
நீயுமில்லை
அதற்குள், ஆனதம்மா ஓராண்டு
ஓயவில்லை எம் - குமுறல் ஒப்பாரி வைக்கின்றோம்
உன் பிரிவால் ஒரு தடவை எமக்காக வருவாயா இப்
பூவுலகிற்கு அது வரைக்கும் உன் ஆத்மா சாந்தி பெற
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி. **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### தம்பிராசா பாலேந்திரன் (பாலுமாமா)

மண்ணில் 15.02.1961 — விண்ணில் 14.10.2016

கொம்மந்தறை உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா பாலேந்திரன் (பாலுமாமா) 14.10.2016 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சிவஞானபதி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், ரேவதியின்(பொது முகாமைத்துவ உதவியாளர் , அரச அதிபர் அலுவலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும், இந்திராணி, ஞானேந்திரன், காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் தெய்வராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலேஸ்வரன்(தேசிய வீடமைப்பு அதிகாரசபை, மாங்குளம்),கணேஸ்வரி, ராஜகுலசிங்கம் (ஜேர்மனி), மாலினி, வதனி, சாவித்திரி(சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், பத்மநாதனின் (சுவிஸ்) சகலனும், ரூபராணி, சிவராணி (ஆசிரியர்- கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்) காலஞ்சென்ற இன்பராணி மற்றும் கேதீஸ்வரி, றஜிந்தா (ஜேர்மனி), றஜிந்தன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வசிகரன்(ஜேர்மனி),சசிதரன்,சசிகுமார், பிரபாகர், துளசிகா(மாணவி- யாழ்.இந்து மகளிர்கல்லூரி) ஆகியோரின் சிறிய தந்தையும், மயூரா (சுவிஸ்), டினோஜன் (சுவிஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும், சாரங்கா, சாரங்கன்,அபிராமி, காலஞ்சென்ற பிரமிலா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொம்மந்தறையிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொம்மந்தறை,
உடுப்பிட்டி.
(J/5448) (11,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

### ஆயுதம்....

ஈடுபட்டவர்கள், நகரின் முதன்மை வீதிகளில் மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் சுற்றித்திரிந்தனர். பொது மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் அவர்கள் செயற்பட்டனர். இதனையடுத்து, நகரின் முக்கிய வீதிகளில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். சந்தேகத்துக்கு இடமானவர்களை மறித்து சோதனை நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டனர். (வ-5)

### விபத்தில்...

பெற்று வருகிறார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. கடந்த 5 ஆம் திகதி சாவுவீடு ஒன்றுக்கு அச்சுவேலிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று திரும்பிக் கொண்டிருந்த போது ஆசிரியரும் அவரது மனைவியும் விபத்துக்குள்ளாகினர். பருத்தித்துறையில் இருந்து சென்ற பாரவூர்தி அவர்களை மோதிவிட்டு சுமார் 15 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் சென்று தொலைத்தொடர்புக் கம்பத்துடன் மோதியே நின்றதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவனும் மனைவியும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கணவன் நேற்று உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (வ-4,ரி7)

## மரண அறிவித்தல்



### செல்லையா ஜெகநாதன்

(நாதன் பல்பொருள் விற்பனை நிலையம் - சாவகச்சேரி)

கெற்பேலி மத்தி, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் பெரியமாவடி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா ஜெகநாதன் 15.10.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லையா - காலஞ்சென்ற பாக்கியவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் சுசீலாதேவியின் (யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை) அன்புக் கணவரும் சுகீத்தா(பிரதேச செயலகம் - பூநகரி), சுஜீவன்(சுவிஸ்), சுவர்ணா (மாணவி - களனி பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உஷாகாந்தனின் அன்பு மாமனாரும் தஸ்வினின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற காந்தி(முன்னாள் பணியாளர் - பனை அபிவிருத்திச் சபை) மற்றும் யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(18.10.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியமாவடி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவஞானவதி வயித்திலிங்கம்

(Bon Aunty)(Rtd Officer - Autodrome (Pvt)Ltd)



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானவதி வயித்திலிங்கம் நேற்று (16.10.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் -கனகமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வயித்திலிங்கம் (Sri Lanka Ports Authority) அன்பு மனைவியும் வசந்தி (ஆங்கில விரி வுரை யாளர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), சாந்தி, ஜெயந்தி (ஆங்கில வளவாளர் - வலிகாமம் கல்வி வலயம் மற்றும் ஆங்கில ஆசிரியர் யா/ இராமநாதன் மகளிர் கல்லூரி), உமாசுதன் (ஆங்கில ஆசிரியர்- யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் மீனாவின் (ஆங்கில ஆசிரியர் யா/ மகாஜனக் கல்லூரி), அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான மதுரநாயகம், மனோரஞ்சிதம்,மதியாபரணம், மகேசலிங்கம், மகாலஷ்மி, துரைசிங்கம், மகேஸ்வரன், ராஜராஜேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் உமாசங்கர், மாதுமை ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2016) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"ஞான இல்லம்"
தியேட்டர் ஒழுங்கை,
இணுவில் கிழக்கு ,
சுன்னாகம்.
(68232)(12.18)

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 . 11 . 1956 — மறைவு 29 . 10 . 2015

### தங்கமயில் சிவராசா (சிவம்)

திதி: 17.10.2016

உயிர்த்துளி தந்தென்னை உலகில் கைவீசி
நடக்கவிட்டு அருவமாய் ஆனதென்ன
உள்ளுக்குள் நீர்வற்றி விழிகளிலே நீருமில்லை
நீளும் பயணத்தின் பாதைகளில் காணும் உயிர்களிலே
தவறிவிட்ட தங்கமுகம் தேடுகின்றோம்
ஆண்டொன்று ஆனாலும் ஞாபகத்தின்
குவியல்கள் வலி சுமந்து வாட்டுதெம்மை
தோள்களில் துணிபோட்டு தொட்டிலாய்
மார்புதந்து வாழ்வது சிறக்கவெண்ணி
பாதைகள் வகுத்துத்தந்து நற்பழக்கம் மெருகத்தந்து
ஆழ்கடல் வாழ்வுயர அருட்செல்வக்
கொடையும் தந்து வாழ்வது வென்று நாமும்
விரைந்தோடிக் காணவர
காலனவன் பறித்திட்டான் கண்ணுக்குள் கொதி
எண்ணெய் விட்டான் யார் யாரோ தோன்றினாலும்
உங்கள் ஆராரோ போல் வருமா ஆழ்ந்த
துயர் தீர்ந்திடுமா நிலைகுலைந்து நிற்கின்றோம்
இறைவா. நின் ஆத்மா சாந்தியடையட்டும்

348, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(J/5452)(13,48,57)

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### பொன்மணி இலட்சுமிகாந்தன்

பிறப்பு 25.03.1949 — இறப்பு 17.09.2016

அன்பெனும் குல விளக்காய்
அணையாத தீபமாய் - நின்று
பாசத் தீயில் எம்மை வேக வைத்த
அன்புத் தெய்வமேஎமக்கெல்லாம்
வழிகாட்டியாய் நின்ற நல் ஆசானே!
நூற்றாண்டுகள் போனாலும் இருப்பீர்கள் எம்முள்ளே

நெடுங்குளம் வீதி,
பிள்ளையார் கோயிலடி,
(J/5487)(12.18)

என்றும் உயிர்த்திருக்கும் உங்கள்
நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள், உறவுகள்.

## முதலாம் ஆண்டு நினைவு நாள்



அமரர் நவரட்ணம்

### சிவபாலசிங்கம் (சிவா)

திதி: ஐப்பசி தேய்பிறை துதியை

தோற்றம் 28.04.1961 — மறைவு 29.10.2015

அன்பின் திருவுருவே பாசத்தின் பிறப்பிடமே
ஆண்டுகள் ஒன்று ஆனதோ
அன்புத் தெய்வமே உம்மைப் பிரிந்து - கண்முன்னே
உங்கள் உருவம் கண்ணீரில் கரைகிறது
பாசத்தின் பொருளாய் இருந்து எமை
வழி நடத்திய தெய்வத்தின் தெய்வமே
எத்தனை வருடங்களானாலும் உங்களை மறவோம்
உங்கள் நினைவுகள் வரும் போதெல்லாம்
எம் கண்கள் சிந்தும் கண்ணீரே
உங்களுக்கான எம் காணிக்கை

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.
(04/1987) (10,17,18)

மனைவி - ஜெகதீஸ்வரி

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 4931111

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திரு.பூதத்தம்பி யோகநாதன்

( Director of Customs - சுங்கப்பணிப்பாளர் )

அன்னை மடியில் : 14.10.1953
இறைவனடியில் : 17.10.2011

அண்ணா ! எங்கிருந்து நீ பாடுகின்றாயோ
இன்ப கீதமே பாடுகின்றாயோ
இந்த நிலை என்று மாறுமோ அண்ணா
உனை காணும் இன்ப நாளுமே வந்து சேருமோ
அண்ணா உன்னையும் மறப்பதுண்டோ மறந்தால்
உள்ளத்தில் அமைதி உண்டோ
அண்ணா உன்னையும் மறப்பதுண்டோ

அன்னாரின் பிரிவால் துயருறும் தம்பிமார்.
பூ.மகேந்திரநாதன் - கொழும்பு - 03
பூ.இரகுநாதன் - கொழும்பு - 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய
தீபாவளித் திருநாளை
முன்னிட்டு

திருமண பட்டுப்
புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

# மாபெரும் மெகா சேல்

# இந்தியன் பஜார்

உங்களுக்குத் தேவையான
திருமணப் பட்டுப்புடைவைகள், கொட்டன் சல்வார்கள்,
நெற் சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் சிறுவர் சிறுமியருக்கான
ஆடைத் தெரிவுகளை மாபெரும் விலைத் தள்ளுபடியில்
பெற்றுக் கொள்ளலாம்.



**இடம்**
**யாழ். வீரசிங்கம் மண்டபம்**
**காலம்**
**05.10.2016 முதல் 30.10.2016 வரை**

**சல்வார் துணிகள்**

| | | |
|---|---|---|
| ❖1 டொப் சல்வார் துணி (கொட்டன்) | ~~1000/=~~ | 750/= |
| ❖2 டொப் சல்வார் துணி (சில்க்) | ~~1250/=~~ | 1000/= |
| ❖3 டொப் சல்வார் துணி (சில்க்) | ~~1750/=~~ | 1500/= |

யாழ். மாவட்ட வாடிக்கையாளர்களின் நலன்கருதி
**எதிர்வரும் 21.10.2016 வெள்ளிக்கிழமை பி.ப 4.30 இற்கு**
**இல.80, கஸ்தூரியார் வீதி,**
**மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி**
**முதலாம் மாடியில்**
**திருமண பட்டுப்புடைவைகளின் பூங்காவனம்**
**"இந்தியன் செலக்ஷனின்" புதிய காட்சியறை**
**திறந்து வைக்கப்படவுள்ளது**
என்பதை அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

சகல வாடிக்கையாளர்களையும்
கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி
இந்தியன் செலக்ஷன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரெழு றோயல் இறுதியில்


கரணவாய், ஒக். 16
விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் தொடரில் ஊரெழு றோயல் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
விக்னேஸ்வராவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த அரையிறுதியாட்டம் நடைபெற்றது. கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் பலப் பரீட்சை நடத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியும் கோல்கள் இல்லாமல் நகர்ந்துகொண்டிருந்தது. 41 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பை கச்சிதமாகப் பயன்படுத்தி முதல் கோலைப் பதிவுசெய்தார் றோயலின் நிதர்சன். வேறெந்த மாற்றங்களும் ஏற்படாத நிலையில் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ஊரெழு றோயல். (ம-108)

## ஜப்பானை வீழ்த்தியது ஈரான்

உலகக்கிண்ண கபடித் தொடரில் ஜப்பானை வீழ்த்தி, அரையிறுதிக்குத் தகுதி பெற்றது ஈரான். அகமதாபாத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'பி' பிரிவு ஆட்டத்தில் ஈரான் அணியை எதிர்த்து, ஜப்பான் மோதியது. 38:34 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஈரான் வெற்றிபெற்றது. இந்த வெற்றி ஈரான் அணிக்கு நான்காவது தொடர் வெற்றியாகும். இதன்மூலம் அந்த அணி அரையிறுதிக்குத் தகுதிபெறுவதை உறுதிசெய்தது. (ம)

## இரணைதீவு வி.கழக கால்பந்தாட்ட முடிவு

கிளிநொச்சி, ஒக். 17
கிளிநொச்சி இரணைதீவு இரணைமாதா நகர் புனித செபமாலை மாதா திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்.
இரணைதீவு வி.கழக மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பூநகரி ஐயனார் அணியை எதிர்த்து முழங்காவில் விநாயகர் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல்கள் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் முழங்காவில் விநாயகர் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் அணியை எதிர்த்து பாலக்குழி ஐக்கியம் டிலாசால் அணி மோதியது. இதில் ஐக்கியம் டிலாசால் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மூன்றாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் இரணைமாதா நகர் அணியை எதிர்த்து இலுப்பைக்கடவை குழந்தையேசு அணி மோதியது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் பெற்றிபெற்றது குழந்தையேசு அணி.
தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் வேரவில் கலைமகள் அணியை எதிர்த்து மன்னார் விடத்தல்தீவு ஐக்கியம் அணி மோதியது. இதில் விடத்தல்தீவு ஐக்கியம் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-422)



## சமநிலையை நோக்கி நகர்த்த மே.தீவுகள் பெரும் போராட்டம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றுமுன்தின மூன்றாம் நாள் நிலவரத்தின்படி ஆட்டம் சமநிலையை நோக்கி நகரும் வாய்ப்பு உள்ளதாகக் கருதப்படுகிறது.
இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் பகலிரவு டெஸ்ட் ஆட்டமாக கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 579-3 என்ற நிலையில் இருந்தபோது, ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக அசார் அலி 302 ஓட்டங்களையும், அஸ்லாம் 90 ஓட்டங்களையும், அசாம் 69 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக பிஸ்கூ 2 இலக்குகளையும், சேஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய தீவுகள் இரண்டாம் நாள் முடிவில் 69-1என்ற நிலையிலிருந்தது. பிரீத்வைட் 32 ஓட்டங்களுடனும், பிராவோ 14 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். ஆட்டம் ஆரம்பித்து ஒரு சில நிமிடங்களிலேயே யாசிரால் போல்ட் செய்யப்பட்டார் பிரீத்வைட். பிராவோ, சாமுவேல்ஸ் இணை நீண்ட இணைப்பாட்டத்தை அரங்கேற்றியது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். ஆட்டத்தை சமநிலைப்படுத்த வேண்டும் என்ற முனைப்பில் தீவிரம் காட்டினார் பிராவோ. இணைப்பாட்டமாக 113 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் சாமுவேல்ஸ் ஆட்டமிழந்தார். பிளக்வூட்டை வீழ்த்தினார் ரியாஸ். நீண்ட போராட்டத்தின் பின்னர் பிராவோ ஆட்டமிழந்தார். அவர் 13 ஓட்டங்களால் சதத்தைத் தவறவிட்டார். 258 பந்துகளை எதிர்கொண்டிருந்தார். மூன்றாம் நாள் முடிவில் 315-6 என்ற நிலையில் தீவுகள் இருந்தது. டவ்ரிச் 27 ஓட்டங்களுடனும், கோல்டர் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)

## 1500 மீ. ஓட்டத்தில் அடம்பன் மத்திக்கு நான்காவது இடம்

யாழ்ப்பாணம், ஒக். 17
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 1500 மீற்றர் ஓட்டத்தில் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்துக்கு வர்ணச் சான்றிதழுடன் நான்காவது இடம் கிடைத்தது.
கண்டி போகம்பர விளையாட்டரங்கில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த மேரி ஜென்சி 5.06 நிமிடங்களில் ஓடி முடித்து நான்காமிடத்தையும் வர்ணச்சான்றிதழையும் பெற்றார். (ம-422)




## கனகராயன்குளம் ம.வித்திக்குவெள்ளி

யாழ்ப்பாணம், ஒக். 17
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு குண்டு போடுதலில் வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்துக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.
கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான குண்டு போடுதல் நேற்று நடைபெற்றது. வவுனியா கனகராயன் குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த நாகராசா ரிசாந்தினி 9.76 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.



குறித்த பாடசாலையின் 93 ஆண்டு கால வரலாற்றில் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் கிடைத்த முதலாவது பதக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-422)

## சென்றலைட்ஸ் சொக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 17
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய பொன்.விபுலனாந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் சென்றலைட்ஸ் சொக்ஸ் சம்பியனானது.
யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில், சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா 16 புள்ளிகளைப் பெற்றிருந்தன. இரண்டாம் பாதியில் ஆதிக்கம் செலுத்திய சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி முடிவில் 37:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.
ஆட்டநாயகனாக சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியின் சசிந்திரனும் தொடராட்ட நாயகனாக கே.கே.எஸ். அணியின் சிம்றோனும் தெரிவாகினர். (ம-23)




## தென் கொரியா அணி அரையிறுதிக்குத் தகுதி

உலகக் கிண்ண கபடித் தொடரில் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது தென்கொரியா. அகமதாபாத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் தென்கொரியாவை எதிர்த்து ஆஸ்திரேலியா மோதியது. இதில் தென்கொரியா அணி 63:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. இந்த வெற்றியுடன் சேர்த்து அந்த அணி தான் எதிர்கொண்ட நான்கு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ளது. இதனால் அந்த அணி எந்த விதத் தடையுமின்றி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட தடகளத்தில் இன்றைய போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 17
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடர் கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் கடந்த 13ஆம் திகதி ஆரம்பமானது. தொடரின் இறுதி நாளான இன்றும் சில போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதன்படி, 17, 19, 21 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான 400 மீற்றர் சட்டவேலி, 19, 21 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான 5000 மீற்றர், 15, 17, 19, 21 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான 200 மீற்றர் ஓட்டம், 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதல், 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் 17, 19, 21 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான 800 மீற்றர் ஓட்டம், 15, 17, 19, 21 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான 4 நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் ஆகிய போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன. (ம-422)



# ஆர்ஜென்ரீனாவை இலகுவாக வீழ்த்தியது நடப்புச் சம்பியன்

கபடி உலகக்கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் நடப்புச் சம்பியனான இந்தியா அபார வெற்றி பெற்றது.

மூன்றாவது கபடி உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெற்று வருகிறது. நடப்புச் சம்பியன் அந்தஸ்துடன் களமிறங்கி விளையாடிவரும் இந்தியா, நேற்றுமுன்தினம் தனது லீக் ஆட்டமொன்றில் ஆர்ஜென்ரீனாவை எதிர்கொண்டது. 74:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் இந்தியா அபார வெற்றிபெற்றது.

இந்த வெற்றி இந்திய அணியின் மூன்றாவது வெற்றியாகும். அந்த அணி ஏற்கனவே ஆஸ்திரேலியா, பங்களாதேஷ் அணிகளை வென்றிருந்தது. தென் கொரியாவிடம் தோற்றது. இதனால் 4 ஆட்டத்தில் 3 வெற்றி, ஒரு தோல்வியுடன் 16 புள்ளிகள் பெற்று 'ஏ' பிரிவில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்திய அணி, தனது கடைசி 'லீக்' ஆட்டத்தில் இங்கிலாந்தை நாளை எதிர்கொள்கிறது. (ம)

# கோக்லியின் அறிவுரையை கருத்தில் கொள்ளுகிறேன்

## டோனி தெரிவிப்பு

இந்திய டெஸ்ட் அணித் தலைவர் கோக்லியின் அறிவுரையை தற்போது களத்தில் அதிகம் பயன்படுத்த ஆரம்பித்துள்ளேன் என இந்திய அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களின் தலைவர் டோனி தெரிவித்தார்.

இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கு முன்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே டோனி இவ்வாறு தெரிவித்தார்.

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களிலும் கோக்லியின் கருத்துக்களும் ஆலோசனைகளும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஆட்டங்களை நேரிலோ அல்லது நேரலையிலோ பார்த்தால் நீங்கள் அதை அவதானித்திருப்பீர்கள். சில முக்கிய சந்தப்பங்களில் கோக்லியின் ஆலோசனைகள் அணிக்கு இன்றியமையாதவையாக அமைந்துள்ளன. மேலும், இந்திய அணியில் எனது பொறுப்பு கூடியிருப்பதாகவே நான் நினைக்கிறேன். வருங்கால இந்திய அணிக்கு ஆலோசனை வழங்கும் முக்கிய கடமை எனக்கு உள்ளது. இளம் வீரர்களுடன் உரையாடும்போதுதான் வருங்கால இந்திய அணிக்கு வேண்டிய வீரரைக் கண்டறிய முடியும் என டோனி மேலும் தெரிவித்தார். (ம)





# இறுதியில் ஆண்டி முர்ரே

ஷாங்காய் ரென்னிஸ் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் பிரிட்டன் வீரர் ஆண்டி முர்ரே.

சீன ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஷாங்காய் ரென்னிஸ் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டமொன்றில் ஒலிம்பிக் சம்பியனான அன்டி முர்ரேயை எதிர்த்து பிரான்ஸின் சிமொன் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 6:4, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் வெற்றியுடன் முர்ரே இறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

# மீண்டும் களத்தில் மெஸ்ஸி பார்சிலோனா அபார ஆட்டம்

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா அபார வெற்றிபெற்றது.

பார்சிலோனாவை எதிர்த்து டிப்போர்டிவோ அணி மோதியது. காயம் காரணமாக கடந்த மூன்று வாரங்களாக ஓய்விலிருந்த மெஸ்ஸி மீண்டும் அணிக்குத் திரும்பியிருந்தார். சுவாரஸும் அணியில் இடம்பிடித்திருந்தார். இவர்களது வருகையால் பார்சிலோனா பலம்பெற்றது.

ஆட்டத்தில் 21 ஆவது, 36 ஆவது நிமிடங்களில் ரபின்கா கோல்களைப் பதிவு செய்து பார்சிலோனாவைப் பலப்படுத்தினார். முதல் பாதி முடியும் தருவாயில் சுவாரஸ கோலொன்றைப் பதிவு செய்தார். 3:0 என்ற பார்சிலோனாவின் பலமான ஆதிக்கத்தடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இவற்றில் இரு கோல்கள் மெஸ்ஸியின் சிறப்பான பந்துப் பரிமாற்றத்தாலேயே சாத்தியமாகின.

இரண்டாம் பாதியின் 58 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி, பார்சிலோனாவின் நான்காவது கோலைப் பதிவுசெய்தார். இறுதிவரை டிப்போர்டிவோவால் பதிலடி கொடுக்க இயலவில்லை. முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)



# ஜோகோவிக் அதிர்ச்சித் தோல்வி

ஷாங்காய் ரென்னிஸ் தொடரிலிருந்து அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேற்றப்பட்டார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் நிலை வீரரான ஜோகோவிக்.

சீனாவின் மிகமுக்கியமான ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஷாங்காய் ரென்னிஸ் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பன்னாட்டு தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரரான சேர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்த்து 19 ஆவது இடத்திலிருக்கும் ஸ்பெய்ன் வீரர் பாடிஸ்டா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார் பாடிஸ்டா. இதனால் அடுத்த இரு செற்களையும் கைப்பற்றினால் மட்டுமே ஜோகோவிக்கால் இறுதிக்குத் தகுதிபெற முடியும் என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் அவர் இரண்டாவது செற்றையும் 4:6 என்ற அடிப்படையில் இழந்து அரையிறுதியுடன் வெளியேறினார். (ம)

# கபடியில் இன்றைய மோதல்கள்

கபடி உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெற்ற வருகிறது. இன்று இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன. இதன்படி இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் போலந்தை எதிர்த்து ஈரானும், இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை எதிர்த்து பங்களாதேஷம் மோதவுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரணிக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 17
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு நீளம் பாய்தலில் உடுப்பிட்டி மகளிருக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ். ஆரணி 5.26 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-108-422)





# தேசியமட்ட கோலூன்றிப் பாய்தலில் வழித்துத் துடைத்தது வடமாகாணம்

யாழ்ப்பாணம், ஒக். 17
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வடக்கு மாகாணம் அத்தனை பதக்கங்களையும் வழித்துத் துடைத்தது.

கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அ.புவிதரன் 3.80 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தையும், அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த ர.யதுர்சன் 3.60 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்துடன் வர்ணச் சான்றிதழையும், உ.சுலக்ஸன் 3.50 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்துடன் வர்ணச் சான்றிதழையும், ம.கயவரன் வர்ணச் சான்றிதழுடன் ஐந்தாம் இடத்தையும் கைப்பற்றினார்கள். (ம-108-422)

## நியூசிக்கு எதிராக இந்தியா பதற்றம் இல்லாத வெற்றி

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் இந்திய அணி பதற்றம் இல்லாத வெற்றியைப் பதிவுசெய்தது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் தர்மசாலாவில் நேற்று நடைபெற்றது. இந்திய அணிக்கு இது 900ஆவது ஆட்டமாகும். இதனால் அந்த அணி சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணியின் தலைவர் டோனி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார். ஆரம்ப வீரரான லாதம் ஒரு முனையில் நிலைத்துநிற்க மறுமுனையில் நியூசிலாந்து அதன் தலைமைத் துடுப்பாட்ட வீரர்களை இழந்து தவித்தது. குப்தில் 12, வில்லியம்சன் 3, ரெய்லர் ஓட்டமெதனையும் பெறாத நிலை, அண்டர்சன் 4, ரோஞ்சி, சான்நெர் இருவரும் ஓட்டமெதனையும் பெறாத நிலை என அடுத்தடுத்து பவிலியன் திரும்பினர். 106 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்தது நியூசிலாந்து. சவுத்தி, லாதத்துடன் இணைந்து சிறிது தாக்குப்பிடித்தார். இணைப்பாட்டமாக 71 ஓட்டங்கள் பகிரப்பட்டன. இருவரும் அரைச்சதம் கடந்தனர். 55 ஓட்டங்களுடன் சவுத்தி ஆட்டமிழக்க 190 ஓட்டங்களுடன் சுருண்டது நியூசிலாந்து. லாதம் இறுதிவரை ஆட்டமிழக்காது 79 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் பாண்டியா, மிஸ்ரா இருவரும் தலா 3 இலக்குகளையும், கேசர் யாதேவ், உமேஸ் யாதேவ் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்தியாவுக்கு ஆரம்ப வீரர்களாக ரகானே, ரோகித் இணை, இணைப்பாட்டமாக 49 ஓட்டங்களைப் பகிர்ந்து பலம் சேர்த்தது. சில இலக்குச் சரிவுகள் ஏற்பட்ட போதிலும் கோக்லியின் தனித்துவமான ஆட்டத்தால் 101 பந்துகள் மீதமிருக்க இலக்கை அடைந்து இந்தியா பதட்டமில்லாத வெற்றியைப் பதிவுசெய்தது. 85 ஓட்டங்களுடன் கோக்லி ஆட்டமிழக்காதிருந்தார். (ம)



## ஈட்டி எறிதலிலும் சாதித்தார் அனித்தா



யாழ்ப்பாணம், ஒக். 17
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடரில் ஈட்டி எறிதலிலும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார் மகாஜனக் கல்லூரி வீராங்கனை ஜெ.அனித்தா.

கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் மகாஜனக் கல்லூரியின் சார்பாகக் களமிறங்கிய ஜெ. அனித்தா 31 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இவர் கோலூன்றிப் பாய்தலில் சாதனையுடன் தங்கப் பதக்கத்தையும், 100 மீற்றர் சட்ட வேலி ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியமைகுறிப்பிடத்தக்கது.(ம-422)

## ஆறாவது இடத்தில் வடக்கு மாகாணம்

யாழ்ப்பாணம், ஒக்.17
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடரில் நேற்று மதியம் வரையிலான தரப்படுத்தலில் வடக்கு மாகாணம் ஆறாமிடத்திலிருந்தது.

கடந்த 13ஆம் திகதி தொடர் ஆரம்பித்து கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இன்று இறுதிநாள். நேற்று மதியம் வரையிலான தரப்படுத்தலின்படி 596 புள்ளிகளைப் பெற்று மேல் மாகாணம் முதலாமிடத்திலும், 275 புள்ளிகளைப் பெற்று மத்திய மாகாணம் இரண்டாமிடத்திலும், 210 புள்ளிகளைப் பெற்று சப்பிரகமுவா மாகாணம் மூறாமிடத்திலும், 207 புள்ளிகளைப் பெற்று வடமேல் மாகாணம் நான்காமிடத்திலும் 194 புள்ளிகளைப் பெற்று தென்மாகாணம் ஐந்தாமிடத்திலும் 83 புள்ளிகளைப் பெற்று வடமாகாணம் ஆறாமிடத்திலும் ஊவா மாகாணம் 53.5 புள்ளிகளைப் பெற்று ஏழாமிடத்திலும் 32.5 புள்ளிகளைப் பெற்று வடமத்திய மாகாணம் எட்டாமிடத்திலும் 27 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாணம் ஒன்பதாவது இடத்திலும் உள்ளன. (ம-108-422)

## ஹாட்லிக்கு வர்ணச் சான்றிதழ்

யாழ்ப்பாணம், ஒக்.17
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு வர்ணச்சான்றிதழ்கள் கிடைத்தன.



போகம்பர விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் நேற்று நடைபெற்றது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் சார்பாகக் களமிறங்கிய பி.ஜெனார்த்தனன் 41.77 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் நான்காம் இடத்தையும், பிரகாஸ்ராஜ் 40.10 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் ஏழாமிடத்தையும் பெற்றனர். (ம-422)

ஒன்று கூடுக
வணிகக்கல்வி ஆசிரியர் அமரர் B.S.பசில் ஆசிரியரின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்வதற்கு மாணவர்கள் ஆரியகுளம் வைரவகோவிலில் (ஸ்ரான்லி வீதி) பிற்பகல் 2.30 மணிக்கு ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.
ஏற்பாட்டாளர்கள்.

ஆங்கிலம் 3 மாத பயிற்சி நெறி
3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேச...
இம்முறை A/L எழுதியோர், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர், இளைஞர் யுவதிகள் இணையமுடியும்!
சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 22.10.2016
பிரிவு1.காலை 08-10 பிரிவு 3.மாலை 01-03
பிரிவு2.காலை 10-12 பிரிவு 4. மாலை 03-05
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!
பாடப்புத்தகங்கள் Video DVD என்பன இலவசம்.
பயிற்சிநெறி முடிவில் "Diploma Certificate"
SAAMSON Expert in Language Training
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 1570 486
021 320 3313

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.